கிராமநலம்

ஜனவரி '65

முன்னேற்றப் பாதையில் ..... 15 ஆண்டுகள்



இயற்கையின் சீற்றம் - அரசாங்கத்தின் அவசர உதவி



இராமநாதபுரம் மாவட்டத்தைச் சார்ந்த ராமேசுவரம், தனுஷ்கோடி, பரமக்குடி பகுதிகளில் அண்மையில் வீசிய பயங்கரப் புயல் , கடல் கொந்தளிப்பின் விளைவாக, வாழ்விழந்து அவதியுறும் மக்களைப் பாதுகாப்பான இடங்களுக்குக் கொண்டு சென்று, புனர் வாழ்வு அளிப்பதற்கான நடவடிக்கைகள் துரிதமாக நடைபெறுகின்றன.

கிராம நலம்

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே;
நன்றிது தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தால், பின் நமக்கெது வேண்டும்?"

—பாரதியார்.

மாடி 10 | ஜனவரி 1965 | படி 4

வேதனை மிக்க சோதனை

காற்று, தண்ணீர் ஆகியவை மனித வாழ்வுக்கு இன்றியமையாதன. இவ்வியற்கைக் கூறுகள், நாம் விரும்புகிறபடி, ஒரே சீராக எப்போதும் இருப்பதில்லை. இடத்திற்கு இடம், காலத்திற்குக் காலம், அவை மாறுபடுகின்றன. எனவே, மனிதனும், அதற்கேற்ப தன் வாழ்வு முறைகளை அமைத்துக்கொள்கிறான். எனினும், வழக்கமான நிலைமைகள்கூட, சில சமயம் மாறுகின்றன. சிறு மாற்றங்களை, மனிதசக்தி சில சமயம் சமாளித்து விடுகிறது. ஆனால், மாற்றங்கள் மிகப் பெரிதாய் அளவு மீறிச் செல்லும்போது, அதிலும் எதிர்பாராத முறையில் திடீரெனத் தோன்றும்போது, மனிதன் தன் சக்தி இழந்து நிற்கிறான். இயற்கையின் சோதனைக்கு அவன் உள்ளாக நேரிடுகிறது.

வாழ்விழந்தோருக்குப் புது வாழ்வு

அத்தகையதொரு பயங்கர சோதனைதான், தனுஷ்கோடி—இராமேசுவரம் பகுதியிலும், இராமநாதபுரம் மாவட்டத்தின் வேறு சில பகுதிகளிலும அண்மையில் நிகழ்ந்துவிட்டது. இயற்கையின் சீற்றம் பல உயிர்களைப் பலிகொண்டு விட்டது. எளிதில் மறக்கத்தக்க துயரமல்ல இது நடக்கக்கூடாத ஒன்று நடந்துவிட்டது. ஆனால் அதைப்பற்றியே ஏங்கிப் பயனில்லை. இனி, வாழ்விழந்த மக்களுக்கு, சிதைவுற்ற குடும்பங்களுக்குப் புது வாழ்வு அளித்தாகவேண்டும். எனவே அதற்கான பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன. பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக உணவும் இருப்பிடமும் வழங்கப்பட்டு, மேற்கொண்டு நிவாரணமளிக்கும் ஏற்பாடுகளும் வேகமாக நடைபெற்று வருகின்றன. மத்திய மாநில அமைச்சர்களும், உயர்தர அதிகாரிகளும் அங்கே நேரில் சென்று ஆவன செய்து வந்துள்ளனர். நாடெங்கிலுமிருந்தும் பலர்—வெளிநாடுகளுங்கூட—பொருளுதவி செய்து வருவதால், நிவாரண நிதி நாளும் பெருகிவருகிறது.

இந்த நெருக்கடி நேரத்தில் நமது முதல் அமைச்சர் அவர்கள், முக்கியமான செய்தியொன்றை அறிவித்துள்ளார். அதாவது, இந்த மக்களுக்குப் புதுவாழ்வளிக்கும் வேலை எதுவும், பணத்தின் காரணமாக, தடங்கல்படாது என்று அங்குள்ள மக்களுக்கு உறுதி கூறி உற்சாகமூட்டியுள்ளார். ஆகையால், பாதகமுற்ற மக்களுக்குப் புதிதாக வீடுகள் கட்டித்தருதல் போன்ற பணிகள் யாவும் விரைவாக நடைபெற விருக்கின்றன. சிறப்பாக, பாதிக்கப்பட்ட மீனவர் சமுதாயத்தினர் புனர் வாழ்வுக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் என நம்பலாம்.

சேதுக்கால்வாய்த் திட்டம் உடனே தொடங்க இசைவு

இந்த நேரத்தில், ஆறுதலளிக்கும் மற்றொரு நற்செய்தி, பல கோடி ரூபாய் செலவு மதிப்புள்ள சேதுக்கால்வாய்த் திட்ட வேலையை இப்போதே ஆரம்பிக்க, மத்திய நிதியமைச்சர் இசைவு தந்திருப்பதாகும். இப்பகுதியில் பாதகமடைந்த பலருக்கு, இத்திட்ட வேலை மூலம், பெரிதும் வேலை வாய்ப்பு கிடைக்கும்.

நம் நாட்டில், புனித நீராடும் துறைகளில் தனுஷ்கோடியும் ஒன்று. மணல் மேடிட்டுப் போனதால், அதை அடியோடு கைவிடுவதற்கில்லை. ஆகையால் தனுஷ்கோடிக்குச் சாலை அமைக்கும் திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. இராமேசுவரம் மக்கள் பெரிதும் யாத்திரிகர்களை நம்பி வாழ்க்கை நடத்துபவர்கள். ஆகையால், இராமேசுவரம் தீவை, நாட்டின் பிரதான நிலப்பகுதியுடன் இணைக்கும் வகையில், மண்டபம் பாம்பனுக்கிடையே, ரயில் பாலம் மட்டுமின்றி, ரோடு பாலம் நிர்மாணிக்கவும் திட்டமிடப்படுகிறது. இத்திட்ட வேலைகள் எல்லாம் ஒவ்வொன்றாக நிறைவேறும்போது, இப்பகுதியில் மீண்டும் அமைதியான, சீரான வாழ்வு திரும்பும் என எதிர்பார்க்கலாம்.

பஞ்சாயத்துத் தேர்தல்

(முதலமைச்சர் திரு. எம். பக்தவத்ஸலம்)

பாரத நாட்டின் சுதந்திர சாசனமான, நமது அரசியல் அமைப்புச் சட்டத்தில், பஞ்சாயத்து ஆட்சிக்கு முக்கிய இடம் உண்டு. பழங்காலம் முதற்கொண்டு, நமது தேச ஆட்சி, கிராமங்களையே அஸ்திவாரமாகக் கொண்டு அமைந்துள்ளது. நமது நாட்டில் பஞ்சாயத்துக்கள், சமூக வாழ்வில், சிறந்த செல்வாக்குப் பெற்றிருந்ததை, நமது நாட்டின் சரித்திர ஏடுகளில் விரிவாகக் காணலாம்.

சிறப்பாக, தமிழ்நாட்டில், 'ஐம்பெருங்குழு', 'எண்பேராயம்' என்ற பெயரில், ஆட்சி அமைப்புகள், சங்ககாலம் முதற்கொண்டே இயங்கி வந்துள்ளன, இலக்கியங்கள் மட்டுமின்றி, செப்பேடுகளும், கல்வெட்டுகளும் நமது கிராம ஆட்சியின் தேர்தல் முறைகளைப்பற்றி, விரிவாக எடுத்துரைக்கின்றன. குறிப்பாக, செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த உத்தரமேரூர் கல்வெட்டில் காணப்படும் செய்திகள், பழங்காலத்துத் தேர்தல் முறையை விளக்குகின்றன. கிராமத்தாரின் முழு நம்பிக்கையும் பெற்ற தலைவர்கள், தமக்குள் பொறுப்பைப் பகிர்ந்து கொண்டு, பல்வேறு 'வாரியங்களாக' பணிபுரிந்த ஒழுங்கு முறைகளை, நாம் அறிகிறோம். 'ஏரி வாரியம்', 'தோட்ட வாரியம்' முதலிய செயல்முறைக் குழுக்கள் குறிப்பிட்ட கிராம நல வேலைகளைக் கவனித்து வந்ததாகத் தெரிகிறது.

ஆகவேதான், நமது சுதந்திர சாசனத்தின் 40-வது பிரிவில், பஞ்சாயத்து ஆட்சிக்கு சிறப்பிடம் தரப்பட்டது. பஞ்சாயத்துக்கள், சுய ஆட்சியின் உறுப்புகளாக வேலை செய்வதற்கு, அவசியமான சக்திகளையும், ஆதாரங்களையும் அளிக்கவேண்டுமென்று நிர்ணயிக்கப்பட்டது.

உலகம் கண்டு வியக்கும் கிராம மறுமலர்ச்சி

1950-ம் ஆண்டு ஜனவரி மாதம் 26-ம் தேதி, குடியரசு நாடாக நம் பாரத தேசம், மறுமலர்ச்சி பெற்ற பின்பு, நம் சமுதாயத்தில் ஏற்பட்டுவரும் மகத்தான முன்னேற்றத்தை, உலகம் கண்டு வியந்து வருகிறது. முக்கியமாக, கிராம மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் மாபெரும் திட்டங்கள், நாடெங்கும் நடைபெற்று வருகின்றன. அவற்றுள், சமுதாய அபிவிருத்தித் திட்டங்கள் கிராம முன்னேற்றத்தையே முக்கிய லட்சியமாகக் கொண்டவை. கிராம அளவில், எல்லாப் பொதுநல வேலைகளையும், சரியான முறையில் இணைத்துச் செயல்படுத்தும் தலைமைப் பொறுப்பை, பஞ்சாயத்துக்களிடம் ஒப்படைக்க, அரசாங்கம் முடிவு செய்தது. அதற்காகவே, தமிழ்நாட்டில், 1958-ம் வருஷத்திய கிராமப் பஞ்சாயத்துச் சட்டம் நிறைவேறியது.

இந்தப் புதிய பஞ்சாயத்துச் சட்டத்தின்படி, தமிழ்நாட்டில் சுமார் 12,500-க்கு மேற்பட்ட பஞ்சாயத்துக்களும், 374 பஞ்சாயத்து யூனியன்களும் அமைக்கப்பட்டுச் செயல்புரிந்து வருகின்றன. இப்பஞ்சாயத்து ஸ்தாபனங்களுக்கு, புதிய சட்டத்தின்படி, முதல் முதலாக, தேர்தல் நடத்த மேற்கொண்டுள்ளோம்.

எல்லாப் பஞ்சாயத்துக்களுக்கும் ஒரே நாளில் தேர்தல் நடத்துவது கடினமானதாகும். ஆகவே, ஒவ்வொரு மாவட்டத்தையும், மூன்று பிரிவாகப் பிரித்து, ஒவ்வொரு பிரிவிற்கும் ஒரு நாளில் தேர்தல் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. சமீபத்தில், காற்று மழையால் பாதிக்கப்பட்ட மண்டபம் பஞ்சாயத்து யூனியனில் உள்ள பஞ்சாயத்துக்கள் தவிர, மற்ற எல்லா இடங்களிலும், ஜனவரி மாதம் 28, 30 தேதிகளிலும், பிப்ரவரி 2-ம் தேதியிலும், ஆக மூன்று நாட்களில், தேர்தல் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பஞ்சாயத்து ஆட்சியில், நமது நாட்டு மக்களுக்கு நல்ல அனுபவம் உண்டு. ஆகவே, இத்தேர்தல்களை நல்ல முறையில் நடத்தி பஞ்சாயத்து ஆட்சியில் நமக்குள்ள நம்பிக்கையை மேலும், நாம் உறுதிப்படுத்திக்கொள்வோமாக!

கட்சிக்கு இடமில்லை

இந்தப் பஞ்சாயத்துத் தேர்தல்கள் கட்சி சார்பற்ற முறையில் நடைபெறவேண்டும் என்பது நமது குறிக்கோள். ஆகவே, தேர்தலில் போட்டியிடும் அபேட்சகர்களுக்கு கட்சி சார்பற்ற பொதுச் சின்னங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. வாக்கெடுப்பு நிலையத்தில், ஒரு வாக்குப் பெட்டிதான் இருக்கும். முன்பு இருந்ததைப்போல ஓர் அபேட்சகருக்கு ஒரு பெட்டி என்ற முறை, இப்போது இருக்காது. இந்தத் தேர்தல்களில் உபயோகப் படுத்தப்படும் வாக்குச் சீட்டுகளில், சின்னங்கள் மட்டுமே அச்சிடப்பட்டு இருக்கும். அபேட்சகர்களின் பெயர்கள் இருக்க மாட்டா. சீட்டுக் குலுக்கிப் போடுவதன் மூலம், அபேட்சகர்களுக்குச் சின்னங்கள் ஒதுக்கப்படும். அபேட்சகர்கள், தங்களுடைய சின்னங்களை ஒரு மனதாகத் தேர்ந்தெடுக்க ஒப்புக்கொண்டாலும், சீட்டுக் குலுக்கிப் போட்டுத்தான், அவை, தேர்தல் அதிகாரி மூலம், நிர்ணயிக்கப்படும்.

தேர்தல்கள் சம்பந்தமாக, அரசாங்க அதிகாரிகளும், ஸ்தல ஸ்தாபனங்களில் பணி புரிகின்றவர்களும், எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பது பற்றி, அடிப்படை விதிகள் இருந்து வருகின்றன. இந்த விதிகளின்படி, அரசாங்க அதிகாரிகளும் ஸ்தல ஸ்தாபனங்களின் பணியாளர்களும், தேர்தலில் எந்த அபேட்சகருக்கும் ஆதரவாக பிரச்சாரம் செய்வதோ, ஆதரவாகத் தலையிடுவதோ, அல்லது தங்கள் செல்வாக்கைப் பயன்படுத்துவதோ கூடாது என்று திட்டவட்டமாகக் கருதப்பட்டுள்ளது. இந்த விதிகளை அவர்கள் எல்லோரும் அனுசரித்து நடக்க வேண்டும் என்று வற்புறுத்திக் கூற விரும்புகிறேன்.

வருகிற பஞ்சாயத்து தேர்தல்களின்போது ரிட்டர்னிங் ஆபீஸர்கள் (Returning Officers) தேர்தல் அதிகாரிகள், தேர்தல் சம்பந்தமான மற்ற அலுவல் புரியும் அதிகாரிகள் ஆகிய அனைவரும் பாரபட்சமற்ற முறையில் பணியாற்ற வேண்டும். தேர்தல்கள் பாரபட்சமற்ற முறையில் நடத்தப்படுகின்றன என்ற உண்மை, மக்கள் மனத்தில் நன்கு பதியும் வகையில், அவர்கள் பணிபுரியவேண்டியது மிகவும் அவசியம்.

அவர்கள், தேர்தல் சம்பந்தமான புகார்களை உடனுக்குடன் கவனிக்க வேண்டும். புகார் தர விரும்புவோருக்கு நியாயமான அளவு வாய்ப்புக் கொடுக்க வேண்டும். அவர்கள் சொல்லுவதைப் பொறுமையுடன் கேட்க வேண்டும். தேர்தல் வேலையில் சம்பந்தப்பட்ட எல்லாப் பணியாளர்களும், புகாருக்கு இடம் இல்லாமல், பெருமை தரத் தக்க வழியில், பணி புரிவார்கள் என்று நம்புகிறேன். தேர்தல் நடத்தும் விதிமுறை களில் சந்தேகம் ஏதாவது ஏற்பட்டால், உடனடியாக மேல் அதிகாரிகளின் ஆலோசனை களைக் கேட்கத் தயங்கக்கூடாது. பஞ்சாயத்துத் தேர்தல் முறையைப் பற்றிய விதிகளையும் விவரங்களையும், பிரதம தேர்தல் அதிகாரி மூலமாக அறியலாம். அனைவரும் இந்த விதிகளை புறக்கணிக்காமல் நடக்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

இது ஜனநாயக யுகம். குடிமக்கள் எண்ணத்தை அடிப்படையாகக் கொண்டே, ஆட்சி அமைப்பு உருவாகும். எனவே, பாரதக் குடியரசில், தமிழ்நாட்டுப் புதிய பஞ்சா யத்துச் சட்டத்தின்கீழ் நடைபெறும் இந்த முதல் தேர்தலில், அனைவரும் பொறுப்புணர்ச்சி யோடு பங்கு கொண்டு செயலாற்றுமாறு வேண்டுகிறேன். ஒழுங்குக்கும் அமைதிக்கும் பேர் பெற்றுள்ள தமிழ்நாட்டு மக்கள் இந்த மகத்தான பணியை மிகுந்த திறமையோடு நிறைவேற்றி, புதிய சமுதாய நல்வாழ்வுக்கு வழி வகுப்பார்கள் என நம்புகிறேன்.

(வானொலிப் பேச்சு—21—1—65 கிராம நிகழ்ச்சியில் ஒலிபரப்பாகியது)

குடும்பக் கட்டுப்பாடு—தவிர்க்க முடியாத அவசரப் பிரச்னை

தமிழ்நாடு கவர்னர் வேண்டுகோள்

"ஜனத்தொகை கட்டு திட்டமில்லாமல் பெருகிக்கொண்டே போவது, தேச அபிவிருத்திப் பணிகளுக்குக் குந்தகம் ஏற்படுத்தும். எனவே, குடும்பக் கட்டுப்பாடு என்பது தவிர்க்க முடியாத அவசரப் பிரச்னையாகிவிட்டது. இந்தத் திட்டத்தை மக்களிடையே பிரபலப்படுத்துவதற்காக நம்மால் முடிந்த எல்லா நடவடிக்கைகளையும் எடுத்து வருவது மன நிறைவு அளிக்கிறது. மேலும், குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டப் பணிகளுக்காக, ஆண்டுக்காண்டு அதிக நிதி ஒதுக்கப் பட்டு வருவதும் கவனிக்கத்தக்கது. 1957-58-ம் ஆண்டில் இதற்காக ரூ. $1\frac{1}{4}$ லட்சம் செலவிடப்பட்டது. நடப்பாண்டில் சுமார் ரூ. 22 லட்சம் செலவிட வகை செய்யப்பட்டிருக்கிறது. இது மட்டுமில்லாமல், தீவிர திட்டத்தை அமுல்படுத்தவும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது."

"அளவான குடும்பத்தின் அவசியத்தை ஒவ்வொருவரும் உணரும்படி செய்வதே முதல் நடவடிக்கையாகும். மக்களின் ஒத்துழைப்பையும், நல்லாதரவையும் மேலும் மேலும் பெற்று, எதிர்காலத்தில் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் வெற்றிக்காகப் பாடுபடுவோமாக."

(மாநிலக் கவர்னர் திரு சந்திரா ரெட்டி விடுத்த செய்தி)

குடும்பக் கட்டுப்பாடு

அறுவை சிகிச்சை முறையைப் பிரபலப்படுத்த தீவிரத் திட்டம்

கோயம்புத்தூர், திண்டுக்கல், திருச்சிராப்பள்ளி, உதகமண்டலம் ஆகிய இடங்களில் உள்ள மாவட்ட தலைமை மருத்துவ மனைகளில் ஒவ்வொரு முழு நேர வாசெக்டமி அறுவை சிகிச்சை பிரிவு நிறுவப்படும். அறுவை சிகிச்சையைப் பற்றி விளக்கம்தர அந்த மருத்துவ மனைகளில் பிரச்சாரப் பணியாளர்கள் நியமிக்கப்படுவர். எஞ்சிய எட்டு மாவட்டத் தலைமை மருத்துவ மனைகளிலும் அதே மாதிரி முழு நேர வாசெக்டமி அறுவை சிகிச்சைப் பிரிவுகளை அமைக்கவும் மாநிலத்தில் அங்கீகாரமுள்ள எல்லா அறுவை சிகிச்சை பிரிவுகளிலும் பிரச்சாரப் பணியாளர்களை நியமித்துக் கொள்ளவும் மருத்துவத் துறை நெறியாளர் திட்டங்கள் தந்துள்ளார். ஆண்களுக்கான அறுவை சிகிச்சையின் நன்மைகளை விளக்கவும், அறுவை சிகிச்சையினுல் தீமையோ துன்பமோ இல்லையென்பதை வலியுறுத்தவும் ஆரம்பச் சுகாதார நிலையங்கள் உட்பட மாநிலத்திலுள்ள எல்லா அறுவை சிகிச்சை நிலையங்களிலும் பிரச்சாரப் பணியாளர்களை நியமிக்க அரசாங்கம் அனுமதித்துள்ளது.

" அளவான குடும்பம் காண்கின்ற ஆர்வம் ஒவ்வொருவருக்கும் ஏற்படவேண்டும் "

(திருமதி ஜோதி வெங்கடாசலம், சுகாதார அமைச்சர்)

" குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தின் நன்மைகளை தேசத்திலுள்ள ஒவ்வொரு குடிமகனும் உணரவேண்டும் என்பதற்காக, ஆண்டுதோறும் டிசம்பர் 18-ம் தேதியைக் குடும்பக் கட்டுப்பாடு தினமாகக் கொண்டாடி வருகிறோம். 1964-ம் ஆண்டில், டிசம்பர் 18-ம் தேதி முதல் குடும்பக் கட்டுப்பாடு திட்ட வாரமாகக் கொண்டாடப் பட்டுவருகிறது. "

" பிறப்பு வீதத்தைக் குறைக்க வழி செய்வதும், தேசப் பொருளாதார வளர்ச்சிக்குக் குந்தகம் ஏற்படாத வகையில் மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதும்தான் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தின் நோக்கங்களாகும். இந்த அடிப்படையில், தேச சுபிட்சத்தைக் கருதி, அளவான குடும்பம் காண்பதற்கான ஆர்வத்தை ஒவ்வொருவருக்கும் ஏற்படுத்த அரசாங்கம் ஆவன செய்து வருகிறது. "

" கருத்தடை செய்துகொள்ள விரும்பும் பெற்றோர்களுக்கு கருத்தடை சாதனங்கள் இலவசமாகவும், குறைந்த விலையிலும் அளிக்கப்படுகின்றன. நிரந்தரமாக பிள்ளைப் பேற்றை நிறுத்திக்கொள்ள விரும்பும் பெற்றோர்களுக்கு சந்தான பூர்த்தி அறுவை சிகிச்சை பற்றி எடுத்துரைக்கப்படுவதுடன், இலவசமாகவும் சிகிச்சை செய்யப்படுகிறது. அறுவை சிகிச்சை காலத்தில் ஏற்படும் ஊதியக் குறைவை அரசாங்கமே ஈடு செய்கிறது. பொருளாதார நெருக்கடி நிறைந்த இந்த நாளில், அளவான குடும்பமாக இருக்கவேண்டிய அவசியத்தைக் கிராம மக்களுக்கு உணர்த்த, அரசாங்கமும் பஞ்சாயத்து அமைப்புகளும் இயன்ற வழிகளில் எல்லாம் முயன்று வருகின்றன. "

" இவ்வாறு குடும்பக் கட்டுப்பாடு சம்பந்தமாக, அரசாங்கம் செய்து தரும் வாய்ப்பு வசதிகளைப் பயன்படுத்திக் கொண்டு, மக்கள் தம் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், குழந்தைகளின் நலத்தைப் பேணவும் முன் வர வேண்டும். எனவே, பசியில் இருந்தும் ஏழ்மையிலிருந்தும் விடுபட, ஒரே வழியாக குடும்பக் கட்டுப்பாடு முறையைப் பின்பற்றும்படி, இந்த நாளில் ஒவ்வொருவரையும் கேட்டுக்கொள்கிறேன். "

(1964-ம் ஆண்டு டிசம்பர் 18-ம் தேதி முதல் கொண்டாடப்பட்ட குடும்பக்கட்டுப்பாடு வார விழாவையொட்டி சுகாதார அமைச்சர் விடுத்த செய்தி.)

பெயரை மாற்றிக் கொள்வது பற்றி அரசாங்கம் அறிவிப்பு

நெருக்கடி நிலைமை பிரகடனமான தேதிக்கு முன்பு, ஒருவர் எந்தப் பெயரில் அழைக்கப்பட்டாரோ, அந்தப் பெயர் அல்லாத வேறு பெயரை முறைப்படி தமிழ்நாடு அரசாங்கத்திற்கு விண்ணப்பித்து, பெயர் மாற்றத்திற்கான உத்தரவு பெற்றாலொழிய மாற்றி வைத்துக்கொள்ள இந்திய பாதுகாப்புச் சட்டம் 34-வது விதிப்படி யாருக்கும் உரிமை இல்லை. அதுவும் அவர் புதுப் பெயர் வைத்துக்கொண்டதற்கு ஒரு மாதத்துக்கு முன்பு அரசாங்கத்தின் அனுமதிக்காக விண்ணப்பிக்கவேண்டும். இதுவரை பெயர் மாற்றம் பற்றிய விஷயங்களை கவனித்து வந்த தமிழ்நாடு அராசாங்கமானது, அந்த அதிகாரத்தை சென்னை போலீஸ் கமிஷனருக்கும், சி.ஐ.டி. போலீஸ் உதவி இன்ஸ்பெக்டர்-ஜெனரலுக்கும் வழங்கியிருக்கிறது.

அதன்படி, சென்னை நகரில் குடியிருப்பவர்களில் பெயர் மாற்றம் செய்துகொள்ள விரும்புபவர்கள் சென்னை போலீஸ் கமிஷனருக்கும், வெளியூர்களில் வசிப்போரில் பெயர் மாற்றம் செய்துகொள்ள விரும்புபவர்கள் சி.ஐ.டி. உதவி போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலுக்கும் விண்ணப்பிக்கவேண்டும். பெயர் மாற்றம் விஷயமாக தமிழ்நாடு அரசாங்கத்திற்கு விண்ணப்பிக்க வேண்டியதில்லை.

விவசாய மறுமலர்ச்சி

திரு சி. சுப்ரமணியம்

[மத்திய அரசாங்க உணவு—விவசாய அமைச்சர்]

இந்தியாவில் ஏக்கர் விகித விளைச்சல் மிகவும் குறைவு. இதற்குக் காரணம், இந்திய விவசாயிகள் கையாளும் பழைய கருவிகளும் முறைகளும் தாம் என்பது பார்த்தவர்களுக்கு எளிதில் விளங்கும். இதற்குப் பல காரணங்கள் உண்டு. விவசாயத் துறையில் போதிய ஞானம் இல்லாதது, தேவையான முதலீட்டுக்கு வழியின்மை, ரசாயன உரம், பூச்சி மருந்து போன்றவையின் பற்றாக்குறை ஆகியவை முக்கியமான காரணங்களாகும். இந்தக் குறைகளை அடிப்படையிலேயே போக்கவேண்டும். மேல் மட்டத்தில் அளிக்கப்படும் பயிற்சியோ அல்லது எத்தகைய பிரச்சாரமோ இந்த நிலையைத் திருத்துவதற்கு உதவ மாட்டா. ''புதியதோர் உலகம், தனக்கும் உண்டு'' என்பதை இந்திய விவசாயி உணருமாறு செய்ய வேண்டும். அந்த லட்சியத்தை எய்துவதற்கு அவனுக்கு உதவி செய்ய வேண்டும்.

உழவுத்தொழில் பயிற்சி

விவசாயத்துறையில் ஏற்பட்டுள்ள புதிய உத்திகளுடன் கூட, விவசாயியின் மனப்பான்மையிலும் ஒரு மாறுதல் ஏற்பட வேண்டும். தொழிலாளர்கள், என்ஜினியர்கள், நிர்வாகிகள் முதலியோருக்குப் பயிற்சியளிக்காமல், தொழில் திட்டம் ஒன்றை எவரும் மேற்கொள்ளுவது விவேகமாகாது. அது போல, விவசாயத்துறையிலும் விவசாயிக்கு, புதிய உத்திகளில் பயிற்சியளிக்க வேண்டும். நிலத்தைச் சரியானபடி பயன்படுத்துவது, நீர் வசதிகளை உபயோகிப்பது, பயிருக்குக் கேடு விளைவிக்கும் பூச்சிகளைக் கொல்லுவது போன்ற இவற்றில் விவசாயிக்குப் பயிற்சியளிக்க ஒரு மாபெரும் திட்டம் வகுத்து அதற்கு முதலிடம் கொடுக்க வேண்டும்.

விவசாயக் கல்வி

விவசாயக் கல்லூரிகளுக்கும் சமமான முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். இவற்றில் படித்து அதிக அளவில் வெளியேறுவோரே விவசாய முறைகளில் ஒரு புரட்சி தோன்றுவதற்கு வித்திடுவார். விவசாயக் கல்வி பயின்றவர்கள் பட்டணங்களுக்குப் போய் அரசாங்க வேலைகளில் அமராமல் தடுத்து அவர்களைக் கிராமங்களில் தங்கி விவசாயத்தில் தீவிர கவனம் செலுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளும்படி செய்யவேண்டும். விவசாயிகள் ஆகக் கூடியவர் பலரைத் தெரிந்தெடுத்து மூன்று வருஷ விவசாயப்படிப்பை மேற்கொள்ளும்படி அவர்களை நாம் தூண்ட வேண்டும். படித்த விவசாயிகள், உழவுத்தொழிலில் செய்யக்கூடிய மாறுதலைப்போல இத்துறைக்கும் புறப்பானவர் வேறு யாரும் செய்து விட முடியாது.

ஆராய்ச்சியும் விவசாயிகளும்

விவசாய ஆராய்ச்சிக்கும், பலன்களுக்கும், விவசாயிக்கும் இடையே நெருங்கிய இணைப்பு இருக்கவேண்டும். பயிர்களை நாசம் செய்யும் பூச்சிகள், நோய்கள், களைகள், குறைவான விளைச்சல், ரசாயன உரம் பயன்படாது போவது போன்ற புதுப்புதுப் பிரச்னைகளை விவசாயி நாள் தோறும் சமாளிக்க வேண்டியிருக்கிறது. எனவே, ஆராய்ச்சி ஊழியர்கள், வயல்களில் விவசாயிகளுடன் இவை பற்றித் தமக்குத் தெரிந்த விஷயங்களை எடுத்துரைத்து உதவ வேண்டும். இரு தரப்பினரும் இம்மாதிரி பரஸ்பரம் கருத்துக்களைத் தொடர்ந்து பரிமாறிக்கொள்வதன் மூலம் விவசாயத்துக்கும் விவசாய ஆராய்ச்சிக்கும் ஒரு புதிய போக்கைத் தோற்றுவிக்க முடியும்.

விஸ்தரிப்புத் திட்டத்தின் முக்கியத்துவம்

உயர்தர வித்துக்கள், உரங்கள், நீர்வசதி, புது ரக விவசாயக் கருவிகள், கூடுதலான பூச்சிக் கொல்லி மருந்துகள் ஆகியவற்றின் மூலமே விவசாயத்துறையில் புரட்சியைத் தோற்றுவிக்க முடியும். இவற்றின் அனுகூலங்களை விவசாயி உணராமல் இல்லை. ஆனால் விஸ்தரிப்புத்திட்ட ஊழியர்கள், இவை பற்றிய தகவல்களை விவசாயிக்கு எடுத்துரைக்காவிட்டால் இவற்றால் பயன் எதுவும் ஏற்படாது. விவசாயத்துறையில் ஏற்பட்டுள்ள இந்தச் சவாலை விஸ்தரிப்புத் திட்ட ஊழியர் இன்று சமாளிக்க முடியவில்லை. கிராமங்களில் வேலை பார்க்கும் விஸ்தரிப்பு ஊழியர்களுக்குப் போதிய திறமையின்மையே இதற்குக் காரணமாகும். இது மிகவும் கவலையளிப்பதாகும். கிராமங்களில் சேவை புரியும் விஸ்தரிப்பு ஊழியர்களுக்குத் தீவிர மறு பயிற்சி அளிக்க வேண்டும். அடுத்த பத்து ஆண்டுகளில் கிராமங்களில் பணிபுரியும் விஸ்தரிப்பு ஊழியர்களில் எத்தனை பேருக்கு முடியுமோ அத்தனை பேருக்குப் பயிற்சியளிப்பது நமது குறிக்கோளாய் இருக்க வேண்டும்.

விவசாய தொழிலியல் அடிப்படையின் அவசியம்

உழவுத் தொழில் விஷயங்களை அறிந்து கொள்வதினால் மட்டும் ஏக்கர் விளைச்சலைப் பெருக்கி விட முடியாது. விவசாயம் பெருமளவு முன்னேற வேண்டுமானால், போதிய விவசாய தொழிலியல் அடிப்படை ஒன்று அவசியமாகும். இயந்திரக் கலப்பைகள், பூச்சி மருந்துகள், உரங்கள் முதலியன நவீன விவசாயத்துக்கு அவசியமானவை. இந்தியாவில் ஏக்கர் ஒன்றுக்கு மூன்று ராத்தல் எடை உரமே போடப்படுவதாக ஒரு நிபுணர் குறிப்பிட்டு இருக்கிறார். இந்த அளவு, ஜப்பானில் ஏக்கர் ஒன்றுக்குப் போடப்படும் உரத்தில் நூற்றில் ஒரு பகுதியாகும். கொரியாவுடன் ஒப்பிடும்போது இது முப்பத்து மூன்றில் ஒரு பகுதிதான். நமது நிலத்தில் வர்த்தகப் பயிர்களுக்குப் (Commercial Crops) போடப்படும் உரத்தையும் கணக்கில் எடுத்துக்கொண்டோமானால். உணவுத்தானியங்களுக்கென ஏக்கர் ஒன்றுக்குப்

போடப்படும் உரத்தின் அளவு இன்னும் குறைந்ததாகி விடும். நமது நாட்டில் ஆண்டு ஒன்றுக்கு இருபது லட்சத்திலிருந்து 50 லட்சம் டன்கள் வரை நைட்ரஜன் உரம் தேவைப்படும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. உரங்கள் சரியான சமயத்தில் சரியான அளவில் நியாயமான விலையில் விவசாயிக்குக் கிடைக்கச் செய்யவேண்டியது மிகவும் அவசியம். இதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இந்த முக்கிய குறிக்கோளை அடைவதற்கு கொள்கைகள் குறுக்கே நிற்கலாகாது.

விலை நிர்ணயம்

இலாபகரமான விலை கிடைப்பதற்கு வகை செய்தால் தான் விவசாயி, உற்பத்தியைப் பெருக்க ஆவலுடன் உழைக்க முடியும். எனவே, விவசாயிக்கு நியாயமான விலை கிடைப்பதற்கு வகை செய்யவேண்டும். உற்பத்தியாளர்களை, சூதாட்ட பேரங்களில் இருந்து காப்பாற்ற வேண்டியதும் மிகவும் முக்கியமாகும். விலைவாசிகளை நிலையான அடிப்படையில் நிர்ணயிப்பதற்கு அரசாங்கம் அமைக்கும் உணவு கார்ப்பரேஷன் (Food Corporation of India) உதவியாய் இருக்கும். விலைகளை ஒரு நிலையில் ஒழுங்கு படுத்தும் பொருட்டு, நாளடைவில், வர்த்தகப்பயிர் வியாபாரத்திலும் இந்தக் கார்ப்பரேஷன் ஈடுபடக்கூடும்.

இணைந்த திட்டங்கள்

விவசாயம் பலதுறைப்பட்டதாக இருந்தால், விவசாயிக்கு லாபகரமானதாய் இருக்கும். கால் நடை வளர்ப்பு, பால்பண்ணை, கோழிப்பண்ணை, பன்றி வளர்ப்பு, மீன் வளர்ப்பு ஆகிய திட்டங்கள் எல்லாம் விவசாயத்துடன் இணைந்ததாய் மேற்கொள்ளப்பட வேண்டும். நாட்டின் மொத்த உணவு உற்பத்தி பெருகுவதுடன், விவசாயியின் பொருள் பலமும் இதன்மூலம் வலுவடையும். இது விவசாயத்தில் மேலும் முதலீடு செய்ய, விவசாயியை ஊக்குவிப்பதாய் இருக்கும். நாலாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இத்தகைய திட்டங்கள் வலியுறுத்தப்படும்.

கடன் வசதிகள்

அரசாங்கம் எத்தனையோ நடவடிக்கைகள் மேற்கொண்டிருந்தும், விவசாயிகள் இன்னமும் பெரிதும் லேவாதேவிக்காரரையே நம்பி வாழுகின்றனர். பெரிய நிலச் சுவான்தார்களும் இவ்வாறு வட்டிக்குக் கடன் கொடுக்கிறார்கள். அநியாய வட்டி வாங்கினாலும் அவர்களையே விவசாயிகள் ஏன் நம்பியிருக்கிறார்கள்? விவசாயி லேவாதேவிக்காரரைச் சுலபமாய் அடைய முடியும். விஷயத்தை நேரடியாய்ப் பேசி முடித்துக் கைமேல் பணத்தை வாங்கிக் கொண்டு வந்து விட முடியும். இப்பொழுதுள்ள கடன் கொடுக்கும் ஸ்தாபனங்களிலும் இத்தகைய வசதிகளை விவசாயி பெறுவதற்கு வழி செய்வதன் மூலமே வட்டிக்கடைக்காரர்களிடமிருந்து விவசாயியைப் பிரித்து வைக்க முடியும்.

வர்த்தக வங்கிகளைக் தொடர்ச்சியாய் அமைத்துச் சிவப்பு நாடா முறையை அகற்றுவது இதைச் சாதிப்பதற்கான வழிகளில் ஒன்றாகும்.

குத்தகை வார விகிதம்

நில உடைமை அமைப்பு முறையிலும் ஒரு மாறுதல் செய்ய வேண்டியது இன்றியமையாதது. சட்டங்கள் இருந்தும் குத்தகை வார விகிதம் விவசாயிகளுக்கு ஊக்கமளிப்பதாய் இல்லை. இதன் மூலம் ஏற்படுகிற கெடுதல்களை அகற்றுவதற்கு அரசாங்கம் தீவிர வழித்துறைகளைப் பரிசீலனை செய்து வருகிறது. விவசாயிக்கு நியாயமான பங்கு கிடைக்காது போனால், முதலீடு செய்வதில் விவசாயிக்கு அக்கறை இருக்க முடியாது.

பத்தாண்டுத் திட்டம்

உழவுத்தொழில் மேற்கொள்ளக்கூடிய மாறுதல்கள் நீண்ட கால அடிப்படையில் அமைந்திருக்க வேண்டும். இதற்காக பத்தாண்டு காலத்திட்டம் ஒன்றை வரையவேண்டும். விவசாய அபிவிருத்தியின் பல்வேறு அம்சங்களைக் கருத்தில் கொண்டு துணிச்சலான கொள்கைகளை வகுத்து நிறைவேற்ற முற்பட வேண்டும். இத்தகைய திட்டம் விவசாயியை மையமாய்க் கொண்டிருக்க வேண்டும். விவசாயிக்காகக் கூடுமானவரை, விவசாயியினால் அந்தத் திட்டம் வரையப்பட்டதாய் இருக்க வேண்டும்.

கரும்புக் கழிவிலிருந்து கம்போஸ்ட்டு

கரும்புக் கழிவை எரிப்பதற்குப் பதிலாக கம்போஸ்ட்டு செய்யலாம். பன்றிச் சாணி, சர்க்கரை ஆலைக்கழிவுப் பொருள் இவைகளை பத்து பங்கு கரும்புக் கழிவு எடைக்கு ஒரு பங்கு எடை வீதம் சேர்த்து கம்போஸ்ட்டு செய்தால், விரைவில் கரும்புக் கழிவு கம்போஸ்டாகும். பன்றிச் சாணம் அல்லது ஆலைக்கழிவு இவைகளுள் ஒன்றை பயன்படுத்துவதற்குப்பதிலாக இரண்டையும் பயன்படுத்தினால் சிறந்தது.

ஆழமில்லாத குழிகளிலோ அல்லது குவியல்களிலோ பாடம் செய்யலாம். கரும்புக் கழிவு ஒரு அடுக்கு, பன்றிச்சாண கரும்பாலைக் கழிவு ஒரு அடுக்கு என்று மாறிமாறி வைத்து கம்போஸ்ட்டு தயாரிக்க வேண்டும்.

மாதம் ஒரு முறை இதைப் புரட்டி விடவேண்டும். மழை இல்லாவிட்டால் தண்ணீர் விட்டுப் புரட்டி விடவேண்டும்.

நமது ரசாயன உரத்தொழில்

[திரு ஓ. வி. அளகேசன், பெட்ரோலியம், ரசாயனப் பொருட்கள் ராஜாங்க அமைச்சர்.]

உலகப் பெரும்போருக்குப் பிறகு, விவசாயத் துறையில் ரசாயன உரங்கள் அதிக அளவில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இவை உற்பத்தியைப் பெருக்குகின்றன.

நம்முடைய நிலங்களில் நைட்ரஜன் சத்து மிகவும் குறைவாக இருக்கிறது. எழுபத்தைந்து சதவிகித நிலங்களில் பாஸ்பரஸ் சத்துக் குறைவாகவும், 25 சத விகித நிலங்களில் பொட்டாஷ் சத்துக் குறைவாகவும் உள்ளன. நமது ரசாயன உர உபயோகமும், விவசாயத்துறையில் முன்னேறியுள்ள பல நாடுகளை விடக் குறைவாகவே இருக்கிறது.

இந்தியாவில் தற்போது மொத்தம் 36 கோடி ஏக்கரா பரப்பில் சாகுபடி செய்யப்படுகிறது. இதில் 6·8 கோடி ஏக்கராக்களுக்குப் பாசன வசதி அளிக்கப்பட்டுள்ளது. சாகுபடியாகும் பரப்புக்கு மொத்தம் 23.2 லட்சம் டன் நைட்ரஜன், 11·6 லட்சம் டன் பாஸ்பேட், 4.7 லட்சம் டன் பொட்டாஷ் தேவைப்படும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. ஆயின், 1963—64-ம் ஆண்டின் உபயோக இலக்கு 5.5 லட்சம் டன் நைட்ரஜன், 2.25 லட்சம் டன் பாஸ்பேட் 1.3 லட்சம் டன் பொட்டாஷ் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தற்போது உள்நாட்டில் 2·22 லட்சம் டன் நைட்ரஜன், ஒரு லட்சம் டன் பாஸ்பேட் மட்டுமே உற்பத்தியாகின்றன. பொட்டாஷின் தேவை, கூடிய மட்டும் இறக்குமதியின் மூலம் சமாளிக்கப்படுகிறது.

உற்பத்திப் பெருக்கத்தில் ரசாயன உரங்களின் பங்கு

நான்காவது திட்ட இறுதியில் 42.5 கோடி ஏக்கராக்களில் சாகுபடி செய்யப்படும் என்றும், அதில் 11 கோடி ஏக்கராக்களுக்குப் பாசன வசதியிருக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. மத்திய உணவு, விவசாய அமைச்சரகமும் திட்டக்கமிஷனும் உணவு உற்பத்தியில் ஆண்டு தோறும் 5 சதவிகித உயர்வு காண முயன்றுவருகின்றன. இந்த இலக்கை அடைவதற்கு 20 லட்சம் டன் நைட்ரஜன், 10 லட்சம் டன் பாஸ்பேட் ஆகியவை நான்காவது திட்ட இறுதியில் சப்ளை செய்யப்பட வேண்டும்.

மூன்றுவது திட்டத்தில் உணவு உற்பத்தி 280 லட்சம் டன் அதிகரிக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இதில் சுமார் 40 சதவிகிதம் ரசாயன உரங்களால் ஏற்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

மூன்றுவது திட்டத்தில் திட்டமிடப்பட்டுள்ள ரசாயன உரங்களின் திறனளவு, உற்பத்தி பற்றிய இலக்குகள் வருமாறு:—

ரசாயன உரங்கள்.		திறனளவு (டன்).	உற்பத்தி (டன்).
நைட்ரஜன்	..	1,000,000	800,000
பாஸ்பேட்	..	500,000	400,000
பொட்டாஷ்	..	300,000	200,000

மூன்றுவது திட்ட இலக்குகள் அளவுக்கு உற்பத்தி காணவில்லை; மிகவும் குறைந்து போயிற்று. இதற்கு முக்கிய காரணம், தனியார்த் துறைத் திட்டங்களை நிறைவேற்றுவதில் காணப்பட்ட சுணக்கமேயாகும். கோரக்பூர், நாமரூப் ஆகிய விடங்களில் பொதுத்துறைப் பிரிவுகளைக் கட்டுவதில் ஏற்பட்ட காலதாமதமும் இதற்குக் காரணமாகும்.

1965-66-ல் அடையவேண்டிய மூன்றுவது திட்ட இலக்குகளை, 1967-68 லாவது அடையும் வகையில், ரசாயன உர உற்பத்தியைத் துரிதப்படுத்த 'அதி தீவிர' திட்டம் ஒன்றை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. நான்காவது திட்டத்தில் இடம் பெறப்போகும் திட்டங்கள் சம்பந்தமாக முன் நடவடிக்கையும் எடுத்து வரப்படுகிறது.

முதலாவது, இரண்டாவது திட்ட காலங்களில் பூர்த்தி செய்யப்பட்ட திட்டங்கள் உட்பட ரசாயன உரத்தொழிலில் செய்யப்பட்டுள்ள மொத்த முதலீடு பொதுத்துறையில் 195 கோடி ரூபாயும், தனியார்த்துறையில் 30 கோடி ரூபாயுமாகும். இவை மூன்றுவது திட்ட இறுதியில் 260 கோடி ரூபாயாகவும், 40 கோடி ரூபாயாகவும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. நான்காவது திட்டக் காலத்தில் பொதுத்துறை, தனியார்துறை மொத்தச் செலவு 442.5 கோடி ரூபாயாக இருக்கும். நான்காவது திட்ட இறுதியில், ரசாயன உரத்தொழிலில் செய்யப்படும் மொத்த முதலீடு சுமார் 740 கோடி ரூபாயாக இருக்கும்,

உணவு உற்பத்தியில் நாம் சுயதேவைப் பூர்த்தியை அடைவதற்கு முதற்படியாக ரசாயன உரத் தேவைகளில் சுயதேவைப்பூர்த்தியைஅடைவது அவசியமாகும். தேவையுள்ள அளவுக்கு உள் நாட்டில் ரசாயன உரங்கள் உற்பத்தியாகாத காரணத்தினால், அதனை ஈடுகட்ட வெளிநாடுகளிலிருந்து ஆண்டுதோறும் 25 முதல் 30 கோடி ரூபாய் வரை மதிப்புள்ள ரசாயன உரங்களை

நாம் சில ஆண்டுகளாக இறக்குமதி செய்து வந்துள்ளோம். அத்துடன் 150 கோடி ரூபாய் மதிப்புள்ள உணவுத்தானியங்களையும் நாம் ஆண்டுதோறும் இறக்குமதி செய்து வந்துள்ளோம். இந்த நிலையில் நம் நாட்டில் ரசாயன உர உற்பத்தியை மிகவும் அதிகரிக்கவேண்டியது எவ்வளவு அவசியம் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி போல விளங்கும்.

இதுவரை, ரசாயன உரத்தொழிற்சாலைகளுக்கான சாதனங்களையும் இயந்திரங்களையும் முக்கியமாக நாம் வெளிநாடுகளிலிருந்தே இறக்குமதி செய்துவந்துள்ளோம். இது நமது அந்நியச் செலாவணி ஆதாரங்களின் மீது பெரும் சுமையை ஏற்படுத்தியது.

ரசாயன உரக் கார்ப்பரேஷன்

இந்திய ரசாயன உரக் கார்ப்பரேஷன் தனது திட்டமிடல் மற்றும் அபிவிருத்திப் பிரிவின் மூலமாக, பொதுத்துறையில் ரசாயன உரத் தொழிற்சாலைகளை அமைப்பது சம்பந்தமாக தொழில் நுட்ப அறிவையும் அனுபவத்தையும் அபிவிருத்தி செய்திருப்பது மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும்.

இந்தப் பிரிவினால் வடிவமைக்கப்பட்டு, சாதனங்கள் பொருத்தப்பட்டு, அமைக்கப்படப் போகும் முதலாவது தொழிற்சாலை கோர்பா தொழிற்சாலையாகும். ரசாயன உரங்கள் மற்றும் ரசாயனப் பொருட்கள் தயாரிக்க திருவாங்கூர் லிமிடெட் நிறுவனமும் தனக்கெனத் தனியே வடிவமைப்புப் பிரிவு ஒன்றைக்கொண்டுள்ளது. அமோனியம் சல்பேட் உற்பத்திக்கு ஜிப்சம் பக்குவ முறை உப-உற்பத்திப் பொருட்களையும் அது அபிவிருத்தி செய்துள்ளது.

இந்திய ரசாயன உரக் கார்ப்பரேஷன், நாட்டில் உள்ள மிகப்பெரிய நைட்ரஜன் உரத் தயாரிப்பு நிறுவனமாகும். உற்பத்திச் செலவைக் குறைக்க அது முயன்று வந்துள்ளபோதிலும், மூலப் பொருட்களின் விலை உயர்வு, அவற்றின் தரக்குறைவு போன்ற காரணங்களால் தற்போதுள்ள பிரிவுகளில் அமோனியம் சல்பேட் உற்பத்திச் செலவைக் கணிசமான அளவுக்குக் குறைக்க இயலவில்லை. யூரியா, அம்மோனியம் சல்பேட் நைட்ரேட், கால்சியம் அம்மோனியம் நைட்ரேட் ஆகியவற்றைப் பொறுத்தவரை உற்பத்தி அதிகரித்து வருவதையொட்டி உற்பத்திச்செலவு நிலையாகக் குறைந்து வந்துள்ளது. அமைக்கப்பட்டுவரும் புதிய பிரிவுகளால் உற்பத்திச்செலவு கணிசமாகக் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

புயல் நிவாரண நிதிக்கு நன்கொடைகள்

அண்மையில் இராமேஸ்வரம் தீவையும், தஞ்சாவூர், இராமநாதபுரம் மாவட்டங்களில் கடற்கரைப் பகுதிகளையும் தாக்கிய புயலினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் அளிப்பதற்காக, நாட்டில் பல்வேறு தரப்பு மக்களிடையேயிருந்தும் பெருமளவில் நன்கொடைகள் வந்தபடி உள்ளன. இயற்கை விபரீதங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணமளிப்பதில் எல்லா வசதிகளையும் திரட்டுவதற்காக, இந்த மாநிலத்தில் தமிழ்நாடு புயல் நிவாரண நிதி-1955-ல் ஆரம்பிக்கப்பட்டது. சமீபத்திய புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ விரும்புவோர் தங்கள் நன்கொடைகளை ஜில்லா கலெக்டரிடமோ, அல்லது ரசீதின் பேரில், ஜில்லா கலெக்டரால் அதிகாரம் அளிக்கப்பட்டவரிடமோ, அளிக்குமாறு தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. பின்னர், அந்த நிதியை சென்னை ஸ்டேட் பாங்கு ஆப் இந்தியா கிளைகளில் தமிழ்நாடு புயல் நிவாரண நிதி—1955-ல் சேர்க்க, கலெக்டர் ஏற்பாடு செய்வார். ஸ்டேட் பாங்கு ஆப் இந்தியா கிளைகளிலும், 'தமிழ்நாடு புயல் நிவாரண நிதி' என்ற தலைப்புக்கு நன்கொடை அளிக்கலாம். 'செக்' ஆகக் கொடுப்பதானால், காரியதரிசி, பொக்கிஷதார், தமிழ்நாடு புயல் நிவாரண நிதி என்று கொடுக்கலாம். **தமிழ்நாடு புயல் நிவாரண நிதிக்கு நேரடியாக நன்கொடை செலுத்த விரும்புவோர், தமிழ்நாடு புயல் நிவாரண நிதியின் எக்ஸ் அபிஷியோ காரியதரிசியும், பொக்கிஷதாருமான அரசாங்க நிதி இலாகா காரியதரிசி, கோட்டை, சென்னை-9, என்ற** முகவரிக்கு அனுப்பலாம். தமிழ்நாடு புயல் நிவாரண நிதிக்கு தரப்படும் நன்கொடைகளுக்கு, 1961-ம் ஆண்டின் வருமான வரிச் சட்டம் 88 (1) பிரிவுப்படி வரி விலக்கு உண்டு.

திரு. வி. கல்யாணசுந்தர முதலியார்

(சில குறிப்புக்கள்)

[திரு. வெ. சாமிநாத சர்மா]

1917-ம் ஆண்டு நவம்பர் மாதம் மூன்ருவது வாரம். சென்னை கோகலே மண்டபத்தில் பெருங் கூட்டம். திவான் பகதூர் பட்டு கேசவப் பிள்ளை தலைமை. திரு. வி. கலியாணசுந்தர முதலியார் பேச்சு. 'ஒரு தமிழ்ப் பண்டிதர் அரசியலைப் பற்றி என்ன பேசிவிடப் போகிருர்? கேட்டுத்தான் வைப்போமே' என்ற அலட்சிய எண்ணத்துடன்தான், கூட்டத்திற்குப் பலர் வந்தனர். ஆனல், கூட்டம் முடிந்து திரும்பிச் சென்ற பொழுது "ஆகா இதுவல்லவோ பேச்சு! இவர், சாதாரண தமிழ்ப் பண்டிதர் அல்ல; அரசியல் மேதை" என்று அவர்களே சொல்லிக்கொண்டு போயினர். அது மட்டுமன்று; 'இனி இவர் எங்கு பேசினலும், எதைப்பற்றிப் பேசினலும், எப்படிப் பேசினலும், அந்தக் கூட்டங்களுக்கு கட்டாயம் சென்றே தீரவேண்டும்" என்று தீர்மானித்துக் கொண்டு சென்றனர்.

அன்றைய சூழ்நிலையில் நிலவியிருந்த அரசியலைப் பற்றி திரு. வி. க. நிகழ்த்திய அந்த உரைதான், அவருடைய அரசியல் வாழ்க்கைக்கு முகவுரை மாதிரி அமைந்ததென்று சொல்லலாம்.

நாட்டுப்பற்று தமிழ்ப் புலமையை விஞ்சியது!

அப்பொழுது அவர், இராயப்பேட்டை வெஸ்லி கல்லூரியில் தலைமைத் தமிழ் ஆசிரியராகப் பணியாற்றி வந்தார். அதைத் துறந்துவிட்டு, அரசியல் சூருவளியில் சிக்கிக் கொள்ள வேண்டாமென்றும், அதனல் பல இன்னல்களை அனுபவிக்க நேரிடுமென்றும் தமிழ்ப் புலவர் குழாத்திலேயே இருந்து பேரும் புகழும் பெறுவதற்கான வாய்ப்புக்கள் பல இருக்கின்றனவென்றும் உண்மையில், மாநிலக் கல்லூரித் தலைமை தமிழாசிரியர் பதவி அவரை விரைவில் அணுகக் காத்துக்கிடக்கிறதென்றும், தி. த. கனகசுந்தரம் பிள்ளை, கா. ரா. நமசிவாய முதலியார் போன்ற தமிழறிஞர்கள் அவருக்கு அறிவுரைகள் வழங்கினர்கள். வேறு சில அன்பர்கள், நீண்டநீண்ட கடிதங்கள் மூலம் அரசியல் ஏரியில் குதிக்க வேண்டாமென்று எச்சரிக்கை செய்தார்கள். ஆனல், அவர் கொண்டிருந்த நாட்டுப்பற்று, அவர் பெற்றிருந்த தமிழ்ப் புலமையை விஞ்சி நின்றது. 1917-ம் வருஷம் டிசம்பர் மாதம் ஏழாந்தேதி, 'தேசபக்தன்' என்ற தினசரிப் பத்திரிகையின் ஆசிரிய பீடத்தில் அமர்ந்தார். அந்தப் பத்திரிகை தோன்றுவதற்குக் காரணமாயிருந்தவர்கள் இருவர். ஒருவர் சுப்பராய காமத் என்ற மங்களூர்க்காரர். மற்ருருவர் அன்னிபெசண்ட் அம்மையார்.

சுமார் இரண்டரை ஆண்டுகள் சேவைக்குப்பிறகு, சுப்பராய காமத்துடன் ஏற்பட்ட பிணக்குக் காரணமாக, முதலியார், 'தேசபக்தன்' பத்திரிகையிலிருந்து விலகிக்கொண்டு 'நவசக்தி' என்னும் வார இதழைத் தொடங்கிப் பல ஆண்டுகள் நடத்தி வந்தார்.

தமிழ்த் தென்றல் தவழச் செய்த பெரியார்

முதலியார், அரசியல் அரங்கத்தில் பிரவேசித்த காலத்தில், அங்கு ஆங்கில வாடையே வீசிக் கொண்டிருந்தது; அதை அப்புறம் போகும்படி செய்துவிட்டு, அங்குத் தமிழ்த் தென்றல் தவழும்படி செய்தார் முதலியார். தமிழில் பேசத் தெரியாது என்று சொல்வதில் பெருமை கண்ட தமிழர்கள், தமிழில் பேசத் தொடங்கினர்கள். மற்றும், அவர் பிறமொழி கலவாத தமிழில் அரசியல் துணுக்கங்களை எல்லாரும் புரிந்து கொள்ளுகின்ற முறையில் சொல்லவும் எழுதவும் முடியும் என்பதற்கு வழிகாட்டினர். ஆனல், அவருக்கு மொழி வெறி கிடையாது: பிற மொழிகள் மீது பகைமை கொண்டவருமல்லர். உண்மையில், அவருடைய, தமிழ்ப் பற்றும், தமிழ்ப் புலமையும், பிறமொழிகளிலுள்ள நயங்களை எடுத்துக் காட்டும் ஆற்றலை அளித்தன. அவர், சங்கர வேதாந்தத்தைப் பற்றிப் பேசினலும் சரி, யேசு நாதரின் மலைப் பிரசங்கத்திற்கு விளக்கவுரை பகர்ந்தாலும் சரி, அவருடைய இந்த ஆற்றல், ஒளிவிட்டுப் பிரகாசித்தது.

திரு.வி.க.வின் பிற்கால அரசியல் வாழ்க்கை வெற்றி பெறவில்லை என்று கூறுவர் சிலர் வெறும் அரசியல் கண்ணோட்டத்துடன் அவரைப் பார்த்தால், இது ஓரளவுக்குப் பொருந்துவது போலத் தோன்றும். ஆனால், அப்படி வெறும் அரசியல் கண்ணோட்டத்தில் அவரைப் பார்க்கக் கூடாது. பாரத நாட்டின் அரசியல் பரம்பரையை அவருக்குப் பின்னணியாக வைத்து, அவரைப் பார்க்க வேண்டும். ஏனென்றால் அந்தப் பரம்பரையை அவர் நன்கு அறிந்திவர். அதன் வழியிலே வந்தவர்.

அறத்தை அடிப்படையாகக் கொண்ட அரசியல்

அந்தப் பரம்பரை என்ன கூறுகிறது? அரசியல் என்பது அறத்தை அடிப்படையாகக் கொண்டதென்றும், அந்த அடிப்படையோடு கூடியதைத் தான் அரசியல் என்ற பெயரிட்டு அழைப்பதற்குத் தகுதி படைத்ததென்றும் கூறுகிறது. அறத்தை அடிப்படையாகக்கொள்ளாத அரசியல், உயிரில்லாத உடல் மாதிரி என்று முதலியார், தமது நூலொன்றில் கூறியுள்ளார். இந்த மாதிரி மேலான ஒரு கருத்தை மனத்தில் பதிய வைத்துக் கொண்டுதான் அவர் அன்றைய அரசியலில் பிரவேசித்தார். பிரவேசித்த சிறிது காலத்திற்குப் பிறகு, அந்த அடிப்படை உண்மையிலேயே இருக்கிறதா, இல்லையா என்று சந்தேகிக்கக்கூடிய நிலையில் எங்கேயோ ஆழத்தில் அழுந்திக்கிடந்தது. அதனைக் கண்டுபிடித்து, அது இருக்கவேண்டிய நிலையில் அதனை அமைக்க, தமது சொல்லாலும் எழுத்தாலும் வெகுவாகப் பாடுபட்டார். எதிர் பார்த்த பயனைக்காண முடியவில்லை. அந்நிய ஆதிக்கத்தின் சக்தி, அந்த அடிப்படையைக் காண விடாதபடி செய்துவந்தது. ஆகவே, அந்த அந்நிய ஆதிக்க சக்தி உருக்குலைந்து ஒழிந்தாலன்றி, நமது நாட்டின் அரசியல், அறத்தை அடிப்படையாகக் கொண்டு இயங்க முடியாதென்பதை உணர்ந்தார். அதனை ஒழிக்க, ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வழி தோன்றினாலும், முதலியாருக்கு கடவுளின் திருவருளை நாடுவதுதான் சிறந்த வழி என்று தோன்றியது. எனவே, வெறும் அரசியலிலிருந்து ஒதுங்கிக்கொண்டு, கடவுளின் அருளுக்கு விண்ணப்பித்துக் கொண்டு வந்தார். அவருடைய வாழ்க்கையின் பிற்பகுதிக் காலத்து எழுத்திலும் பேச்சிலும் இந்த முறையீடு தொனிப்பதைக் காணலாம். இதனால் வெறும் அரசியலிலிருந்து அவர் ஒதுங்கிக் கொண்டார் என்று சொல்வது தான் பொருந்துமே தவிர, வேறுவிதமாகச் சொல்வது பொருந்தாது.

அறத்தை அடிப்படையாகக் கொள்ளாத அரசியலில், சூழ்ச்சி மலிந்து காணப்படும்; பதவிப் போட்டி முட்டி நிற்கும். வன்ம உணர்ச்சி மாறுபட்ட கொள்கையினரைத்தேடி அலையும், தன்னலம் தலை தூக்கி ஆடும். தன் முகப்பு தம்பட்ட மடித்துக் கொண்டிருக்கும். இவைகளுக்கெல்லாம் புறம்பானவரல்லவா முதலியார்?

மற்றும், முதலியார், மனச்சாட்சிக்கு முழு மதிப்புக் கொடுத்தார்; அதற்கு அஞ்சவும் செய்தார். இதனால் நீங்கள் இங்ஙனம் மனச்சாட்சிக்கு முழு மதிப்புக்கொடுத்து வருவதினால் தான் அரசியலில் உங்களுக்கு வெற்றி கிட்டவில்லையென்று சிலர் கூறுகின்றனர் என்று யாராவது அவர் காதில் போட்டால், அதற்காக அவர் வருந்தமாட்டார், மகிழ்ச்சியே கொள்வார்; பெருமையும் அடைவார்.

மனித வாழ்க்கைக்கு முதல் முக்கியத்துவம்

உண்மையில் முதலியார், அரசியல் வாழ்க்கையைக் காட்டிலும் மனித வாழ்க்கைக்குத் தான் முக்கியத்துவம் கொடுத்தார். வெறும் அரசியல்வாதியாக இருந்து செல்வமும் செல்வாக்கும் பெறுவதைக் காட்டிலும், மனிதப் பண்புகளோடுகூடிய மனிதனாக இருந்து வறுமை வாழ்க்கையை நடத்துவதே சிறப்பு என்பது அவருடைய அசைக்க முடியாத நம்பிக்கை. காந்தியடிகளை, அரசியல் வாதிகளில் ஒருவராக அந்த அரசியல் வாதிகளின் தலைவராக அவர் கருதவில்லை, மனிதத் தன்மைகள் நிறைந்த மேலான ஒரு மனிதராகவே கருதினார். பத்திரிகாசிரிய பீடத்தில் அமர்ந்த பிறகு, முதன் முதலாக வெளிவந்த அவருடைய நூல் "காந்தியடிகளும் மனித வாழ்க்கையும்" என்று தலைப்புப் பெற்றதே தவிர, "காந்தியடிகளும் அரசியல் வாழ்க்கையும்" என்ற தலைப்பைப் பெறாதது, ஈண்டுச் சிந்திக்கத்தக்கது. அறத்தை வளர்ப்பதற்கும், அதனைப் பாதுகாப்பதற்கும் அரசியலை ஒரு கருவியாகக் கொள்ள வேண்டுமே தவிர, அந்த அரசியலையே குறிக்கோளாகக் கொள்ளக்கூடாதென்ற காந்தியடிகளின் கருத்தில் முதலியாரின் உள்ளம் படிந்திருந்ததென்பதைப் பற்றி அதிகம் சொல்லத்தேவையில்லை.

[31-ம் பக்கம் பார்க்க.]

"இந்த நாட்டில் நாம் பிறந்து விட்ட காரணத்தால் மட்டும், இது நம்முடைய தாய் நாடாகிறதென்று கருதுகிறவர்கள், வாழ்க்கையின் புறப்பகுதியில் ஒட்டி வாழ்கின்ற ஒட்டுண்ணிகளாவார்கள். மனிதனுடைய ஆழ்ந்த இயல்பில் தான் அவனுடைய உண்மை வடிவம் காணப்படுகிறதாகலின், எந்த ஒரு நாட்டை அவன் தன்னுடைய அறிவு, அன்பு, செயல் ஆகியவற்றால் உண்டாக்குகிறானோ, அதுவே அவனுடைய உண்மையான தாய் நாடாகிறது. இந்த அண்டத்தின் சிற்பி கூட அவனுடைய கை வண்ணத்தின் மூலந்தான் வெளிப்பட்டுத் தோன்ற வேண்டியுள்ளது."

—கவியரசர் தாகூர்.

இமாலய அடிவாரத்தில் . . .

இமயமலை அடிவாரத்தில் இயற்கை எழிலுடன் திகழ்வது கங்ரா பள்ளத் தாக்கு. இயற்கை அன்னை வாரி வழங்கியுள்ள செல்வம் சொல்லத்தரமன்று. தாவர வளம் கொழித்து இருக்கிறது. கால்நடை போன்ற உயிரினங்களுக்கும் குறைவில்லை. எனினும், இவற்றையெல்லாம் இங்குள்ள மக்கள் தங்கள் நலனுக்கு ஏற்ற வகையில் பயன்படுத்திக்கொள்ளவில்லை. இந்தப் பள்ளத்தாக்கின் மண் வளமும், தட்ப வெட்ப நிலையும் தேயிலைப் பயிருக்கு மிகவும் உகந்ததாக இருக்கிறது. நம் நாட்டில் வந்து குடியேறிய பிரிட்டிஷார்தான் இங்கு தேயிலையை முதன் முதலாகப் பயிரிடத் தொடங்கினர்.

உள்ளூர் மக்களாகிய மலைவாசிகளோ, தங்களைச் சுற்றிச் சூழ்ந்து செழிப்புடன் புடைத்து நிற்கும் செல்வ வளத்தைப் பயன்படுத்தும் வகையின்றி வறுமையில் வாடி வந்தனர். அவர்கள், தங்கள் பழங்கால போக்கின்படி ஆடுகள் மேய்த்தும், மலைச்சரிவுகளில் நெல், கோதுமை ஆகியவற்றைப் பயிரிட்டும் பிழைப்பு நடத்தி வந்தனர். விவசாயம் என்றால், அதுகூடப் போதுமான அளவில் அல்ல. நெல், கோதுமைப்பயிர் மூலம் கிடைக்கும் மாசூல் அவர்களது ஆறு மாத தேவைக்குத் தான் காணும். ஆக பட்டினிப்பேயை விரட்ட, குழந்தைகள் உள்பட குடும்பம் முழுவதும் பாடுபட்டாகவேண்டும். கணவனும் மனைவியும் நிலங்களில் வேலை செய்து கொண்டிருக்க, சிறுவர், சிறுமியர் உயர்ந்த மலைப்பகுதிகளில் ஆட்டு மந்தைகளை மேய்ப்பர். வயது முதிர்ந்த பெரியவர்கள், வீடுகளில் தங்கி, ஆட்டு ரோமத்திலிருந்து கம்பளம் தயாரிப்பார்கள். இவ்வாறு வீட்டிலுள்ள அனைவரும் உழைத்துங் கூட, அவர்கள் செம்மையான வாழ்வு நடத்தப் போதிய வருவாய் கிடைப்பதில்லை. கூலிக்கு வேலை செய்பவர்கள், ஆண்கள் என்றால் தினசரி ரூ. 1-ம், பெண்கள் என்றால் 0—80 காசும் பெறுவார்கள். இதுதான், கங்ரா பள்ளத் தாக்கு மக்களின் பொருளாதார நிலையாக இருந்தது.

இவ்வாறு, பின்னணியில் இருந்த இத்த மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்தும் ஒரு ஏற்பாடாக சென்ற ஆண்டில் ஒரு திட்டம் துவக்கப்பட்டது. மத்திய அரசாங்க தரப்பில் ஏற்பாடு செய்யப்படும் கைத்தொழில் முன்னோடித் திட்டங்களில் ஒன்றாக, பலாம்பூர் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இதில் பலாம்பூர், கங்ரா, பைஜ்நாத், டேராகோபிபூர் ஆகிய நான்கு அபிவிருத்தி பிளாக்குகள் அடங்கும்.

இத்திட்டத்தின் கீழ், இப்பகுதிகளில் பல்வேறு தொழில்கள் ஊக்குவிக்கப்பட்டு வருகின்றன. இவையெல்லாம் ஆரம்பக் கட்டத்தில் உள்ளன என்றாலும், இவ்வட்டாரத்தின் பொருளாதார நிலையில் மெல்ல மெல்ல மாற்றம் ஏற்பட்டு வருகிறது. இத்தொழில்கள் வளர்ச்சியடைந்து நிலைபெறும்போது, செல்வ வளமுள்ள புதிய சகாப்தம் உருவாகும் என்பதில் ஐயமில்லை.

மூங்கிலைக் கொண்டு நவீன பொருள்கள்

முன்னேறி வரும் தொழில்களில் ஒன்று, மூங்கிலைக் கொண்டு நவீனமான பற்பல சாமான்களைச் செய்வதும். மூங்கில் தொழில் இந்தப் பிரதேச மக்களுக்கு புதிதல்ல. மலைக்காடுகளில் மூங்கில் ஏராளமாக வளர்கிறது. ஆகையால் மூங்கிலைக் கொண்டு கூடைகள் முதலியவை செய்தல், இவர்களுக்கு பன்னெடுங்காலமாகவே பழக்கத்தில் உள்ள தொழில்தான். ஆனால் அதே கூடைகளை நவீன பாணிகளில் செய்வதும், மற்றும் நாற்காலி, மேஜை, மேஜை விளக்கு, விளையாட்டுச் சாமான்கள், பூந்தொட்டிகள், பழக்கூடைகள், பேனா செருகிகள் முதலியவற்றை நவ நாகரீக மோஸ்தர்களில் செய்வதும் இப்போது இவர்களுக்குச் சொல்லித் தரப்படுகிறது. மூங்கில் தொழில் பயிற்சி—உற்பத்தி நிலையம் ஒன்று கங்ராவில் நிறுவப்பட்டு பயனுள்ள பணியாற்றி வருகிறது. இங்கு செய்யப்படும் பொருட்கள் எளிமையோடு, மிக்க அழகும் கொண்டவையாகும். இதற்கு ஒரு அடையாளம் இப்பொருட்களுக்கு அயல்நாடுகளில் நல்ல மார்க்கெட் உருவாகி வருவதாகும். உதாரணமாக நாரை முதலிய பறவை போன்ற விளையாட்டுச் சாமான்கள், பூந்தொட்டிகள், மேஜை விளக்குகள், கவர்ச்சிமிக்க நவீன கூடைகள் முதலியவற்றிற்கு அமெரிக்காவில் நல்ல கிராக்கி ஏற்பட்டிருக்கிறது. ஆக, மூங்கில் பொருட்கள் ஏற்றுமதி மூலம், ஒரு கணிசமான அளவு அந்நியச் செலாவணி வருமானம், கூடிய விரைவில் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தப் பயிற்சி நிலையம் இத்துணை சிறப்புடன் இயங்குவதற்குரிய பெருமை, நிலைய அதிகாரியான திரு டி. குல்கர்னியைச் சாரும். அவர் ஜப்பானிய நிபுணர்களிடம் தொழில் நுட்பப் பயிற்சி பெற்றவர். இப்போது அவரது தலைமையின் கீழ் உள்ள நிலை

யத்தில் 60 பையன்களும் 75 பெண்களும் பயிற்சி பெற்று வருகின்றனர். இந்த 135 பேரும் ஏற்கனவே கூடை முடைதல் அல்லது தச்சுத் தொழிலில் பாரம்பரியமாக ஈடுபட்டு வரும் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள். இவர்களில் சுமார் 100 பேர் தங்களது 6 மாத பயிற்சி காலத்தை முடித்து விட்டு, நிலையத்திலேயே தினசரி ஊதியத்தின் பேரில் வேலை செய்து வருகின்றனர். ஆக, அத்தகையவர்கள் தங்கள் தொழில் திறமையை வளர்த்துக்கொள்வதோடு, கூடவே வருமானமும் பெறுகின்றனர். நிலையத்தில் தரப்படும் ஊதிய அளவில் அவர்கள் திருப்தியடையும் காலம் வரை, அங்கேயே தொடர்ந்து வேலை செய்கின்றனர். ஆனால், தாங்கள் பெற்ற தொழில் அறிவு, திறமை போதும், இனிச் சொந்தமாக தொழில் நடத்தி அதிக வருவாய் பெறலாம் என்று கருதுகிறவர்கள் நிலையத்தை விட்டுச் சென்று சொந்தத் தொழில் நடத்துகிறார்கள். அவர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களையும், இந்த நிலையம், நிர்ணய விலைகளில் வாங்கிக்கொள்கிறது. ஆகையால் அத்தகையவர்கள், தாங்கள் தயாரிக்கும் பொருட்கள் விற்பனையாகாமல் போகுமோ என்று கவலைப்படத் தேவையில்லை.

வெற்றிக்கு உதாரணம்

இந்தப் பயிற்சி உற்பத்தி நிலையத்தால் எந்த அளவுக்குப் பலன் உண்டாகியிருக்கிறது என்பதற்கு, ஜலாரி கிராமத்தைச் சேர்ந்த தலீப்சந்த் என்பவரது குடும்பம் ஒரு உதாரணமாகத் திகழ்கிறது. இவர் இந்த நிலையத்தில் பயிற்சி பெற்றவர்களில் ஒருவர். இவர், இப்பயிற்சியைப் பெறுவதற்கு முன், தானும் தன் குடும்பத்திலுள்ள மற்ற ஐவருமாகச் சேர்ந்து, பழங்கால முறைப்படி கூடைகள் முடைந்துகொண்டிருந்தபோது, குடும்பம் முழுவதற்கும் கிடைத்த மொத்த வருமானம் நாள் ஒன்றுக்கு ஒரு ரூபாய் கூட அல்ல. இப்போது அவர் பயிற்சி நிலையத்தில் வேலை செய்வதன் மூலம் மாதம் ரூ. 75 வருமானம் பெறுகிறார். வீட்டிலுள்ளவர்கள் தயாரிக்கும் பொருட்களை விற்பதன் மூலம் ரூ. 50 கிடைக்கிறது. ஆக, மாதம் ரூ. 30 சம்பாதித்துக்கொண்டிருந்த குடும்பம் இப்போது ரூ. 125 சம்பாதிக்கிறது.

கலேர் கிராமத்தைச் சேர்ந்த சாரூராம் என்பவரும், நிலையத்தில் பயிற்சி பெற்ற ஒருவர். முன்பெல்லாம் அவர் கூடைகள் முடைந்து கொடுத்து, அதற்குப் பதிலாக விவசாயிகளிடமிருந்து ஏதோ சில படிகள் நெல் ப் பெற்று வந்தார். இதைக் கொண்டு, தன் குடும்பத்தைக் காப்பாற்ற இயலாமல் அவதிப்பட்டுக்கொண்டிருந்தார். அவர், பயிற்சி நிலையத்தில் சேர்ந்து, பூந்தொட்டிகள் செய்வதில் சிறப்பான பயிற்சி பெற்றார். தான் கற்ற அக்கலையை, தன் குடும்பத்தினருக்கும் சொல்லித்தந்தார். இப்போது அவர் குடும்பத்தினர், மூங்கிலாலான அத்தகைய பூந்தொட்டிகளை நாள் ஒன்றுக்கு நான்கு தயாரிக்கின்றனர். இதன் மூலம், செலவு போக நிகர வருமானமாக தினசரி ரூ. 5 முதல் ரூ. 6 வரை கிடைக்கிறது.

இப்படி, பல குடும்பங்கள் சீர்வாழ்வு பெற்று வருகின்றன. இந்த மகிழ்ச்சி தரும் போக்கு மேலும் வளரவிருக்கிறது. ஏனெனில், பலாம்பூர் திட்டப்பகுதியில், மேலும் ஒரு மூங்கில் தொழில் பயிற்சி நிலையத்தை நிறுவ உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

பட்டுப்பூச்சி வளர்த்தல்

கங்ரா பள்ளத்தாக்கு பகுதியின் பொருளாதார முன்னேற்றத்திற்குத் துணை செய்யும் வகையில், இங்கு தோற்றுவிக்கப்பட்டுள்ள ஒரு புதிய தொழில் பட்டுப்பூச்சி வளர்த்தல், ஜப்பானில் இரண்டு ஆண்டுகள், இத்துறையில் பயிறசி பெற்ற ஒரு அதிகாரியின் மேற்பார்வையில், பட்டுப்பூச்சி வளர்க்கும் தொழில் வளர்ந்து வருகிறது. முசுக்கொட்டை மரத்தின் இலைகளில்தான் பட்டுப்பூச்சிகள் வளர்கின்றன என்பது எல்லோருக்கும் தெரியும். இந்த முசுக்கொட்டை மரங்களுக்கு ஏற்ற தட்ப வெப்ப நிலை இங்கு இருக்கிறது. எனவே கடந்த ஆண்டில் மட்டும் சுமார் 150 பேர் இத்தொழிலில் ஈடுபட முன்வந்தனர். மூன்றாவது திட்ட கால இறுதிக்குள், சுமார் 500 குடும்பங்கள் பட்டுப்பூச்சி வளர்க்கும் தொழிலை மேற்கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. அக்குடும்பங்கள் ஒவ்வொன்றும், ஆண்டு ஒன்றுக்கு ரூ. 1,000 முதல் ரூ. 5,000 வரை வருமானம் பெறுவர்.

பட்டுப்பூச்சி வளர்ப்பவர்களுக்கான பொதுவசதி நிலையங்கள் இரண்டு அமைக்கப்பட்டுள்ளன. இவற்றிலிருந்து முசுக்கட்டை மரங்களுக்கான விதைகள், கன்றுகள் முதலியவை விநியோகிக்கப்படுகின்றன. பட்டுப்பூச்சி புழுக்கள், நோயினால் பாதிக்கப்பட்டு மடிந்து போகக்கூடுமாகையால், இந்த நிலையங்கள் முட்டைகளைப் பெற்று, புழு வெளிப்பட்டு சற்று வளர்ச்சியுடையும் வரை பாதுகாத்துத் திருப்பித் தருகின்றன. இப்பணிகளோடு இன்னொன்றும் உண்டு. அதாவது பட்டுப்பூச்சிகள் உருவாக்கித் தரும் கூடுகள், முதலில் பச்சை நிறமாய் இருக்கும். அப்போது அக்கூடுகளினின்றும் பட்டைப் பிரிக்க முடியாது. வெந்நீரில் போட்டு பதம் செய்ய வேண்டும். இதற்குப் பதில் சூடான காற்றைச் செலுத்தி, பட்டுக்கூட்டை முறிக்கும் நவீனமுறை கையாளப்படுகிறது. பட்டுப்பூச்சி வளர்ப்பவர்களுக்கு, இந்த வசதி, பொது வசதி நிலையத்தில், சொற்ப கட்டணத்திற்கு வழங்கப்படுகிறது. இந்தத் திட்டப் பிரதேசத்தில், சென்ற ஆண்டு 150 மணங்கு எடையும் ரூ. 30,000 மதிப்பும் உள்ள பட்டுக்கூடுகள் உற்பத்தியாயின. உற்பத்தி அளவு ஆண்டுக்கு ஆண்டு மிகவும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இப்படி உற்பத்தியாகும் கூடுகள் அனைத்தையும் அரசாங்கமே வாங்கிக்கொள்ள திட்டமிட்டிருக்கிறது. ஏனெனில், திட்டப் பிரதேசத்திலேயே பட்டு நூற்பாலை ஒன்று விரைவில் நிறுவப்பட இருக்கிறது. பட்டு நெசவுக்கான விசைத்தறியும் பிறகு அமைக்கப்படும். இதற்கிடையில் முசுக்கொட்டை மரங்களின் தரத்தை உயர்த்தவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஜப்பானிலிருந்து கொண்டுவரப்பட்ட சில நல்ல ரகங்கள் பரிசோதனை ரீதியில் வளர்க்கப்பட்டதில் வெற்றி கிடைத்திருக்கிறது. இவை, மரங்கள் அளவுக்குப் பெரிதாக வளர்வதில்லை. புதர்கள்போல் செழித்து வளர்கின்றனவே தவிர, உயரத்தில் செல்வதில்லை. அதோடு இந்த ரகங்களின் இலைகள் மிகப் பெரிதாக பூச்சிகள் வளர வசதியாய் உள்ளன. இந்த ரகத்தில் 50 ஆயிரம் கிளைகள், ரஜியானு பண்ணையில் நடப்பட்டுள்ளன. இவற்றைக்கொண்டு இவ்வட்டாரத்தின் தேவை முழுவதையும் பூர்த்தி செய்ய முடியும். இத்தகைய சீரான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதால், அடுத்த பத்தாண்டுகளில் கங்ரா மாவட்டம், இந்தியாவிலேயே பட்டுத் தொழில் முன்னேற்றம் அடைந்த கேந்திரங்களில் ஒன்றாகத் திகழ்ந்தால் வியப்படைவதற்கில்லை.

கம்பளம் நெய்தல், இப்பகுதியில் கர்ண பரம்பரையான ஒரு தொழிலாக இருந்து வருகிறது. இதிலும் சில திருந்திய முறைகளைக் கையாண்டு அயல்நாடுகளுக்குச் சுலபமாக ஏற்றுமதியாகக் கூடிய மலிவான கம்பளங்கள், ஜமக்காளங்கள் தயாரிப்பில் இப்பகுதி மக்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இவ்வகையில் மூன்று பயிற்சி நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. இவற்றில் 135 பேர், (பெரும்பாலும் பெண்கள்) பயிற்சி பெறுகின்றனர். இரண்டாண்டு பயிற்சி முடிந்தபின், இவர்கள் தலா தினசரி ரூ. 3 முதல் ரூ. 4 வரை சம்பாதிக்க முடியும். இவ்வாறு சுமார் 100 குடும்பங்கள் பயனடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தேயிலைத் தொழிலில் பெரும் மாற்றம்

கங்ரா வட்டாரத்திலேயே மிக முக்கியமான தொழில் தேயிலை உற்பத்திதான். சுமார் அரை நூற்றுண்டுக்குமுன், இங்கு பிரிட்டிஷார் தேயிலையைப் பயிரிடத் தொடங்கினர். பிறகு இது மெல்ல மெல்லப் பரவியது. இன்று கங்ரா வட்டாரத்தில் தேயிலைத் தோட்டம் வைத்திருப்பவர்களின் எண்ணிக்கை 2,500 ஆக பெருகியிருக்கிறது. இத்தொழில் சம்பந்தமான பல்வேறு வேலைகளில் 10,000 தொழிலாளர்கள் ஈடுபட்டு உள்ளனர்.

இந்த அளவுக்குத் தொழில் பரந்து விரிந்து வளர்ச்சியடைந்தாலுங்கூட, தேயிலை சாகுபடியிலும் சரி, பிறகு இலைகளைப் பறித்து பதனம் செய்வதிலும் சரி, புதிய முறைகள் ஏதும் கையாளப்படாமல், அபிவிருத்தியின்றி இருந்து வந்தது. புதிய தேயிலை ரகங்களைப் பயிர் செய்யும் முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை. தேயிலை உற்பத்தி சம்பந்தமான பல வேலைகளும், கைகளாலேயே செய்யப்பட்டு வந்ததால் தேயிலையின் தரம் குறைந்து, அந்நிய நாடுகளில் கிராக்கி குறைந்தது. அதோடு தேயிலை விற்பனைக்கு சீரான அமைப்புகள் இல்லாததால், இடைத்தரகர்களான வியாபாரிகள், தேயிலை பயிரிடும் விவசாயிகளைச் சுரண்டி வந்தார்கள். இந்த முறைகளின் விளைவாக, தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் மிகவும் பாதிக்கப்பட்ட நிலையில் இருந்தார்கள்.

இந்த அவல நிலையை மாற்றியமைக்க சில ஆண்டுகளுக்குமுன், அகில இந்திய தேயிலை போர்டு தன் கவனத்தைச் செலுத்தியது. சில புதிய தேயிலை ரகங்களைச் சாகுபடி செய்ய ஊக்கமளிக்கப்பட்டது. அதேபோல் விவசாயிகளுக்கு உதவி மான்ய அடிப்படையில் திருந்திய விவசாயக் கருவிகளும், ரசாயன உரங்களும் தந்து அவற்றை அதிக அளவில் உபயோகிக்கும்படி விவசாயிகள் ஊக்குவிக்கப்பட்டார்கள். இவையெல்லாம் ஒருபுறமிருக்க, சென்ற ஆண்டு பீர் தேயிலை உற்பத்திக் கூட்டுறவுச் சங்கத்தை அமைத்ததுதான் தொழில் வளர்ச்சிக்கு மிகப் பெரிய தூண்டுகோலாகும். இச்சங்கத்தில் 160 தேயிலைத் தோட்டக்காரர்களும், இங்குள்ள 'பிளாக்'கைச் சேர்ந்த எல்லா பஞ்சாயத்துகளும் அங்கம் வகிக்கின்றனர். இச்சங்கம், மிகவும் நவீனமான தொழிற்சாலை ஒன்றை நிர்மாணித்திருக்கிறது. இங்கு நாள் ஒன்றுக்கு 1,500 ராத்தல் பதம் செய்யப்பட்ட தேயிலை உற்பத்தியாகிறது. சில மாதங்களுக்குமுன் ஆரம்பிக்கப்பட்ட இத்தொழிற்சாலை, ஆண்டு ஒன்றுக்கு ரூ. 1 லட்சம் லாபம் பெறும் எனத் தெரிகிறது.

இடைத் தரகர்களான வியாபாரிகளின் சுரண்டலை ஒழிக்க கங்ரா தேயிலைத் தோட்டக்காரர்கள் விநியோக, விற்பனை கூட்டுறவு தொழில் சங்கம் நிறுவப்பட்டிருக்கிறது. அதன் தலைமை நிலையம் அமிருதசரசில் இருக்கிறது. அது வேலை செய்யத் தொடங்கி 3 மாதங்கள்தான் ஆகின்றன. ஆனால் அதற்குள் நல்ல பலனளிக்கத் தொடங்கிவிட்டது. இச்சங்கத்தின் மூலம் விற்பனையாகும் தேயிலையின் சராசரி விலை, கிலோவுக்கு ரூ. 3-90 ஆகும். இதற்கு முன் இதே தேயிலையை, கிலோ ரூ. 1-75 முதல் ரூ. 2-00 வரை விற்க வேண்டியிருந்தது. சங்கம் ஏற்படுத்தப்பட்டதன் பலனாக, கங்ரா மாவட்ட தேயிலைத் தோட்டக்காரர்கள் இந்த நடை முதல் ஆண்டில் மட்டும் ரூ. 10 லட்சம் கூடுதல் வருமானம் பெறுவர் என மதிப்பிடப்படுகிறது.

இத்தகைய புதிய முயற்சிகளின் மூலம் கங்ரா பள்ளத்தாக்கு மக்களின் வாழ்க்கை நிலை விரைவில் குறிப்பிடத்தக்க அளவு உயரும் எனத் தாராளமாக நம்பலாம்.

பொங்கலும் கும்மியும்

(திரு பெ. தூரன், பிரதம ஆசிரியர், "கலைக்களஞ்சியம்", சென்னை.)

"கும்மியடிக்கலாம்; வாருங்கள்" என்று கூப்பிடும்போதே உள்ளத்திலே எத்தனை மகிழ்ச்சி பொங்குகிறது! பெண்களுக்குத்தான் எத்தனை உற்சாகம்! சிறுமிகளின் குதூகலத்தைச் சொற்களினாலே சொல்லக்கூட முடியாது.

பொங்கல் விழாவிற்கும், கும்மிக்கும் எப்படியோ ஓர் அலாதியான தொடர்பு ஏற்பட்டிருக்கிறது; அந்தத் திருவிழாவின்போது முக்கியமாகக் கிராமங்களிலே கும்மியடிக்காத இளம் பெண்களே இருக்க மாட்டார்கள். இளம் பெண்கள் கும்மியடிக்கும் போது, மக்களெல்லாம் அதைக் கண்டுகளிக்கத் திரண்டு வந்துவிடுவார்கள். அப்படித் திரண்டு வந்த மக்களின் முகங்களிலே தாண்டவமாடுகின்ற சிரிப்பைத்தான் என்னவென்று சொல்லுவது! கும்மி என்றால் வெவ்வேறு சந்தங்களில் கைதட்டி ஆடிவருவதுமட்டுமல்ல, அந்த சந்தங்களுக்குத் தகுந்தவாறு பாட்டுப் பாடுவதும் ஒரு முக்கியமான அம்சம். கும்மிக்குத்தான் எத்தனை வகையான சந்தங்களிலே, எத்தனை வகையான பாட்டுக்கள் உருவாகியிருக்கின்றன! தாள லய நயங்களோடும், ஜதிகளோடும் கால் தட்டி, வளைந்தும் நெளிந்தும் ஆடுகின்ற கும்மியாட்டத்திற்குத் தகுந்தவாறு ஆயிரக்கணக்கான தமிழ்ப் பாடல்கள் இருக்கின்றன.

இந்தக் கும்மிப்பாட்டின் பெருமையை அறிந்து தான் பாரதியார் பெண்கள் விடுதலையைப் பற்றிப் பாடவரும்பொழுது,

'கும்மியடி தமிழ்நாடு முழுதும்
குலுங்கிடக் கைதட்டிக் கும்மியடி'

என்று கும்மிப் பாட்டே பாடிவிடுகிறார். பாரதியார் மட்டும்தானா அப்படிப் பாடியிருக்கிறார்? தெய்வ மணங் கமழும் அருட்பாக்களைப் பாடிய இராம லிங்க வள்ளலாரையும் இந்தக் கும்மிப் பாட்டு உள்ளங்கவர்ந்திருக்கின்றது.

கிராமங்களிலே கும்மியடிக்கும்போது, பாடப் படுகின்ற ஒரு சில பாடல்களை இப்போது நாம் பார்ப்போம்.

விநாயகப்பெருமான் இல்லாத ஊர் உண்டா? அவர் 'ஓம்கார' சொரூபமான பரம்பொருளின் வடிவம்! பரம்பொருள் இல்லாத இடமே இல்லை என்று பெரியோர்கள் பலரும் நமக்கு எடுத்துக் கூறி இருக்கிறார்கள். ஆனால் எங்கும் இருக்கின்ற அந்தப் பரம்பொருளை நம்மால் அவ்வளவு எளிதிலே காண முடிகின்றதா? அதுதான் இல்லை. இந்தக் கருத்தையே ஓர் எளிமையான நாட்டுப்புறக் கும்மிப் பாடல் மிக அழகாக எடுத்துச் சொல்லுகின்றது; பிள்ளையார் இங்கே இருக்கிறார், அங்கே இருக்கிறார் என்று சொல்லக் கேட்டுத் தேடிக்கொண்டே போனால், அவர் எங்கேயும் கண்ணுக்குப் புலனாவதில்லை; செட்டித் தெருவிலே, வாணிகத் தெருவிலே, கத்தரித் தோட்டத்திலே—இவ்வாறு பல இடங்களில் தேடியும் அவரைக் காண முடியவில்லையாம்.

பிள்ளையார், பிள்ளையார்—அவர்
எங்கெங்கே பிள்ளையார்
செட்டிமார் தெருவிலே
செண்டாடுறார் பிள்ளையார்

அங்கேயும் போய்ப்பார்த்தேன்
அவர் எங்கேயோ பிள்ளையார்
வாணியர் தெருவிலே—அவர்
வாதாடுறார் பிள்ளையார்
அங்கேயும் போய்ப் பார்த்தேன்
அவர் எங்கேயோ பிள்ளையார்
கத்திரித் தோட்டத்தில்
களை கொத்துறார் பிள்ளையார்
அங்கேயும் போய்ப் பார்த்தேன்
அவர் எங்கேயோ பிள்ளையார்
பிள்ளையார், பிள்ளையார்—அவர்
எங்கெங்கே பிள்ளையார்.

வாசலிலே காய்த்துத் தொங்குகின்ற பாகற்காயையும் வாழைக்காயையும் பற்றி ஏதோ பேசப் படுவதுபோல ஒரு பாட்டுத் தொடங்குகின்றது. ஆனால் அதன் குறிப்பெல்லாம் வேறொரு முக்கியமான விஷயத்தைப் பற்றியது. நகைச்சுவையான விஷயம்; வேடிக்கை செய்வதான விஷயம். கும்மி தட்டி இப்பாட்டு முடியும்போது, கலீரென்று எல்லோரும் சிரித்துவிடுவார்கள். அப்படி அதிலே பொருளடங்கியிருக்கிறது. பாட்டு முதலில் துவங்கும்போது, கசப்பான பாகற்காயைப் பற்றித்தான் துவங்குகிறது. ஆனால் பாட்டிலே கசப்பு இல்லை; அது முடியும்போது, அத்தனையும் இனிப்பு! பாட்டைப் பார்க்கலாம்.

வாசலிலே பாகற்காய்
தொங்குதடி வாழைக்காய்
மாமன் வரான் பார்த்துக்கோ
பணங் கொடுப்பான் வாங்கிக்கோ
சுருக்குப் பையிலே போட்டுக்கோ
சுண்ணாம்பு வெற்றிலை கூட்டிக்கோ
தட்டானை இங்கே இட்டுக்கோ
தாலி வாங்கிக் கட்டிக்கோ.

வேறொரு பாட்டு இந்தப் பாகற்காயைப் பற்றியே பேசுகிறது. ஆனால் அதிலே குறித்துள்ள விஷயம் வேறு. மாமனை அல்லது மைத்துனனை எல்லோரும் கேலி செய்வார்கள். எப்படியாவது அவர்களிடம் சூழ்ச்சி செய்து, தந்திரமாக நகையாடத் தொடங்குவார்கள். இப்படி விளையாடுவதில் இளஞ்சிறுமிகள்தான் அதிகமான ஆர்வங் கொண்டிருப்பார்கள். எல்லாம் விளையாட்டாகத்தான். ஆனால் இப்படிப்பட்ட விளையாட்டை அண்ணன் தம்பிகளிடத்திலே செய்யமாட்டார்கள். விளையாட்டாகவும் அவர்களைக் காட்டிக் கொடுத்து விடமாட்டார்கள். அந்த உள்ளப்பாங்கு, இந்தப் பாகற்காய்ப் பாட்டிலும் வெளிப்படுகிறது. அண்ணன் நட்ட பாகற் கொடியிலே காய்த்துத் தொங்கிய காய் அதிகமான கசப்பாக இருந்துவிடக் கூடாதாம். அப்படி இருந்தால் வீட்டிற்கு வந்திருக்கும் மைத்துனன்மார்கள் அண்ணனைக் கேலி செய்வார்களல்லவா? அப்படிச் செய்யாமலிருக்க வேண்டுமென்று, பாகற்காய்க் குழம்பில் சர்க்கரையை கொட்டும்படி சொல்லுகிறாள் ஒரு பெண்.

ஒரு கொடியைத் தூக்கத் தூக்க
ஓரா யிரம் பாகற் காய்
அறுக்கலாமோ பொரிக்கலாமோ
அத்தான் தின்கிற பாகற்காய்
ஆரு நட்ட பாகற் காய்
அண்ணன் நட்ட பாகற் காய்
கசக்குமோ புளிக்குமோ
கலந்து கொட்டடி சர்க்கரையை.

கும்மியடிக்கும்போது, பாட்டு இத்துடன் நின்றுவிடாது. "இருகொடியைத் தூக்கத்தூக்க இரண்டாயிரம் பாகற்காய்", "மூன்று கொடியைத் தூக்கத்தூக்க மூவாயிரம் பாகற்காய்" என்று இப்படியே தொடர்ந்துபோகும். மற்ற வரிகளெல்லாம் முன்போலவே மாறுதலின்றி இருக்கும். பாட்டு நீண்டு கும்மியின் வேகமும் அதிகமாகும் போது, அத்தனையும் சர்க்கரையாக இருக்குமென்று கூறத் தேவையில்லை.

ஏதாவது ஒன்றை வேண்டுமென்று தேடப் போனால், அது அத்தனை சுலபமாகக் கிடைத்து விடுகிறதா? தேடப்போகும் போதுதான், அது கிடைப்பதில்லை. இந்த உண்மையை எடுத்துக் காண்பிப்பதைப்போல, ஒரு கும்மிப் பாட்டு அமைந்திருக்கிறது.

பச்சைப் பச்சைத் தவக்களை
பதுங்கிப் பாயும் தவக்களை
எத்தனை நெல்லுக்கு வாழ்க்கைப் பட்டாய்
கோடி நெல்லுக்கு வாழ்க்கைப் பட்டேன்
கோடி நெல்லை குத்தி வாரச்
சித்திரப் பெண்ணையும் காணோமாம்
சித்திரப் பெண்ணுக்கு முத்திரை கொடுக்கக்
கணக்குப் பிள்ளையை காணோமாம்
கணக்குப் பிள்ளையைத் தட்டியெழுப்பிடக்
கைக் குழந்தையைக் காணோமாம்
கைக் குழந்தைக்குப் பால் கொடுத்திட
டெல்லி எருமையை காணோமாம்
டெல்லி எருமையை மேய்த்து வந்திட
இடைப் பையனையும் காணோமாம்
இடைப் பையனுக்கு கஞ்சிவார்க்க
இடைச் சிறுக்கியைக் காணோமாம்
இடைச் சிறுக்கிக்குப் பேனு பார்க்க
குரங்குக் குட்டியைக் காணோமாம்

தக்கிணி என்ற சொல்லை நீங்கள் அறிந்திருப்பீர்கள். ஒரு சிறிய அளவு என்று அதற்குப் பொருள். துக்கிணி என்கின்ற சொல்லும் அற்பம் என்ற பொருளிலே வழங்குகிறது. இப்படி ஒரு பொருட்டாக மதிக்கப்படாத இளஞ் சிறுமியர்கள் என்றாலும் உங்கள் வாசலிலே கும்மியடிப்பதற்கு நாங்கள் வந்திருக்கிறோம் என்று சொல்லுவதுபோல ஒரு பாட்டுத் தொடங்குகிறது. அதன் சந்தமும் வேகமும் நம்மை மகிழ்ச்சியிலே ஆழ்த்துவதோடு அந்தச் சிறுமிகளிடத்திலே பரிவு கொள்ளச் செய்கின்றன.

தக்கிணித் தக்கிணி நாங்கதான்—ஒரு
தருமத் தக்கிணி நாங்கதான்
பச்சைப் பாவாடைக்கு மெருகுகுத்தும்
பார்ப்புப் பசங்களும் நாங்கதான்
அடுக்குச் சட்டியில் முறுக்குச் சுட்டு
அறியாத பசங்க நாங்கதான்
தெருக்கு முன்னால் கும்மியடிக்கும்
தேவர் பசங்க நாங்கதான்
நாலா பக்கமும் மண்ணெடுத்து
நாணயமாகவோர் ஏரிகட்டி
ஏரிக்குள்ளே பட்கு போகுது
ஏலேலோ கொட்டுங்க தோழிப்பெண்காள்!
தக்கிணித் தக்கிணி நாங்கதான்—ஒரு
தருமத் தக்கிணி நாங்கதான்.

இவ்வாறு பல பாடல்களைப் பாடிக் கும்மியடிக்கும் சிறுமிகள், கடைசியாக வாழ்த்துப் பாடல் பாடாமலும் செல்வதில்லை. பொங்கல் கோலாகத்திலே, உண்டு மகிழ்ந்த களிப்பிலே, ஆடும் ஆட்டத்தின் ஒய்யாரத்திலே, இந்த வாழ்த்துப் பாட்டு வருகிறது. இவ்வாழ்த்துப் பாடலும், கும்மியடித்தே தொடங்கி முடிகிறது.

வாழ்த்துகிறோம் வாழ்த்துகிறோம்
முக்காலும் வாழ்த்துகிறோம்
அண்ணனும் தம்பியும்
அழகு சமைந்து வாழணும்
மாமனும் மச்சானும்
மலைபோல வாழணும்
சுரையாய்ப் படர்ந்த வீடு
துரைவீடு ஆகணும்
பீர்க்குப் படர்ந்தவீடு
பெரியவீடு ஆகணும்.

பொங்கல் திருநாளிலே இந்தச் சிறுமியர்களுடன் சேர்ந்துகொண்டு, நாமும் இவ்வாறு எல்லோரையும் வாழ்த்தவேண்டும் என்று தோன்றுகிறதல்லவா?

பொங்கல் என்றால், இது இன்பத்தின் பொங்கல். பொங்கலோ பொங்கல்!

"மிகப் பழைய கற்காலத்தில் ஒவ்வொரு மனிதனும் உயிரைக் காப்பாற்றிக்கொள்ளும் ஒரே நோக்கத்துடன் உணவைத் தேடித் தனித் தனியே அலைந்தான். அவர்களுடைய உணர்ச்சி அதிகமாகவும், பழக்கங்கள் வரன் முறையற்றதாகவும், நடத்தை சமுதாயத்துக்கு ஒத்து வராததாகவும் இருந்து வந்தன. ஆனால் ஆற்றங்கரைகளில், உணவு நிரம்பக் கிடைத்தமையின் சமுதாயங்கள் ஏற்பட்டு, நாகரிகங்கள் பிறந்தன."

"கன்னியாக இருந்த நிலத்தை உழுது, மனிதர்கள் ஆண்டுதோறும் நிறைந்த தானியங்களைப் பெற்றனர். ஒருவரை ஒருவர் இழக்கச் செய்வதைக் காட்டிலும், ஒருவருக்கொருவர், உதவி செய்து கொள்வதால், அதிக இலாபம் பெறலாம் என்பதைக் கண்டனர். உணவுப் பிரச்னை தீர்ந்தவுடன், மனிதனுடைய இயல்பில் அமைந்துள்ள சமுதாய இயல்பு தூண்டப்பெற்றது. பூமித்தாயின் அழைப்பின்பேரில், மனிதர்கள் ஒன்றுயமர்ந்து விருந்துண்ணும் பொழுது அவர்கள் கொண்ட பொது உணவின் பயனாக, தனிப்பட்ட அவர்களுடைய வாழ்வில் சகோதரத்துவ அடிப்படையைக் கண்டார்கள்."

—கவியரசர் தாகூர்.

பாரதத்தை ஏற்றமுறச் செய்வோம்

('தேவிதாசன்'—சென்னை)

பாட்டிற்குப் பண்போன்ற பாட்டாளி, உன்தொண்டு
நாட்டிற்குக் கண்ணாகும் ; நல்லவனே நீ வாழ்க !

மக்கள்தம் உயிர்நாடி மகத்துவத்தைக் கணக்கிட்டுப்
பக்கத்தில் மருத்துவனாய்ப் பசிப்பிணியைத் தீர்ப்பவனே

தேசத்தின் முதுகெலும்பாய்த் திகழ்கின்ற கிராமநல
நேசத்துப் பிம்பமடா, நின்போன்றார் இல்லையடா !

சேவலதை நீ எழுப்பிச் சென்றிடுவாய் நிலத்திற்கு
ஆவலுடன் ஏருழுதே அக்கறையாய் விதைத்திடுவாய்!

நெற்பயிருக்கும் உயிரான நீரிறைத்து வளர்த்திடுவாய் !
கற்பவர்தம் முயற்சியைப்போல் கதிரறுத்து நெற்குவிப்பாய்!

உன்னுழைப்பின் பரிசாக ஊதியமோ ஒருபாதி ;
உன்னெசமான் மண்ணிற்கே உரித்தாகும் மறுபாதி !

இப்படித்தான் மனக்கசப்பாய் இருப்பதனை மாற்றிடவே
எப்படியும் சமதர்ம எழிற்காட்சி வருகிறது !

தேவைக்கு மேலாகச் சேர்த்திடுவோர் இனியில்லை ;
தேவைக்கும் அளவுள்ள சித்தாந்தம் இனியுண்டு !

சூழ்ச்சிக்கும் இடமில்லை ; சுயநலக்காரர் பதுக்கலினால்
வீழ்ச்சி தரும் நிலையில்லை ; வீண்வதந்தி கிடையாது !

மேனாட்டுத் தொழில்நுட்ப விஞ்ஞான அறிவடைந்து
மேனாட்டு முறைப்படியே விவசாயம் செய்திடுவாய் !

வெள்ளத்தில் புனல்மடக்கி விதவிதமாய் அணையிட்டுப்
பள்ளமுடை ஏரிகளில் நீர்தேக்க அரசுண்டு ;

மின்வசதி, சத்துரங்கள், வித்துக்கள், கூட்டுறவுப்
பொன்வசதி யால்விளைச்சல் பெருக்கிடுவாய், புகழோங்க !

அஞ்சவைக்கும் பஞ்சத்தை அழித்திடுவாய் ; பிறநாட்டார்
பஞ்சமெனக் கையேந்தப் பரிவுடனே உதவிடுவாய் ;

நல்லவனாய் வாழ்ந்திடவும் நாட்டு வளம் வளர்த்திடவும்
எல்லாரும் உழைத்திடவே இன்பங்கள் சுவைத்திடவே !

அண்ணல்நம் காந்திமகான், ஆசியாவில் சோதியவன்
எண்ணம்போல் பாரதத்தை ஏற்றமுறச் செய்வாயே !

பஞ்சாயத்து நடத்தும் தபால் ஊழியம்

கிராமப் புறங்களில் தபால் வசதிகளைப் பெருக்குவதற்கான நூதன திட்டம் ஒன்று மகாராஷ்டிராவில் மேற்கொள்ளப்பட்டு வெற்றிகரமாக நடந்து வருகிறது. கிராமப் பஞ்சாயத்துகளின் உதவி, ஒத்துழைப்புடன் நடைபெறும் இத் திட்டம், இந்தியாவிலேயே முதன் முறையாகும்.

பம்பாய் தபால் சர்க்கிளைச் சேர்ந்த 6 இடங்களில், இத் திட்டம் ஒரு பரிசோதனை ரீதியாக சென்ற மே 14-ம் தேதி ஆரம்பிக்கப்பட்டது. வடா என்ற கிராமம் இத்திட்டப் பகுதியின் கேந்திரமாக விளங்குகிறது. இக்கிராமத்திற்குத் தினசரி தபால் சர்வீஸ் இருக்கிறது. ஆனல் வடாவைச் சுற்றியுள்ள சுமார் 20 கிராமங்களுக்கு வாரம் ஒரு முறைதான் தபால் பட்டுவாடா உண்டு. இப் பகுதியில் நல்ல ரோடு வசதிகள் இருந்துங்கூட, தபால் வசதி நிலைமையில் அபிவிருத்தி ஏற்படவில்லை. சமுதாய நல அபிவிருத்தி திட்டத்தாலும், இதர திட்டங்களாலும் இக் கிராமங்கள் செல்வ வளம் பெற்று வருகின்றன. பால் பண்ணைத் திட்டம் ஒன்று வெற்றிகரமாக இயங்கி வருகிறது. இது போன்றவற்றின் பலனுக, மக்களது வாழ்க்கைத்தரம் உயர்ந்திருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் இங்குள்ள மக்கள் பம்பாய் மற்றும் மாநிலத்தில் இதர நகரங்களில் உள்ள தங்கள் உறவினர்கள், நண்பர்களுடன் அடிக்கடி கடிதத் தொடர்புகொள்ள விரும்புகிறுர்கள். பத்திரிகைகள் உடனுக்குடன் கிடைக்கவேண்டும் என ஆசைப்படுகிறுர்கள். ஆகையால் வாராந்திர தபால் பட்டுவாடா முறை அவர்களுக்குத் திருப்தியளிப்பதாய் இல்லை. எனவே இவர்களுடைய தேவையைப் பூர்த்தி செய்யும் ஒரு புது முயற்சியாகத் தோன்றியதுதான் இந்தப் பஞ்சாயத்து தபால் ஊழியத் திட்டம்.

ஊதியம் பெருத ஊழியர்கள்

இத்திட்டத்தை அமுல் நடத்த வசதியாக இப் பகுதியில் பஞ்சாயத்து தலைமை நிலையங்களான ஆறு இடங்களில் தபால் கேந்திரங்கள் அமைக்கப்பட்டன. வடா தபால் நிலையத்தில் தினசரி வந்து சேரும் தபால்களை, அங்கிருந்து மேற்படி ஆறு கேந்திரங்களுக்கு தபால்கார்ரர்கள் எடுத்துச் செல்கிறுர்கள். ஒவ்வொரு கேந்திரத்துடனும், அதைச் சுற்றியுள்ள சில கிரர்மங்கள் இணைக்கப்பட்டுள்ளன. அக் கிராமங்களிலிருந்து தொண்டர்கள் வருகிறுர்கள். அவர்கள், தத்தம் கிராமம் சம்பந்தப்பட்ட தபால்களை வாங்கிச் செல்வதோடு, தங்கள் கிராமத்திலிருந்து கொண்டுவந்த தபால்களையும் கேந்திரத்தில் சேர்த்துவிடுகிறுர்கள். அவை கேந்திரத்திலிருந்து வடா தபால் நிலையத்திற்குச் செல்கின்றன. இவ்வாறு இரு பக்கங்களிலும், தபால் போக்குவரத்து தபால் ஊழியர்கள், தொண்டர்களின் கூட்டு முயற்சி மூலம் நடைபெறுகிறது.

இந்த இருவழி தபால் போக்குவரத்துக்குப் பின்னணிபலமாக இருப்பவை கிராமப் பஞ்சாயத்துக்கள்தான். ஏனெனில், அவைதான் இந்த ஊழியத்திற்கான ஏற்பாடுகளைப் பொறுப்பேற்று நடத்துகின்றன. தபால்காரர்களாகச் சேவை செய்யும் தொண்டர்களை வழங்குவது பஞ்சாயத்துக்கள்தாம். ஒவ்வொரு கிராமத்தைச் சேர்ந்த தொண்டர்களும், தங்களுக்குள் 'முறை' வைத்து, மாறி மாறி வேலை செய்கிறுர்கள். அவர்கள் தங்கள் ஊழியத்திற்கு ஊதியம் ஏதும் வாங்குவதில்லை.

இன்னெரு முக்கிய பலன்

இந்தத் திட்டத்தால், சிறிய கிராமங்களில் கூட தபால்கள் சீக்கிரம் பட்டுவாடா ஆகின்றன. முக்கியமாக இன்னெரு பலனும் ஏற்பட்டிருக்கிறது. தபால்காரர் வரும் நேரத்தில், தபாலைப் பெற வேண்டிய நபர் வீட்டில் இல்லாவிட்டால், மணியார்டர், ரிஜிஸ்தர் தபால் போன்றவை பட்டுவாடா ஆவதில் தாமதம் ஆகிறது. இத்தகைய தபால்களைப் பெறுபவர்கள், தாம் இன்னுர்தான் என்பதற்குப் பிறரைக் கொண்டு அடையாளம் காட்ட வேண்டியும் இருக்கிறது. இந்தச் சங்கடங்கள் புதிய திட்டத்தின்கீழ் அகன்று விட்டன. ஏனெனில் இத்தகைய தபால்களை எல்லாம் பஞ்சாயத்து தபால் கேந்திரத்திலேயே பட்டுவாடா செய்யப்படுகின்றன. அவ்விதம் செய்வதற்குமுன், தபாலுக்குரியவருக்குத் தகவல் அனுப்பப் படுகிறது. அவர், தமக்குச் சௌகரியப்பட்டபோது, தபால் கேந்திரத்திற்கு வந்து தபாலைப் பெற்றுக்கொள்ளலாம். அவரை அடையாளம் காட்டுவதும் சிரமம் இல்லாமல் நடக்கிறது, தபால் கேந்திரத்தில் தபால் இலாகா சிப்பந்தி, பஞ்சாயத்து தபால் ஏஜெண்டு, கிராமத் தொண்டர் ஆகிய மூவரும் ஒரே நேரத்தில் இருப்பதால் அடையாளப் பிரச்னை சுலபமாகத் தீர்ந்து விடுகிறது.

இதுவரை தங்களுக்குக் கிடைக்காதிருந்த வசதிகளையெல்லாம் பெறுவதில் கிராம மக்கள் அக்கறை காட்டத் தொடங்கியுள்ளார்கள் என்பதற்கும், இவ்வாறு தங்கள் வாழ்க்கை மேம்பாட்டுக்கு ஒன்றுபட்டு செயல்படும் மனப்பூர்வமான விருப்பம் அவர்களிடையே தோன்றியுள்ளது என்பதற்கும், இந்தப் பஞ்சாயத்து தபால் ஊழியத்திட்டம் மேலும் ஒரு உதாரணமாகும். எங்கோ ஒதுக்குப்புறமாக இருந்த வடா பகுதி கிராமங்கள், இத் திட்டத்தின் பயனுக, இன்று நாட்டின் நடுப் பகுதிக்கே வந்துவிட்டதெனலாம்.

—0—

கிராமங்களுக்கு மின்சாரம்

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

கிராமங்களுக்கு மின்சக்தி வசதி வழங்கும் விஷயத்தில் தமிழ்நாடு முன்னணியில் நிற்கின்றது. கிராமங்களில் மின்சக்தி வசதியை விஸ்தரிப்பதனுல் அரசாங்கத்திற்கு வியாபார ரீதியில் இலாபம் கிடையாது. இதனுல், கிராமச் சமுதாயத்திற்கு பல்வேறு நன்மைகள் ஏற்படும் என்பதை கருத்தில் கொண்டு, அரசாங்கம் இத்திட்டத்தினே மேற்கொண்டு முழுமூச்சுடன் நிறைவேற்றி வருகிறது. விவசாய காரியங்களுக்காக மின்சக்தி உதவி கொண்டு தண்ணீர் இரைப்பதை ஊக்குவிக்கும் பொருட்டு, மின்சக்தியைப் பயன்படுத்தும் விவசாயிகளுக்குப் பல்வேறு சலுகைகள் வழங்கப்படுகின்றன. மிகக் குறைந்த கட்டணமாகிய யூனிட் ஒன்றுக்கு 8 ந.பை. வசூலிப்பதும், இச்சலுகைகளில் ஒன்ருகும்.

மூன்ருவது திட்டக் குறியளவு

மூன்ருவது திட்டக் காலத்தில், 8,000 கிராமங்களுக்கு மின்சக்தி விஸ்தரிக்கப்பட வேண்டும் என்பது நம் குறியளவு. திட்டத்தின் முதல் மூன்று ஆண்டுகளில் 5,917 கிராமங்களுக்கும். குக்கிராமங்களுக்கும் மின்சக்தி வசதி விஸ்தரிக்கப்பட்டது. 1964, மே மாதம் 1-ம் தேதியன்று மொத்தம் 16,826 கிராமங்கள், குக்கிராமங்கள், மின்சக்தி வசதி பெற்றிருந்தன. மூன்ருவது திட்டத்தின் இறுதியில் 19,000 நகரங்கள், கிராமங்கள், குக்கிராமங்களுக்கு மின்சக்தி வசதி விஸ்தரிக்கப்படும். மூன்ருவது திட்ட கால அளவில் 100,000 விவசாய பம்பு செட்டுகளுக்கு மின்சக்தி இணைப்பு கொடுக்கப்பட வேண்டும் என்பது இலக்கு. ஆனுல், திட்ட கால அளவின் முதல் மூன்று ஆண்டுகளிலேயே 70,817 விவசாய பம்பு செட்டுகளுக்கு மின்சக்தி இணைப்பு கொடுக்கப்பட்டது. 1964, மே மாதம் 1-ம் தேதியன்று 190,434 விவசாய பம்பு செட்டுகள் சென்னை மின்சக்தி இணைப்பிலிருந்து பெற்ற மின்சக்தியைக் கொண்டு செயல்பட்டு வந்தன. மூன்ருவது ஐந்தாண்டுத்திட்ட கால அளவுக்குள் 220,000 விவசாய பம்ப் செட்டுகளுக்கு மின்சார இணைப்பு கொடுக்கப்பட்டுவிடும்.

வழக்கமாக உள்ள பாசன ஆதாரங்கள் யாவும் ஏற்கெனவே பயன்படுத்தப்பட்டுள்ள ஒரு மாநிலத்தில் கிராமங்களுக்கு மின்சார வசதி அளிக்கும் திட்டத்தை தீவிரமாக நிறைவேற்றுவதன் மூலம் உணவு உற்பத்தி அதிகரிப்பினை எளிதாக மதிப்பிட முடியும். வடார்க்காடு மாவட்டத்தில், மின்சார சக்தியினுல் இயங்கும் பம்பு செட்டுகளைக்கொண்டு இறைவைப் பாசனம் நடைபெறுவதால், அம் மாவட்டம் உணவு உற்பத்தியில் தஞ்சாவூர் மாவட்டத்திற்கு அடுத்தபடியாக நிற்கிறது. கிராமங்களுக்கு மின்சார வசதியை விஸ்தரிப்பதனுல், மொத்தத்தில் மாநிலம் முழுவதற்கும் மறைமுகமான நன்மைகள் பல ஏற்படுவதனுல், இத் திட்டத்தை அரசாங்கம் தீவிரமாகத் தொடர்ந்து நிறைவேற்றுகிறது.

மூன்ருவது திட்டக்கால அளவின் முதல் மூன்று ஆண்டுகளில் கிராமங்களுக்கு மின்சார வசதியை விஸ்தரிப்பதற்காக ரூ. 20.51 கோடி செலவானது. 1964-65-ம் ஆண்டு திட்ட மதிப்பீட்டில் இதற்காக ரூ. 5 கோடி வகை செய்யப்பட்டுள்ளது.

விவசாயிகளுக்கு உதவி

கிராமங்களுக்கு மின்சார வசதி அளிக்கும் திட்டங்களை நிறைவேற்றுவதற்குச் செலவிடும் மூலதனத்தில் ஆண்டு ஒன்றுக்கு குறைந்த அளவு 10 சதவீதம் நிகர வருமானம் வரும்வகையில் போர்டு செயலாற்றுகிறது. இந்த 10 சதவீதம் நிகர வருமானம் வராத இடங்களில் பயன்படுத்துவோர்கள் விசேஷ உத்தரவாதத் தொகை செலுத்த வேண்டுமென்று போர்டு ஒப்பந்தம் செய்து கொள்ளுகிறது. இதன் மூலம் மேற்கூறிய 10 சதவீதம் நிகர லாபம் உறுதிப்படுத்தப்படுகிறது. நீர் மின்சாரப் பகுதிகளில் உள்ள மின்சாரம் பயன்படுத்தும் விவசாயிகள் சம்பந்தமாக மேற்கூறிய விசேஷ உத்தரவாதத் தொகையின் அதிக அளவு ஆண்டு ஒன்றுக்கு பிரதி குதிரைத் திறனுக்கு ரூ. 50 ஆகும். சென்னை அனல் மின்சாரப் பகுதியில் உள்ளவர்களுக்கு ஷெ உத்தரவாதத் தொகையின் அதிக அளவு ஆண்டு ஒன்றுக்கு பிரதி குதிரைத் திறனுக்கு ரூ. 60 ஆகும். சம்பந்தமற்ற குறைந்த அளவு கட்டணங்களை எடுத்து விட்டதை ஒட்டி, மின்சாரம் பயன்படுத்தும் விவசாயிகள் சம்பந்தமான விசேஷ உத்தரவாதத் தொகையையும் எடுத்துவிடும்படி தொடர்ந்து பலமுறையீடுகள் வந்து கொண்டிருந்தன. இதற்கு முதற்படியாக விசேஷ உத்தரவாதத் தொகையின் அதிக அளவு பிரதி குதிரைத்திறன் ஒன்றுக்கு ரூ. 35 ஆகக் குறைக்கப்பட்டது. 1963-ம் வருடம் நவம்பர் மாதம் 1-ம் தேதி முதல் மேற்படி உத்தரவாதத் தொகை முழுவதும் எடுத்துவிடப்பட்டது. இது மின்சாரம் பயன்படுத்தும் விவசாயிகளுக்கு மிகவும் திருப்தி அளிக்கும்.

[அடுத்த பக்கம் பார்க்கவும்]

“நாட்டின் முன்னேற்றத்திற்கு சிறந்த சாதனம்-பொருட்காட்சி”

23—12—1964-ல், சென்னை தேனும் பேட்டையிலே அமைந்துள்ள அகில இந்திய கதர், சுதேசி, தொழில் பொருட் காட்சியைத் திறந்து வைத்துப் பேசும் போது, திரு. காமராஜ் அவர்கள், நாட்டின் முக்கிய பிரச்னைகளைக் குறிப்பிட்டார். அதாவது, உற்பத்தியை அதிகரிக்கவேண்டியதன் அவசியத்தை விளக்கிக்கூறி, மக்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் திட்டங்களை மேற்கொள்வது அவசியம் என்பதை வற்புறுத்தினார். அவருடைய பேச்சின் சுருக்கம் வருமாறு:—

“தொழில் முறைகளும், துறைகளும் மாறிக் கொண்டேயிருக்கும் பழங்காலத்தில், தேர்த் திரு விழாக் காலங்களில், ஜனங்கள் ஏராளமாக ஒன்று கூடுவார்கள். அப்போது அங்கே அநேக சாமான்கள் விற்பனைக்குக் கிடைக்கும். சிறப்பாக, நமது தாய் மார்கள் குடும்பத்திற்குத் தேவையான பொருட்களையெல்லாம் அங்கே வாங்குவார்கள். அதேபோல, நவீன காலத்தில் இத்தகைய பொருட்காட்சிகள் நடைபெறும்போது, அநேக பண்டங்கள் விற்பனைக்கு வைக்கப்படுகின்றன.

நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு, இது முக்கியமான காரியம். கையினால் செய்யும் பண்டங்களை ஜனங்கள் ஆதரிக்க வேண்டும். அப்போதுதான் அநேகம் பேருக்கு வேலை வாய்ப்புகள் கிடைக்கும். அதன் விளைவாக பணப் புழக்கமும், வாங்கும் சக்தியும் மக்களிடம் அதிகரிக்க வழி ஏற்படும். இதற்காகவே, பல்வேறு திட்டங்களை அரசாங்கத்தார் உருவாக்கி நிறைவேற்றி வருகிறார்கள்.

இந்தத் திட்டங்களின் நோக்கம் என்ன? எதிர் காலத்தில், நாட்டின் பொருள் உற்பத்தி அதிகரிக்க வேண்டும். பண்டங்களின் உற்பத்தி பல மடங்காக உயரவேண்டும். அதற்கேற்றவகையில் கட்டுப்பாடான முறையில் மக்கள் ஒன்றுபட்டு ஒத்துழைக்க வேண்டும்.

கட்டுப்பாடு அவசியம் வேண்டும்

பணம் படைத்த ஒரு சிலருக்கு, கட்டுப்பாடுகளைக் கண்டாலே பிடிப்பதில்லை. அவர்களுக்குக் கோபம் வருகிறது. ஆத்திரப்படுகிறார்கள். அரிசி ஒருபடி மூன்றுரூபாய் என்றாலும்அவர்களுக்கு கவலையில்லை. ஆனால், ஏழைகள் என்ன செய்ய முடியும்? அவ்வளவு விலைகொடுத்து ஏழைகளால் வாங்க முடியுமா என்பதை எண்ணிப் பார்ப்பதே இல்லை. ‘மனிதாபிமானம்’ என்பதே இல்லாமல் அவர்கள் நடந்துகொள்கிறார்கள். ‘இதற்கெல்லாம் காரணம் அரசாங்கம்தான்’ என்ற குற்றத்தை யார் மீதோ சுமத்திவிட்டு, பொறுப்பைத் தட்டிக் கழிக்க முயலு கிறார்கள். இது மிகவும் தவறான போக்காகும். இதனால் ஜனங்களுக்கு எந்தவித நன்மையும் ஏற் படாது. கட்டுப்பாடு அவசியம் வேண்டும். அத் துடன், உற்பத்தியைப் பெருக்கும் முயற்சியில் எல்லோரும் ஈடுபடவேண்டும். அதற்கேற்ற வழி களில் நாம் திட்டமிட்டு பணிசெய்யவேண்டும்.

“இத்தகைய பொருட்காட்சியில், வளையல், சீப்புக் கண்ணாடி கடைகள் தானே இருக்கின்றன” என்று சொல்வார்கள். இவை மிகவும் தேவை என்பதை குடும்பத்தை நடத்தும் தாய்மார்கள் ஒத்துக்கொள் வார்கள். குழந்தைகளுக்கு வேண்டிய சாமான்கள், எல்லோருக்கும் தேவையான பொது அறிவு முதலியன இங்கே ஏராளமாகக் கிடைக்கும். அரசாங்கத்தின் பல்வேறு இலாகாக்கள், தமது சேவையை பொது மக்களுக்கு இங்கே விளக்கி வருகின்றனர். எனவே இந்தப் பொருட்காட்சி, நாட்டின் முன் னேற்றத்திற்குச் சிறந்த சாதனம் என்பதில் சந்தேகமில்லை. இதை அனைவரும் கண்டு, பயனடைவார்கள் என்று நம்புகிறேன்.”

[19-ம் பக்கத் தொடர்ச்சி]

உற்பத்தித்திறனை அதிகரித்துக்கொண்டே போனாலும் கிடைக்கக்கூடிய சக்திக்கு மேல் தேவைப் படும் மின்சார சக்தியின் அளவு அதிகமாகவே இருக்கிறது. மேலும் ஒவ்வோர் ஆண்டிலும் மின்சார இணைப்புக்குத் தேவையான மின்சார சக்தியின் அளவு 20 சதவீதத்திற்கு அதிகமாகிக் கொண்டே போகிறது. 1962-63-ல் தேவைப் பட்ட அதிக அளவு மின்சாரம் 532 மெகவாட் ஆகும். 1963-64-ல் இந்தத் தேவை 630 மெக வாட்டாக அதிகரித்தது. இதைப்போலவே 1962—63-ல் மொத்தம் 28,230 லட்சம் யூனிட்டுகள் உற்பத்தி செய்யப்பட்டன. 1963-64-ல் மொத்தம் 31,170 லட்சம் யூனிட்டுகள் உற்பத்தி செய்யப் பட்டன. தமிழ்நாட்டில் தொழில் துறையிலும் விவசாயத்துறையிலும் பொருளாதாரம் மிகத் தீவிர மாக வளர்ச்சி பெறுகிறது என்பதை மேற்படி மின்சாரத் தேவை அதிகரிப்பு நன்கு எடுத்துக் காட்டுகிறது. எந்தத் தொழில், மின்சார சப்ளை கேட்டாலும் உடனே அதற்கு மின்சாரம் வழங்கி அரசாங்கம் இந்தப் போக்கை ஊக்குவிக்கிறது.

பொற்கொல்லர் குடும்பத்தினருக்குக் கல்விச் சலுகை

தங்கக் கட்டுப்பாடு சட்டத்தால் பாதிக்கப்பட்ட பொற் கொல்லர்களின் பிள்ளைகளுக்கு அளிக்கப்பட்டு வந்த கல்விச் சலுகை, பொற்கொல்லர்களைச் சார்ந்தவர்களுக்கும் அளிக்கப்படும். பொற்கொல்லர் பிள்ளைகளுக்கான கல்விச் சலுகை சம்பந்தமாக உள்ள விதிகள் இதற்கும் பொருந்தும்.

இராமேசுவரம், தனுஷ்கோடியில் புயலினால் பாதிக்கப்பட்ட மக்களின் அவதியைத் தீர்க்க, அரசாங்கம் தன்னாலான எல்லா உதவிகளையும் செய்து வருகிறது.

1. புயலினால் பாதிக்கப்பட்ட மக்கள், மண்டபம் முகாமை வந்தடைகின்றனர்.

2. மாநில அமைச்சர் திரு. வி. இராமையா, புயலினால் பாதிக்கப் பட்டோரை அணுகி, ஆறுதல் கூறுகிறார்.

3. பாம்பனில் கடும் புயலினால், தங்களுடைய வீடுகளை இழந்த சிலர்.

மேலே : அண்மையில் சென்னை வந்திருந்த ரஷ்ய கலாசாரக் குழுவினரின் கலை நிகழ்ச்சிகளைத் தமிழக கவர்னரும், முதலமைச்சரும் பாராட்டிப் பேசினர்.

இடபபுறம் : தமிழகக் கலைஞர்களுடன் ரஷ்யக் குழு.

குடும்பக் கட்டுப்பாடு தினம், டிசம்பர் 18-ல் நாடெங்கும் கொண்டாடப் பட்டது.

வலப்புறம் கீழே : சென்னை பாலர் அரங்கில், விழாக் கொண்டாட்டத்தை, தமிழ்நாடு சமூக நல போர்டு தலைவர் திருமதி சரோஜினி வரதப்பன் துவக்கி வைத்தார்.

வலப்புறம் மேலே : ஜெனரல் ஆஸ்பத்திரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மேடை ஏறிப் பேசும் இவர், அன்று காலையில்தான் அறுவை சிகிச்சை செய்து கொண்டவர்.

பணியும் — பாராட்டும்



படம் 1 : 35 ஆண்டுகளாய் ஆசிரியப் பணிபுரிந்து, ராஷ்டிரபதி விருது பெற்ற தலைமை ஆசிரியர் (இந்து தியாலஜிகல் உயர்நிலைப் பள்ளி) "குலபதி" எஸ். பாலகிருஷ்ண ஜோஷி அவர்களின் பாராட்டு விழாவில், முதலமைச்சர் கலந்து கொண்டு வாழ்த்து கூறினார்.

படம் 2 : 25–12–64-ல, சென்னையில், தமிழ்நாடு சிறுதொழில் அதிபர்களின் 5-வது மகாநாடு, அமைச்சர் திரு. ஆர். வெங்கட்ராமன் தலைமையில் நடைபெற்றது.

படம் 3 : சென்னையில், 24–12–64-ல் நடைபெற்ற நர்சுகளுக்குப் பரிசு அளிக்கும் விழாவில், முதலாவதாக நின்றவருக்கு, சுகாதார அமைச்சர் திருமதி ஜோதி வெங்கடாசலம் தங்க மெடல் பரிசு அளிக்கிறார்.

பாரத நாடெங்கும் புதிய பஞ்சாயத்து ஆட்சி திறம்பட நடைபெற்று வருகிறது. மேற்கு வங்காள மாநிலத்தில், ஒரு கிராமப் பஞ்சாயத்து கூடி, தங்களுடைய வேலைத் திட்டங்கள் பற்றி கலந்து பேசுவதை, படத்தில் காணலாம்.

புதிய பஞ்சாயத்து ஆட்சியில், ஆண்கள் மட்டுமல்லாமல் பெண்களும் மிகுந்த அக்கறைகொண்டு பணியாற்றி வருகின்றனர். மைசூர் மாநிலத்தில் எல்லா உறுப்பினர்களும் மாதர்களாகவே உள்ள ஒரு கிராமப் பஞ்சாயத்து, முக்கிய விஷயங்கள் பற்றி அனுபவமிக்கோரின் யோசனைகளை கேட்டுத் தெரிந்துகொள்கிறது.

சோவியத் நாட்டுக் கலாசாரக் குழுவினரின் சென்னை வருகை

உலக மக்கள் வாழ்வில் இன்பமும் திருப்தியும் நிலைபெறச் செய்யும் முயற்சியில் கலைஞர்கள் எல்லோரும் ஓயாது உழைத்து வருகின்றனர். பல் வேறு நாடுகளின் பண்பாடுகளுக்கேற்ப, கலையின் உருவும் மரபும் மாறுபட்டிருந்தாலும் அதன் அடிப்படை நோக்கம் ஒன்றேதான். இசை, நடனம் முதலிய நுண்கலைகளை, உலக நாடுகள் அனைத்தும், போற்றிப் பாதுகாத்து வருகின்றன.

சமீப காலத்தில், கலைஞர்களின்மூலம் உலக சகோதர நேயத்தை வளர்க்கும் பணி தீவிரமாக நடைபெறுகிறது. நமது நாட்டின் தலை சிறந்த கலைஞர்கள் பலர், உலகில் உள்ள அநேக நாடுகளுக்குச் சென்று சுதந்திர பாரதத்தின் கலைத் திறனைப் பரப்பி வருகின்றனர். அதேபோல, பல் வேறு நாடுகளின் சார்பாக, நம்நாட்டிற்கு வரும் கலைஞர்களை வரவேற்று அவர்களின் தலைமை அறிந்து ரசிப்பதிலும், நாம் முன்னணியில் நிற்கிறோம்.

சோவியத் நாட்டிலிருந்து வந்த கலாசாரக் குழுவினர், அண்மையில் (20-12-64-ல்) சென்னை நகருக்கு விஜயம் செய்து, தமது நாட்டின் தலை சிறந்த கலை நிகழ்ச்சிகளை நடத்திக் காட்டினர். எஸ்,ஐ.ஈ.டி. மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற இந்தச் சிறப்புக் கலை நிகழ்ச்சிகளுக்கு, முதலமைச்சர் திரு பக்தவத்சலம் அவர்களும் ஆக்டிங் கவர்னர் மேன்மை தங்கிய திரு. சந்திரா ரெட்டி அவர்களும் வந்திருந்து இத்தகைய கலாசார தூது கோஷ்டிகள், உலக மக்களிடையே பரஸ்பர நல்லுணர்வை வளர்ப்பது நிச்சயம் என்று பாராட்டுரை கூறினர். தமிழ்நாடு சங்கீத நாடக சங்கத்தின் தலைவர் கனம் நீதிபதி கே. எஸ். வெங்கடராமன் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினர். சோவியத் குழுவின் தலைவராக வந்துள்ள அம்மையார் திருமதி கஜாண்ட் ஸேவா அவர்கள் சோவியத் நாட்டு மக்களின் நல்லெண்ணத்தை, தமிழ்நாட்டு மக்களுக்குத் தெரிவித்துக்கொண்டார்.

மூன்று நாள் நடைபெற்ற இந்தக் கலை நிகழ்ச்சிகள், சென்னை நகர ரசிகர்களால் மிகவும் பாராட்டப்பட்டன. மேனாட்டு சங்கீத, நடன முறையில் பெரும்பாலும் அமைந்திருந்த இந்த நிகழ்ச்சிகளில் கீழ்நாட்டு உடை அலங்காரமும், உணர்ச்சி வேகமும் விரவி இருந்தன.

கிராமியப் பாட்டுகளைப் பாடும்போது, அடிப்படை 'பாவம்' குரல் நயத்திலும், பின்னணி இசையிலும் மிகச் சிறந்த முறையில் உணர்த்தப்பட்டது. 'மீனவர் நடனம்' உழைப்பின் பெருமையை உன்னதமான முறையில் எடுத்துக் காட்டியது. ஜால வித்தை, செப்படி வித்தை முதலியன கவர்ச்சிகரமாக அமைந்திருந்தன. கலை நிகழ்ச்சிகளை அறிமுகம் செய்த அம்மையாரின் லாகவமும் கலைப்பண்பும் விசேஷப் பாராட்டுக்குரியது.

தமிழ்நாடு சங்கீத நாடக சங்கத்தின் சார்பில் 24 பேர் கொண்ட இந்த கலாசார தூது கோஷ்டிக்கு விசேஷ வரவேற்பு வைபவம் ஒன்று 23—12—64-ல் ஏற்பாடு செய்யப்பட்டது. அப்போது தமிழ்நாட்டின் பரத நாட்டியம், கர்னாடக சங்கீதம் ஆகியவற்றை விளக்கும் முறையில், நமது கலை நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டன. இவற்றை சோவியத் நாட்டுக் கலைஞர்கள் மகிழ்ச்சியோடு அனுபவித்துப் பாராட்டினர். மாமல்லபுரம், சென்னை சங்கீத ஆராய்ச்சிக் கழகம் முதலியவற்றையும் அவர்கள் கண்டு களித்தனர்.

தைப்பாவை வந்துவிட்டாள்!

அழகனார்

அன்பறங்கள் மிகவளர
அருளாட்சி செய்தபடி
இன்பத்தேன் தமிழ்மணக்க
ஈடில்லா நலம்பெருக்கி

தைப்பாவை வந்துவிட்டாள்—நலம்
தந்திடவே முந்தி விட்டாள்.

உழுக லைஞன் உளம்மகிழ்ந்து
ஊக்கமுடன் பயிர்விளைக்க
எழுபரிதி கரம்பரப்பி
ஏற்றமெலாம் தந்திடவே

தைப்பாவை வந்துவிட்டாள்—நலம்
தந்திடவே முந்திவிட்டாள்.

புத்தரிசி மணிமணியாய்
பூமியிலே விளைந்திடவே
தித்திக்கும் கனிகூட்டி
தேனை மணம்பரப்பி

தைப்பாவை வந்துவிட்டாள்—நலம்
தந்திடவே முந்திவிட்டாள்.

திங்கரும்புச் சாரோடு
தேடரிய சிறப்போடு
ஓங்குபுகழ் கொண்டிலங்கி
உலகுற்ற பசிகளைய

தைப்பாவை வந்துவிட்டாள்—நலம்
தந்திடவே முந்திவிட்டாள்.

நாட்டிலுள்ள எத்தனையோ சாதாரண கிராமங்களில் ஒன்று தான், தபோரா. இன்று முதற் பரிசைப் பெற்றிருக்கிறது அது. இந்த அற்புத மாற்றத்தை விவரிக்கிறது இக் கட்டுரை.

நாட்டின் மிகச் சிறந்த கிராமம்

தபோரா, மத்திய பிரதேசத்தில் உள்ள ஒரு கிராமம். தபோராவுக்கென்று தனிச்சிறப்பு ஏதும் இல்லை. மற்ற பல கிராமங்களில் போன்றே, அக்கிராம மக்களும் வறுமையிலும் பற்றுக்குறையிலும் உழன்று கொண்டிருந்தார்கள். ஆண்களும், பெண்களும், குழந்தைகளும் வாழ்வில் குறிப்பிடத்தக்க சுகம் ஒன்றும் கண்டவர்களில்லை. ஏதோ பிறப்பதும், இறப்பதுமாய் இருந்தார்கள். தங்கள் நல்வாழ்வுக்கான வழி ஏதும் அவர்களுக்குப் புலப்படவில்லை. தங்கள் விதி அது எனக் காலத்தைக் கடத்தி வந்தார்கள். பத்துப் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்பு வரை, தபோரா கிராமத்தின் நிலை இது தான்.

கிராமங்களில் மறுமலர்ச்சியைத் தோற்றுவிக்கும் இயக்கம்—அரசாங்கத்திட்டம்—ஒன்று 1962 அக்டோபரில் ஆரம்பமாயிற்று. நாடு முழுவதிலும் சில குறிப்பிட்ட கிராமப் பகுதிகளில் சமுதாய நல அபிவிருத்தித்திட்டம் அமுல் செய்யப்பட்டது. இத் திட்டத்தின்கீழ் கிராமப்புறங்களில் அதிக வசதிகள் ஏற்படவும், கிராம மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்தவுமான பற்பல பணிகள் மேற்கொள்ளப் பட்டன. ஆரம்ப கட்டத்தில், இத்திட்டத்தின் சிறப்பை மக்கள் உணர்ந்தார்களில்லை. சில பல சமயங்களில் பலர் கேலிப்பார்வை வீசவும் செய்தனர். ஆனால் இந்த நிலைமை சிலகாலந்தான் நீடித்தது. சமுதாய நலத்திட்டத்தின்கீழ் நல்ல பணிகள் நடைபெறுவதையும், அவற்றால் தங்களுக்குப் புதிய நன்மைகள், வசதிகள் கிடைப்பதையும் பிறகு உணரத் தலைப்பட்டனர். எனவே, ஆண்டுகள் செல்லச் செல்ல, கிராமப்புற மக்களிடையே ஒரு புதிய விழிப்பு தோன்றி, ஒவ்வொருவரும் தங்கள் ஊருக்கும் இத்தகைய திட்டம் வேண்டும் என விரும்பிக்கேட்க ஆரம்பித்தனர். அதன்படி புதுப்புது பகுதிகளுக்கும் இத்திட்டம் விஸ்தரிக்கப்பட்டது. பெருவாரியான கிராமங்கள் பலனடைந்து முன்னேற்றமடைந்தன.

இரட்டிப்பு பெருமை

சமுதாய நலத்திட்டத்தால், அவ்வாறு வளர்ச்சியடைந்த ஆயிரக்கணக்கான கிராமங்களில் ஒன்று தான் தபோரா. ஆனால், திடீரென்று சென்ற ஆண்டு ஒரு நாள், தபாரோவைப் பற்றி, பத்திரிகைகளில் எல்லாம் கொட்டை எழுத்து தலைப்புடன் செய்தி வெளியாயிற்று. என்ன அது? இந்தியாவிலேயே மிகச்சிறந்த கிராமம் என்ற முதற் பரிசு தபோராவுக்குக் கிடைத்தது. அதோடு இன்னொரு பெருமையும் அதே கிராமத்திற்கு வந்தடைந்தது. காரணம், இதே தபோராவின் கிராம சேவக்கான திரு என். ஆர். பாடீல் அகில இந்தியாவுக்குமாக நடைபெற்ற கிராம சேவக்குகள் தகுதிச் சிறப்பு போட்டியில் இரண்டாவது பரிசைப் பெற்றார்.

தபோரா, சுமார் 700 ஏக்கர் விவசாய நிலங்களைக் கொண்ட சிறிய கிராமம். கிராமப்புற சமுதாயத்திற்கு உள்ள வழக்கமான குறைபாடுகள் அங்கும் இருந்தன. அதாவது ஜனத்தொகை பெருக்கம், போதிய நீர்ப்பாசனம் போன்ற வசதிகள் இல்லாத நிலங்கள், அதிக பலன் காண முடியாத பழங்கால விவசாய முறை, கிராம மக்களுக்குள் கோஷ்டிப்பூசல் ஆகிய நிலைமைகள் கிராம முன்னேற்றத்திற்குப் பாதகமாக இருந்தன. மக்களின் வாழ்க்கைத்தரம் மிகவும் தாழ்ந்திருந்தது. எதிர்காலம் இருள் சூழ்ந்திருந்தது. முன்னேற்றத்திற்கான நம்பிக்கை எதையும் காணக்கூடவில்லை. இந்த நிலைமையில், தபோரா பகுதியில் சமுதாய நலத் திட்ட வேலை ஆரம்பமானபோது அதையொன்றும் மக்கள் உற்சாகமாக வரவேற்கவில்லை. வழக்கமான அசட்டையும் அலட்சியப் பேச்சுந்தான் காணப்பட்டது.

ஆர்வம், உழைப்பு ஈட்டிய வெற்றி

ஆனால் சமுதாய நல அபிவிருத்தி அதிகாரியும் அவருடன் பணிபுரிந்த ஊழியர்களும் மனந்தளராமல் வேலை செய்தனர். குறிப்பாக திரு என். ஆர். பாடீல் (அகில இந்திய இரண்டாவது பரிசு பெற்ற கிராம சேவக்) குன்றா ஆர்வத்துடன் சலியாது உழைத்தார். கடைசியில் பலனும் கிடைத்தது. மக்களுடைய மனப்போக்கு, மெல்ல மெல்ல, ஆனால் பெரும் அளவில் மாற்றம் அடைந்தது. காலங்காலமாகத் தங்களிடையே இருந்து வந்த பழக்க வழக்கங்கள், மூட நம்பிக்கைகள், விவசாயம் போன்றவற்றில் கையாண்டு வந்த வழிமுறைகள், தங்களுக்குள் இருந்த கோஷ்டிப்பூசல்கள் ஆகிய அனைத்தையும் ஒதுக்கி வைத்து, ஒரு அலாதியான புத்துணர்வுடனும், உறுதியுடனும், புனர்நிர்மாண காரியங்களில் ஈடுபட்டனர். இத்தகைய கூட்டு முயற்சியின் பலன்களை, கிராம வாழ்வின் பல துறைகளிலும் விரைவில் காணமுடிந்தது; சீராகச் செயல்பட்டால் முன்னேறமுடியும் என்ற திடநம்பிக்கை அக்கிராம மக்களிடையே வேரூன்றியது. எனவே மேலும் தீவிரமான முயற்சிகளில் ஈடுபட்டனர். அபார வெற்றியும் கண்டனர். இந்தியாவிலேயே மிகச் சிறந்த கிராமம் எனத்தெரிந்தெடுக்கப்பட்டு, 1963–64-ம் ஆண்டுக்கான முதல் பரிசைப்பெற்றது.

அவ்வூர் கிராம சேவக்கான என். ஆர். பாடீலும் சிறந்த சேவக்குகளுக்காக இரண்டாவது பரிசைப் பெற்று கிராமத்திற்கு மேலும் பெருமை தேடித் தந்தார்.

சமுதாய நலத்திட்டம் ஆரம்பமான அந்த நாட்களிலிருந்து, தபோரா கிராமம் நெடுந்தூரப் பயணத்தை முடித்திருக்கிறது. இப்போது அங்கு, உருவான பலன்கள் தோன்றியிருக்கின்றன. புதிதாகக் கட்டப்பட்டுள்ள உயர்தர ஆரம்பப்பள்ளிக் கட்டிடமும் மின்விளக்குகளோடு கூடிய அகலமான ரோடுகளும் வெளியிலிருந்து வருபவர்களைக் கவருகின்றன. அவை மட்டுமா? இவ்வளவு சின்னஞ் சிறிய கிராமத்தில், வீதிகளின் இரு பக்கங்களிலும் வடிகால் வாய்க்கால்கள் ஒழுங்காக அமைக்கப் பட்டுள்ளன. சுத்தமான, கச்சிதமான, வரிசையான வீடுகள் உள்ள அக்கிராமம் கண்கவர் தோற்றமளிக்கிறது.

வளமான கிராமிய வாழ்வு

இவையெல்லாவற்றையும் விட கிராமத்தின் முக்கியமான முன்னேற்றம் விவசாயத்துறை சாதனைகள் தான். இதனால், இதற்குமுன் எப்போதும் இல்லாத அளவுக்குச் செல்வ வளம் பெருகியிருக்கிறது. சமுதாய நலத்திட்டம் ஆரம்பிக்கப் படுவதற்கு முன், கிராமத்தின் மொத்த வருட வருமானம் ரூ. 8 லட்சத்திற்கும் குறைவாக இருந்தது. இப்போது அது சுமார் ரூ. 15 லட்சம் அளவுக்கு அதிகரித்திருக்கிறது. இதனால் இக்கிராமத்தில் வாழும் 400 குடும்பங்களும், இப்போது பல நவீன வசதிகளைப் பெற்றிருக்கின்றனர். இந்தியாவின் பல கிராமங்களில் காண முடியாத வளமான கிராமிய வாழ்வை இங்கு காண முடிகிறது. உதாரணமாக சுமார் பாதி வீடுகள் மின்சார வசதியுடன் இருக்கின்றன, ஏறக்குறைய அதே அளவுள்ள குடும்பங்களில், சொந்தமாக ரேடியோ அல்லது டிரான்சிஸ்டர் பெட்டி வைத்திருக்கிறார்கள். இந்த அளவு முன்னேற்றத்தை, நாம் எத்தனை கிராமங்களில் காணமுடிகிறது?

விவசாயத்துறையில் அபார முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறதென்றால், அதற்கு முக்கிய காரணம் விவசாய மக்கள், அதிகாரிகளுடன், நல்ல முறையில் ஒத்துழைத்தது தான். பலகாலமாகத் தாங்கள் கையாண்டுவந்த விவசாய முறைகளை மாற்றிக் கொண்டு நவீன விஞ்ஞான ரீதியான முறைகளைப் பின்பற்றுகின்றனர். பொறுக்கு விதைகள், ரசாயன உரங்கள், பூச்சி மருந்துகள் ஆகியவற்றை உபயோகிப்பது இன்று அவர்களிடையே சர்வசாதாரணமாகிவிட்டது. இதுவரை எப்போதுமே சரியான நீர்ப்பாசன வசதி பெற்றிராத இக்கிராமத்தில் இன்று அதன் வரண்ட நிலங்களுக்கெல்லாம் போதிய தண்ணீர் கிடைக்கிறது. காரணம், இப்பகுதியில் இப்போது பல கிணறுகள் தோண்டப் பட்டுள்ளன. அவற்றிற்குப் பம்பு செட்டுகள் பொருத்தப்பட்டுள்ளன. கிணற்றிலிருந்து பம்பு செட்டு மூலம் எடுக்கப்படும் தண்ணீர் குழாய்கள் மூலம் செலுத்தப்பட்டு சிறு சிறு நீர்த்தேக்கங்களில் நிரப்பப்படுகிறது. நீர்த்தேக்கம் நிரம்பிய பிறகு, நிலங்களுக்குத் தண்ணீர் பாய்ச்சப்படுகிறது. தண்ணீர் செல்வதற்கான குழாய்கள், தபோரா கிராமத்திலேயே வார்க்கப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

கால்நடைகளுக்குத் தண்ணீர்: புதுமையான ஏற்பாடு

கால்நடைகளுக்குக் குடி தண்ணீர் கிடைக்கும்படி செய்ய, தபோரா மக்கள் ஒரு புதுமையான ஏற்பாட்டைச் செய்திருக்கிறார்கள். கிராம விவசாயிகள் எல்லாம் சேர்ந்து 12 ஏக்கர் நிலம் திரட்டி, அதை ஒரு நபருக்கு அளித்திருக்கிறார்கள். அவர் அந்த நிலத்தில் பயிரிட்டு, அதன் வருமானத்தை அவரே அனுபவித்துக்கொள்ளலாம். ஆனால் அவர், கிராமக் கால்நடைகள் முழுவதற்கும் குடி தண்ணீர் வசதி அளித்தாகவேண்டும். இது தான் இப்போதுள்ள ஏற்பாடு, எனினும் வேறு ஏற்பாடு செய்யவும் திட்டமிடப்பட்டிருக்கிறது. அதன்படி, புதிதாக பெரிய கிணறு ஒன்று வெட்டப்படும். அதிலிருந்து மின்சார பம்பு செட்டு மூலம் தண்ணீர் இறைத்து கால்நடைகள் உபயோகத்திற்கான தொட்டிகளில் நிரப்பப்படும். பம்பு செட்டுக்காகக் பொருத்தப் படும் மோட்டாரைக் கொண்டு, ஒரு மாவு மில்லும் நடத்தப்படும். மாவு மில்லில் கிடைக்கும் வருமானம், கிராமப்பஞ்சாயத்திற்கு வழங்கப்படும். பழத்தோட்டம் வைப்பதும், தபோரா கிராமத்தில் ஒரு பெரிய அளவில் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இத்தோட்டங்கள் பலன் கொடுக்கவும் ஆரம்பித்துவிட்டன. ஆரஞ்சு முதலிய பல்வகை பழ மரங்கள் இப்போது 35,000-க்கு மேல் உள்ளன. இவற்றின் மூலம் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 5 லட்சம் வருமானம் கிடைக்கிறது. விவசாய உற்பத்தியை, அதன் மூலம் கிடைக்கும் வருவாயைப் பெருக்க பல வழிகள் கையாளப்படுகின்றன. உதாரணமாக, பருத்திச் செடிகளோடு கூட தணியாவும், (கொத்த மல்லி) வெங்காயமும் பயிரிடப்படுகின்றன.

நிலத்தின் மதிப்பு உயர்ந்தது

இவ்வாறு, இங்கு விவசாயம் பல வகைகளில் அபிவிருத்தியடைந்து, நிலமும் நல்ல வளம் பெற்றிருப்பதால், இக் கிராமத்தில் இப்போது நிலத்தின் விலை ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 5,000 அளவுக்கு உயர்ந்திருக்கிறது.

மத்திய பிரதேசத்திலுள்ள இச்சிறு கிராமம், நாட்டிலுள்ள மற்ற கிராம மக்களும் நல்வாழ்வு பெற ஒரு சிறந்த வழிகாட்டியாக விளங்குகிறது.

ஏழ்மைக்கு மறு பெயர் 'ஷபான்'

ஏழ்மைக்கு இலக்கணமாக இருந்த ஷபான் கிராமம், இன்று எல்லா செழுமையும் பெற்றுத் திகழ்கிறது—எப்படி ?

தீவிர விவசாய திட்டத்தால், மிகவும் பிற்போக்கான நிலையிலிருந்த கிராமங்கள் கூட, எத்துணை மாற்றங்களை அடைந்து வருகின்றன என்பதற்குப் பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்த ஷபான் கிராமம் சிறந்ததொரு எடுத்துக்காட்டாக விளங்குகிறது. தமிழ் நாட்டில் தஞ்சை போன்று, தீவிர விவசாயத் திட்ட (Package Programme) அமுலுக்காக பஞ்சாப் மாநிலத்தில் தெரிந்தெடுக்கப்பட்ட மாவட்டம் லூதியானா. அம் மாவட்ட கிராமங்களில் ஒன்று தான் ஷபான். அந்த வட்டாரத்தில், பல நூற்றாண்டுகளாக மிகவும் ஏழ்மையான கிராமமாக இருந்து வருவது ஷபான். எந்த அளவுக்கு அங்கு ஏழ்மை நிலவியது என்பதற்கு ஒரு உதாரணம் சொன்னால் போதும். சுற்று வட்டாரத்தில் உள்ள எவரும், தங்கள் மகளை ஷபான் கிராமத்தைச் சேர்ந்த பிள்ளைக்கு மணம் செய்து வைக்க முன் வருவதில்லை. காரணம், தங்கள் மகள் குடிபுகுந்த இடத்தில் வயிறாரச் சாப்பிடக்கூட வழியிராது என்ற அச்சந்தான். வறுமையில் மூழ்கிய கிராமத்திற்கு இப்படி ஒரு சாபக்கேடு இருந்து வந்தது. அங்கு 40-க்கு மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வந்தனர். ஒவ்வொருவருக்கும் 4 முதல் 50 ஏக்கர் வரை நிலம் உண்டு. ஆனால் எல்லாம் மணல் நிறைந்த பூமி. எப்போதும் வரட்சி நிறைந்த அந்த நிலங்களில் ஒரு போகந்தான் பயிர் வைக்க முடியும். ஆக, ஒரு விவசாயி தன் நிலத்தில் இருந்து வருடம் முழுவதற்கும் பெறக் கூடிய வருமானம் ரூ. 200-க்கு மேல் இராது. இது, லூதியானா மாவட்டத்தில் தீவிர விவசாயத் திட்டம் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்பிருந்த நிலை.

விவசாயிகள், தங்கள் நிலங்களிலிருந்து அதிக மகசூல் பெற்று, அதிக வருமானம் மூலம் அவர்கள் வாழ்க்கைத்தரம் உயரச் செய்வதே தீவிர விவசாயத் திட்டத்தின் நோக்கம், விஞ்ஞான ரீதியான நவீன விவசாய முறைகளைப் பின்பற்றுவதும், ரசாயன உரங்களை அதிக அளவில் உபயோகிப்பதும் மற்றும் பூச்சி மருந்துகள், பொறுக்கு விதைகள், நவீன விவசாயக் கருவிகள் ஆகியவற்றைப் பயன்படுத்துவதும், ஐந்தாண்டு காலமுள்ள இத்திட்டத்தின் முக்கிய அம்சங்களாகும். எனவே விவசாயிகள் இத்தகைய வசதிகளைப் பெறுவதற்காக அவர்களுக்குக் கடன்கள் வழங்கப்படுகின்றன. நீர்ப்பாசனக் கிணறுகளில் பம்பு செட்டுகள் பொருத்தவும், குழாய்க் கிணறுகள் அமைக்கவும் விவசாயிகளுக்குத் தொழில் நுட்ப, நிதி உதவிகள் அளிக்கப்படுகின்றன.

இத்தகைய உதவிகள் கொண்ட திட்டத்தின் பலனாக ஷபான் கிராமம் இன்று புதுப்பொலிவுடன் திகழ்கிறது. கிராமத்தைச் சுற்றி கரம்பாகக் கிடந்த வரண்ட பகுதிகள் எல்லாம் பொன்னிறக் கதிர்கள் குலுங்கும் செழுமையான பயிருடன் இனிய காட்சி தருகின்றன. சிறிய நீர்ப்பாசன ஏற்பாடுகளால் நிலங்களுக்கு வேண்டிய தண்ணீர் கிடைக்கிறது. பொறுக்கு விதை ரசாயன உரங்களின் தாராள உபயோகம் ஆகியவற்றால் பயிர்கள் ஊட்டம் பெற்றுள்ளன. ஷபானில், இந்தச் சிறிய ஊரில் பத்துப்பன்னிரண்டு டிராக்டர்கள் இருக்கின்றன. ஏராளமான குழாய்க் கிணறுகள் உள்ளன. குறைந்த அளவு நிலமுடையவர்கள் தங்களுக்கென தனியாக டிராக்டர் வைத்துக்கொள்வது இயலாது, தேவையும் அல்ல என்பதால் அத்தகையவர்கள் சிலர் ஒன்று சேர்ந்து, தங்கள் பொது உபயோகத்திற்காக ஒரு டிராக்டரை வாங்க முயன்று வருகின்றனர். ஆனால் குழாய்க் கிணறுகளைப் பொறுத்தவரை, சிறிதளவே நிலமுடையவரானாலும் ஒவ்வொரு விவசாயியும் தமக்கென ஒரு குழாய்க் கிணறு வைத்துக்கொள்ள விரும்புகிறார். அரை ஏக்கர் மட்டும் நிளமுள்ள ஒரு விவசாயி கூட ஒரு குழாய்க் கிணறு எடுத்துள்ளார்.

73 வயது முதியவர் கொள்ளும் பெருமிதம்

ஷபான் குடியானவர்களுக்குள் 73 வயதான கர்தார் சிங், தமது சாதனைகள் பற்றி மிகவும் பெருமிதம் கொள்கிறார். அவர் தமது நிலங்களுக்கான நீர்ப்பாசனத்திற்காக மூன்று குழாய்க்கிணறுகளை எடுத்து, அவற்றை இயக்க டீசல் என்ஜின்களைப் பொருத்தியிருக்கிறார். அத்தகைய குழாய்க்கிணறு ஒன்றின் அருகில் கம்பீரமாக நின்றபடி, இந்த முதியவர் தம் வாழ்வில் ஏற்பட்ட முன்னேற்றத்தை விவரிப்பதைக் கேட்கும் எவருக்கும் புதிய நம்பிக்கையும், உற்சாகமும் பிறக்கும். ஏழ்மையில் பிறந்து, பல கஷ்ட நஷ்டங்களுக்குள்ளாகி தண்ணீர் இல்லாமல் காய்ந்த நிலங்களை வைத்துக்கொண்டு பெயருக்கு ஏதோ விவசாயம் செய்து, நெருக்கடி மிகுந்த வாழ்க்கையை நடத்தி வந்த தாம், இப்போது--கடந்த மூன்றாண்டுகளாக—தம் நிலத்தில் பொன்னிறக்கதிர்களை கைகொள்ளப் பிடித்து, மார்புற அணைத்து, மனத்தில் இன்பங்கொள்ள, அறுவடை செய்வதைப் பற்றி அவர் பெருமகிழ்ச்சி

யோடு குறிப்பிடுகிறார்: அவருக்கு 70 வயதாக இருக்கும்போது, ஷபான் கிராமத்தில் தீவிர விவசாயத்திட்டம் ஆரம்பமாயிற்று. அது முதல் அவரது குடும்பச்சொத்து—பூமிச்செல்வம்—40 ஏக்கரிலிருந்து 60 ஏக்கராகப் பெருகியிருக்கிறது. அதாவது இந்த மூன்றாண்டு காலத்தில் புதிதாக 20 ஏக்கர் நிலம் வாங்கியிருக்கிறார். அதே போல் அவர் பிறந்து வளர்ந்த பழைய மண் வீட்டிற்குப் பதில் இப்போது புதிய செங்கல் வீட்டைக் கட்டி விட்டார். விவசாய வருமானம் முன்பைவிடப் பெருகியிருப்பதால், அதன் சேமிப்புப் பணத்தைக் கொண்டு வளர்ந்து வரும் தம் குடும்பத் தேவைக்காக, இன்னொரு வீட்டையும் கட்டத் திட்டமிட்டுள்ளார். அவரது மகன்களும், பெண்களும் நல்ல முறையில் கல்வி பெற்று வருகின்றனர். அவர்களுக்கு இனி அறியாமை, கல்வியின்மை என்ற வரண்ட வாழ்க்கை முறை இருக்கப் போவதில்லை. பரந்த உலகில் தங்களுக்கும் நியாயமான இடம் உண்டு என அவர்கள் நிச்சயமாக இருக்கலாம்.

'ஏழ்மையின் மறுபெயர்'—அவலநிலை அகன்றது

ஏழ்மைக்கு மறுபெயர் ஷபான் என்றிருந்த அவல நிலை அடியோடு அகன்று விட்டது. இந்தக் கிராமத்துப் பிள்ளைகள், பெண்களுடன் 'கொள்வினை கொடுத்தல்' வைத்துக் கொள்ள இப்போது அண்டை-அயல் கிராமத்தவர்கள் போட்டி போட்டு முன் வருகின்றனர்.

முதியவர் கர்தார் சிங், தம் நிலங்களில் கோதுமை, சோளம், நெல் முதலியவற்றைச் சாகுபடி செய்வதோடு, வேர்க்கடலை, உருளைக்கிழங்கு முதலிய வாணிபப் பயிர்களையும் புதிதாகப் புகுத்தியுள்ளார். இப்போது அவர் இரண்டு போகம் பயிர் வைக்கிறார். குழாய்க்கிணற்றை அடுத்துள்ள நிலங்களில் முப்போகமும் விளைவிக்கிறார். முதலில் கோதுமையும், பிறகு கால்நடைத் தீவனமும், இறுதியாகச் சோளமும் பயிரிடுகிறார். முன்பு, நீர்ப்பாசன வசதி இல்லாதபோது ஏக்கருக்கு 12 மணங்குக் குறைவாகப் பெற்றுவந்த இடத்தில் இப்போது 25 மணங்கு வரை கோதுமை மாசூல் எடுக்கிறார். எனினும், கர்தார் சிங் முழு திருப்தியடையவில்லை. இன்னும் ரசாயன உரத்தை அதிகமாக உபயோகப்படுத்தி, ஏக்கருக்கு 35 மணங்கு வீதம் மாசூல் காண அவர் விரும்புகிறார். "எங்களுக்கு மின்சாரம் தாருங்கள். ரசாயன உரம் தட்டுப்பாடு இல்லாமல் கிடைக்கச் செய்யுங்கள். உற்பத்தியை இரட்டிப்பாக்க வேண்டும் என்ற உங்கள் முழக்கம் வெற்றியடையும்படி செய்து காட்டுகிறோம்", என்று நம்பிக்கை ஒளி வீசும் கண்களோடு, அப்பெரியவர் கூறுகிறார்.

நிமிர்ந்து நிற்கும் ஏழை ஹரிஜன்

பஹதார்கே என்ற கிராமத்தில் குழாய்க்கிணறுகளின் எண்ணிக்கை, கடந்த இரண்டாண்டு காலத்தில், 4-லிருந்து 24 ஆகப் பெருகியிருக்கிறது. மின்சாரம் மட்டும் தங்களுக்குக் கிடைக்குமானால், மேலும் 30 குழாய்க்கிணறுகளை எடுக்க, அக்கிராம விவசாயிகள் தயாராயிருக்கிறார்கள். மோதிராம் என்பவர் ஒரு ஹரிஜன்—கிராமக் காவலாளியாக இருப்பவர். சில ஆண்டுகளுக்கு முன் வரை, அவருக்குச் சொந்தமாக நிலம் இருக்கவில்லை: குத்தகைக்கு நிலம் பயிரிட்டு பிழைப்பு நடத்தி வந்தார். சிறுகச் சிறுக, தாம் சேமித்த பணத்தைக் கொண்டு அண்மையில், மணல் நிறைந்த கரம்பு நிலம் 4 ஏக்கர் வாங்கினார். தீவிர விவசாயத் திட்டம் வரும் வரை, அந்த நிலத்தில் பயிர் எழுப்ப அரும்பாடு பட்டார். இன்று அவ்வாறு அல்ல, கிராமத்தில் செழிப்பாக உள்ள பயிர்களில் அவருடையதும் ஒன்று: குழாய்க்கிணறு எடுத்து, பாசனம் செய்து கரும்பும், நெல்லும் சாகுபடி செய்துள்ள அவரது நிலம் பசுமை புடைத்து நிற்கிறது. மோதிராம், இன்னொரு குழாய்க்கிணறு எடுக்கவும் யோசனை செய்து வருகிறார்.

ஷபான் கிராமத்தைப் பொறுத்தவரை, கடந்த மூன்றாண்டுகளில் அது அடைந்துள்ள முன்னேற்றம் அற்புதமானது என்றே சொல்ல வேண்டும். ஆனால் அங்கு மட்டுந்தான் அப்படி நடந்தது எனச் சொல்ல முடியாது. ஏனெனில், லூதியானா மாவட்டத்தில் அபார முன்னேற்றமடைந்த வேறு பல கிராமங்களும் உள்ளன. காலம் காலமாக ஏழ்மை தாண்டவமாடிய கிராமங்கள் தீவிர விவசாயத் திட்டம் என்ற அருமருந்தின் பலனாக, இன்று செல்வ வளம் மிக்க இடங்களாக உருமாறியுள்ளன.

ரூ. 12·5 கோடி வருமானம்

பொதுவாக லூதியானா மாவட்டத்தில், தீவிர விவசாயத் திட்டத்தால் கோதுமை, வேர்க்கடலை ஆகிய முக்கிய பயிர்களின் சாகுபடி விஸ்தீரணமும், மாசூல் விகிதமும் மொத்த உற்பத்தி அளவும் மிகுதியாகப் பெருகியுள்ளன. கடந்த மூன்றாண்டுகளில் இந்த இரண்டு பயிர்களின் மூலம் மொத்த பொருளாதார சம்பாத்தியம் ரூ. 12.5 கோடிக்கும் அதிகம் என மதிப்பிடப்பட்டிருக்கிறது. தீவிர விவசாயத்திட்டத்திற்காகச் செலவானது—கடன்கள் நீங்கலாக—மொத்தம் ரூ. 40 லட்சந்தான் என்பதைக் கவனிக்கும்போது, மேற்சொன்ன ரூ. 12·5 கோடி என்பது ஒரு கணிசமான வருமானம் என்பதில் ஐயமில்லை.

"பஞ்சாயத்து ராஜ்" இதழிலிருந்து இடம் பெறுபவை:
பக்கங்கள் 12, 13, 14, 18, 26, 27, 28, 29—(8 பக்கங்கள்)
Articles reproduced from "Panchayati Raj" on pages 12, 13, 14, 18, 26, 27, 28 and 29 (8 pages.)

அறிவிப்பு

நம் நாடு, இன்று பல துறைகளிலும் முன்னேறி வருகிறது. இந்த முன்னேற்றங்களுக்கெல்லாம் அடிப்படை, 17 ஆண்டுகளுக்கு முன் அந்நிய ஆட்சியிலிருந்து நாம் விடுதலையடைந்து, இங்கு நம் சுதந்திர அரசாங்கம் அமைந்ததுதான். ஆகையால் தேச சுதந்திரத்திற்காக தியாகங்கள் புரிந்த, அரும் பணி ஆற்றிய பெரியார்களைப் பற்றி இன்றைய இளம் பரம்பரையினரும், மற்றவர்களும் அறிந்து கொள்வது அவசியமானதும், பயனுள்ளதும் ஆகும். எனவே 'விடுதலைக்கு வித்திட்ட வீரர்கள்' என்ற வரிசையில், கீழ்க்கண்ட பெரியார்களைப் பற்றியும், மேலும், பாரத நாட்டு மாதரசிகளைப் பற்றியும், கட்டுரைகள், 'கிராம நல'த்தில் இதுவரை வெளியிடப்பட்டுள்ளன ;

மோதிலால் நேரு, எஸ். சத்யமூர்த்தி, பால கங்காதர திலகர், வ. உ. சிதம்பரம் பிள்ளை, சர்தார் வல்லபாய் படேல், ஜே. சி. குமரப்பா, லாலா லஜபதி ராய், சி. எப். ஆண்ட்ரூஸ், மௌலானா அபுல் கலாம் ஆசாத், தாதாபாய் நௌரோஜி, எஸ். ஸ்ரீநிவாச ஐயங்கார், கோபாலகிருஷ்ண கோகலே, சேலம் விஜயராகவாச்சாரியார், திரு வி. க. ஆகியோர்.

கஸ்தூரிபா காந்தி, அன்னிபெசண்ட், சரோஜினி நாயுடு, கமலா நேரு, ராமாபாய் ரானடே, டோரு டட், சகோதரி நிவேதிதை ஆகியோர்.

இந்த வரிசைகளில் இடம் பெறத்தக்க மற்ற பெரியார்கள், மாதரசிகளைப் பற்றிய கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன. கட்டுரைகள், வெறும் வாழ்க்கைக் குறிப்புகளாக இல்லாமல் அவரவர் வாழ்வை யொட்டிய இரண்டொரு முக்கிய செய்திகளையாகிலும் விளக்கமாகவும், சுவையோடும் எடுத்துக் கூறும் வகையில் அமைதல் நலம். கட்டுரை ஒவ்வொன்றும், 'கிராம நல'த்தில் இரண்டு பக்க அளவில், இருக்கலாம். வெளியிடப்படும் கட்டுரைக்கு, ரூ. 30-க்கு மேற்படாமல் சன்மானம் வழங்கப்படும்.

—ஆசிரியர்.

வாழ்த்துவோம்! வணங்குவோம்!

(உதயை மு. வீரையன்)

செந்தமிழ் தந்திடும் இன்பமாய்
தேங்கிய நெய்யொடு தீஞ்சுவை
தந்திடும் பொங்கலை வாழ்த்துவோம் ;
தமிழரின் விழாவினை வணங்குவோம் ;

கன்னலும் மஞ்சளும் இஞ்சியும்
களிப்பினைத் தந்திடும் காட்சியைப்
பண்ணிய பொங்கலை வாழ்த்துவோம் ;
பைந்தமிழ் திருவிழா வணங்குவோம் ;

மகளிரும் புன்னகை செய்திட
மாடுகள் ஆடுகள் மகிழ்ந்திட
அகம்வரும் பொங்கலை வாழ்த்துவோம் ;
அரும்பெரும் நாளினை வணங்குவோம். ;

உழவர்கள் தம்பலன் கண்டிட
ஓங்கியே பாலுமே பொங்கிட
வழங்கிடும் பொங்கலை வாழ்த்துவோம் ;
வண்டமிழ்ப் பெருவிழா வணங்குவோம் ;

புத்துடை பூண்டவர் களித்திட
புதுமனை கோலமும் பொலிவுற
சித்திரப் பொங்கலை வாழ்த்துவோம் ;
செந்தமிழ் விழாவினை வணங்குவோம் !

ஏழையும் சத்துண வுண்டிட
ஏற்றமும் தோற்றமும் பெற்றிட
வாழவே பொங்கலை வாழ்த்துவோம் ;
வரும்திரு நாளினை வணங்குவோம் !

தென்னைக்கு சமன்பாடுள்ள உரம் இட்டால் அதிக காய்ப்பும் நல்ல கொப்பரைகளும் பெறலாம்

அறுபது மரங்கள் உள்ள ஒரு தோட்டத்தில் 3,000 காய்கள் காய்த்தால் பூமியிலிருந்து 66 ராத்தல் நைட்ரஜனும், 27 ராத்தல் பாஸ்பர அமிலமும், 123 ராத்தல் பொடாஷும் ஒவ்வொரு ஆண்டும் எடுக்கப்படுகிறது. இதை எப்படி ஈடு செய்வதென்று பார்க்க இந்திய மத்திய தென்னை கமிட்டியார் உதவியுடன் ஏழாண்டு காலம் ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டன. மணற்பாங்கான களி, மணல், செம்மண், செங்களி போன்ற மண் வகைகளில் ஆராய்ச்சி நடந்தது. நாற்பத்தைந்து ராத்தல் நைட்ரஜன், 45 ராத்தல் பாஸ்வர அமிலம், 90 ராத்தல் பொடாஷ் இதை ஏக்கர் ஒன்றுக்கு இட்டால் காய்ப்பில் 35 சதவிகித உயர்வும், கொப்பரையில் 44 சதவிகித உயர்வும் கண்டதாகக் காட்டப்பட்டது.

தென்னந்தோப்புகளை சொந்தக்காரர்கள் சரிவர கவனிப்பதில்லை. நிலமும் மட்டமாக இருக்கிறது. மேலும் இதரக் கனிமரங்கள் போல் அல்லாமல் தென்னை தொடர்ந்து காய்க்கிறது. ஆகையால் உரமிடப்படாத தோப்பில் போதிய காய்ப்பில்லை.

ஆகையால் நைட்ரஜன், பொடாஷியம், பாஸ்வரம் மூன்றையும் தென்னந் தோப்புகளுக்கு இடவேண்டும்.

[11-ம் பக்கத் தொடர்ச்சி]

முதலியார், சிறை செல்லத் தயங்கினுர் என்று சொல்லி, அவருடைய தியாகத்தில் ஒரு சிறு கறை காண முயல்வர் சிலர். ஆனுல், அவர் சிறை செல்லத் தயங்கவில்லை என்பதும், அப்படிச் செல்ல வேண்டிய வாய்ப்போ அவசியமோ அவருக்கு ஏற்படவில்லை என்பதும், சிறிது காலம் அவர் வீட்டோடு காப்பில் வைக்கப்பட்டிருந்தார் என்பதும் அவரோடு நெருங்கி உறவாடி வந்த ஒரு சிலருக்கு நன்கு தெரியும்.

தவிர, முதலியார் நடத்திவந்த ''தேசபக்தன்'' ''நவசக்தி'' பத்திரிகைகளில் அவர் எழுதிய தலையங்கங்கள் அரசாங்கத்தின்மீது துவேஷத்தை உண்டுபண்ணக்கூடியவை என்பதற்காக, அப்பொழுதைய அரசாங்கம், ஆயிரக்கணக்கில் ஈடுகாணம் (ஜாமீன்) கேட்டுப்பெற்று, பிறகு அந்தத் தொகைகளை அவர் இழந்துவிடும்படி செய்ததை அந்த ஒரு சிலர் நன்கு அறிவர்.

கவிதை உள்ளம் படைத்தவர்

முதலியாரை, கவிதைகள் பல இயற்றிய ஒரு கவிஞராக மட்டுமே ஒரு சிலர் காண்பர், ஆனுல். அவர் கவிதை உள்ளம் படைத்தவர், கவிதையாக வாழ்ந்தவர், வாழ்க்கையை கவிதையாக அமைத்துக் கொண்டவர். இனிமையும் எளிமையும் அவரோடு பிறந்த இயல்புகள். இத்தகைய கவிஞர்கள், கர்ம வீரர்களைச் சிருஷ்டித்துக் கொடுப்பது தங்கள் தலையாய கடமையென்று கருதுகிருர்கள். இவர்களே கர்மவீரர்களாகிவிடுவதில்லை. உலக வரலாற்றில் இத்தகைய கவிஞர் பலரை நாம் சந்திக்கிருேம். சீனு, ருஷ்யா, துருக்கி, ஐர்லாந்து, இத்தாலி ஆகிய அநேக நாடுகளில், கர்மவீரர்கள் பலர் தோன்றிப் பெரும் புரட்சி நடத்தியதற்குக் காரணமாக இருந்தவர்கள் கவிஞர்களே. இவர்களில் ஒருவராகவே முதலியாரை நாம் பார்க்க வேண்டும். அன்றைய தேசிய இயக்கத்தை உரமிட்டு வளர்ப்பதற்கான கர்மவீரர்களைப் பாரதியாரின் கவிதைகள் சிருஷ்டித்துக் கொடுத்தன. அதே காலத்திலும், அவருக்குப் பின்பும், முதலியாரின் எழுத்துக்களும் பேச்சுக்களும் அந்தப் பணியைத் தொடர்ந்து செய்து வந்தன. ஆகவே, முதலியார் சிறை செல்லவில்லையென்ருல், அதற்கு அடிப்படையான காரணம், கர்மவீரர்களைச் சிருஷ்டித்துக் கொடுக்கும் தமது தலையாய கடமை ஸ்தம்பித்துப் போய்விடக்கூடாதென்பதுதான்.

உண்மையான மனிதனுக ஒருவன் வாழ விரும்பினுல், அவன், மண்ணுசை, பெண்ணுசை, பொன்னுசை ஆகிய இவற்றைத் துறக்கவேண்டும் என்று பெரியோர்கள் சொல்லியிருக்கிருர்கள் அல்லவா, இந்த வாசகத்திற்கு முதலியார் சிறந்த எடுத்துக் காட்டாக விளங்கினுர். இது மட்டுமன்று, நான்காவதாகச் சொல்லப்படக்கூடிய பதவி ஆசையையும் துறந்தவராயிருந்தார் முதலியார்.

ஒருவனுக்கு ஒருத்தி

அவர் 1918-ம் ஆண்டின் இடைக்காலத்தில், முப்பத்து மூன்ருவது வயதில் தமது மனைவியார் கமலாம்பிகை அம்மையாரை இழந்துவிட்டார். அதற்குப் பிறகு, அவர் மறுமணம் செய்துகொள்ளவில்லை. எத்தனையோ பெரிய பெரிய இடத்துப் புள்ளிகள் அவருக்குப் பெண் கொடுக்க போட்டி போட்டுக்கொண்டு முன்வந்தன. ஆனுல் அவர் கண்டிப்பாக மறுத்துவிட்டார். ஒருத்தனுக்கு ஒருத்தி என்ற ஏகபத்தினி விரதத்தைக் கடைப்பிடித்தார். கடைசிகாலம் வரை பிரம்மச்சரிய வாழ்க்கையையே நடத்தி வந்தார். அவரைக் காண வரும் பெண்கள், தங்கள் தந்தை முன்னே வந்து நிற்பதாகவே உணர்வார்கள், தங்கள் குறைகளை மனம் விட்டுச் சொல்வார்கள், ஆறுதலும் பெறுவார்கள். வாழ்க்கையில் வழுக்கி விழுந்துவிட்ட எத்தனையோ சகோதரிகள், அவருடைய அறிவுரைகளையும், அறவுரைகளையும் கேட்டுத் திருந்தி நல்வாழ்வு நடத்த முற்பட்டிருக்கிருர்கள்.

ஆசைகளுக்கு அப்பாற்பட்டவர்

முதலியார், நாவசைத்திருந்தால், லட்சக்கணக்கில் பணம் சேர்த்திருக்கலாம் என்பது மட்டுமல்ல, குவித்தே இருக்கலாம். அதே பிரகாரம், அவர் விரும்பி இருந்தால் அரசியலிலோ, புலவர் குழுவிலோ மேலான பதவி கிட்டியிருக்கும். ஆனுல் இந்தப் பொன்னுசைக்கும், பதவி ஆசைக்கும் அவர் புறம்பானவராகவே இருந்தார். இவ்விரண்டுக்கும் ஆசைப்பட்டு, தமது மனச்சாட்சியில் லேசாகக்கூட கறையை உண்டுபண்ணிக்கொள்ள அவர் விரும்பவில்லை. அவர் பொன்னுசைக்குப் புறம்பானவராக இருந்தார் என்பதற்கு எடுத்துக் காட்டாக அவர் ஒரு 'பர்ஸ்' (பணப்பை) கூட வைத்துக்கொண்டதில்லை. தொழிலாளர் கூட்டங்களுக்கோ வேறு கூட்டங்களுக்கோ அவர் செல்லும் போது, வண்டிச் சத்தத்திற்குத் தேவையான சில்லறையை ஒரு காகிதத்தில் பொட்டலமாகக் கட்டி சட்டைப்பையில் போட்டுக்கொள்வார்; அல்லது இடுப்பில் சொருகிக்கொள்வார். யாராவது பண உதவிக்கு வந்தால், தமது தமையனுர் திரு வி. உலகநாத முதலியாரைக்கொண்டு கொடுக்கச் செய்வார். அவர் கையில் பணம் வைத்துக்கொண்டிராததற்கு ஒரு காரணம், தம் கையால் கொடுத்தால், கொடுக்கிருேம் என்ற தன் முனைப்பு உணர்ச்சி எங்கே தன்னை ஆட்கொண்டு

விடுமோ என்ற அச்சம்; மற்றொரு காரணம்; ஒரு கையால் கொடுத்தது மற்றொரு கைக்கு தெரியக்கூடாதென்ற மூதுரை அவர் கொடையில் அடங்கியிருந்தது.

சங்கீத ரசிகர்

முதலியார் நல்ல சங்கீத ரசிகர். இசை நுணுக்கங்களை நன்கு அறிவார். சிறு பிராயத்தில் தமது தந்தையார் திரு விருத்தாசல முதலியாருடன் அப்பொழுது சென்னையில் மிகவும் பிரசித்தமானவர்களில் ஒருவராயிருந்த ஜஸ்டிஸ் மணி ஐயர் (இவரை மயிலை முனீந்திரர் எனவே முதலியார் அழைத்து வந்தார்). மாளிகையில் கண்ணொளி இழந்து நின்ற சரபசாஸ்திரியார் என்ற புல்லாங்குழல் வித்துவான் அவ்வப்பொழுது அளிக்கும் இசை விருந்துக்குச் சென்று வருவார். 'அந்த இசை மேதையின் குழலோசையைக் கேட்ட மாத்திரத்தில் என் அடிவயிற்றிலிருந்து ஆனந்த அலை பொங்கி எழுவதாக நான் உணர்வேன்' என்று அடிக்கடி கூறுவார். தமது சொற்பொழிவுகளின்போது, மேற்கோள்களை இசையோடுதான் எடுத்துக் காட்டுவார். இதனால் ராக ஆலாபனை சகிதம் சொல்வார் என்பது அர்த்தமல்ல. செவிக்கு இனிமையளிக்கின்ற முறையில் சொல்வார் என்பது தான் அர்த்தம்.

மிகச் சிறந்த பேச்சாளர்

அவர் சொற்பொழிவுகள் நிகழ்த்துகிறபோது எடுத்துக்கொண்ட பொருளின் வரம்புக்கப்பால் மறந்தும் செல்லமாட்டார். நிகழ்த்தவேண்டிய சொற்பொழிவைப்பற்றி முன்கூட்டியே சிந்தித்து, என்ன பேசவேண்டுமென்பதற்கு ஒரு சிறு குறிப்பு தயாரித்துக்கொண்டு கூட்டத்திற்குச் செல்வார். இதனால் எடுத்துக்கொண்ட பொருளுக்குப் புறம்பாகப் போகாமலிருப்பது அவருக்கு எளிதாயிருந்தது. பொதுவாகவே அவருடைய எழுத்து நடையைப்போலவே பேச்சு நடையும் இருக்கும். பேச்சின் கடைசியில் ஓர் ஐந்து நிமிஷம், தாம் அதுகாறும் பேசியதை, என்றும் என்றும் போட்டுத் தொகுத்துச் சொல்வார். அவருடைய பேச்சின் முற்பகுதியை அசந்து மறந்து கேட்கத் தவறி விட்டவர்கள்கூட, இந்தத் தொகுப்புரையைக் கேட்டு, அதுகாறும் அவர் பேசியதை நன்கு விளங்கிகொள்வார்கள்.

முதலியாருக்கு அன்னிபெசண்ட் அம்மையாரிடத்தில் ஆழ்ந்த பக்தி உண்டு. அவரை அன்னை பெசண்ட் என்றே அழைப்பார். பாரதநாட்டின் விடுதலைக்கு, சட்டவரம்புக்குட்பட்ட கிளர்ச்சி செய்வதற்கான வழி வகைகளை முறையாக வகுத்துக் காட்டி அதன் பிரகாரம் நடத்திக் காட்டியவர் அந்த அம்மையார் என்பதை முதலியார் நன்கு உணர்ந்திருந்தார். ''தேசபக்தன்'' பத்திரிகை தொடங்குவதற்கு அன்னிபெசண்ட் அம்மையார் அதிக உற்சாகமளித்தார். பொருளுதவியும் செய்தார்.

வாழ்க்கை வரலாறு

முதலியாரின் முன்னோர்கள் சோழநாட்டைச் சேர்ந்தவர்கள், திருவாரூரில் வதிந்தவர்கள். ஆயினும் முதலியார், தொண்டை நாட்டிலே பிறந்து, வளர்ந்து, வாழ்ந்து புகழெய்தினார். தமது முன்னோர்கள் வதிந்த ஊரை நினைவு கொள்கின்ற முறையில், தமது பெயருக்கு முன்னால், தமது பங்காளிகளின் அன்பான கட்டளைப்படி திரு என்ற ஈரெழுத்துக்களை சேர்த்துக்கொண்டார்.

இவர் பிறந்தது சென்னை பூவிருந்தவல்லிக்கு அருகில் உள்ள துள்ளம் எனனும் கிராமம், வருஷம் 1883. இவருடைய தந்தையார் விருத்தாசல முதலியார். தாயார் சின்னம்மாள்.

இவர் பிறக்கும்போது வலது காலில் ஆறு விரல்களோடு பிறந்தார். 'ஆறு விரல்களோடு பிறந்தவர்கள் ஆனை கட்டி வாழ்வார்கள்' என்ற வாசகத்திற்கிணங்க இவர் வாழவில்லையென்றாலும், தமது ஐம்புலன்களை கட்டி மனிதனாக வாழ்ந்தார்.

முதலியார் மெட்ரிகுலேஷன் வகுப்போடு படிப்பை முடித்துக்கொண்டு, குடும்பத்தின் தேவையை முன்னிட்டு, ஸ்பென்ஸர் கம்பெனியில் ஒரு கணக்கராகப் போய்ச் சேர்ந்தார். சுமார் பதினெட்டு மாதங்களுக்குப் பிறகு, இந்த உத்தியோகத்திலிருந்து விலகி, ஆயிரம்விளக்கு என்ற பேட்டையில் நடைபெற்று வந்த வெஸ்லயன் மிஷன் பள்ளியில் சுமார் ஆறு ஆண்டு காலம் ஆசிரியராகப் பணியாற்றினார். பின்னர் சுமார் பதினெட்டு மாத காலம் வெஸ்லியன கல்லூரியில் தலைமைத் தமிழாசிரியராகச் சேவை செய்தார். இதற்குப் பிறகே 1917-ம் ஆண்டு கடைசியில் பத்திரிகாசிரிய பீடத்தில் அமர்ந்து தேசத்தொண்டு செய்து வரத்தொடங்கினார்.

தமிழ்மீது தணியாத காதல்

முதலியாருக்கு இளமையில் ஆங்கில மொழியின் மீது மோகம் இருந்ததாயினும், வயதாக ஆக தமிழ்மொழியின்மீது தணியாத காதல் கொண்டவரானார். ஆரம்பித்தல் யாழ்ப்பாணம் நா. கதிர்வேற்பிள்ளை அவர்களிடமும், பிறகு மயிலை மகாவித்வான் தணிகாசல முதலியார் அவர்களிடமும் தமிழ் பயின்று அதில் நல்ல புலமையும் பெற்றார். இந்தப் புலமையை அநேக புராணப் பிரசங்கங்கள் வாயிலாக வெளிப்படுத்துவதற்கான வாய்ப்புகள் அவருக்கு நிறையக் கிடைத்தன. இந்தக் காலத்தில் தான் இவர் தமது சொல்லாற்றலை வளர்த்துக் கொண்டார்.

'தேசபக்தன்' ஆசிரிய பீடத்தை அலங்கரித்து வந்தபோதுதான் அவர் தொழிலாளர் இயக்கத்தைத் தொடங்கி அதைத் திறம்பட நடத்தி வந்தார். தொழிலாளர்களின் உரிமைகளுக்காகவும், அவர்களுக்கு நியாயமாகக் கிடைக்கவேண்டிய ஊதியத்திற்காகவும் பல போராட்டங்கள் நடத்தி அவைகளில் வெற்றியும் கண்டார். இந்தப் பலதுறை அலுவல்களுக்கிடையே அநேக நூல்கள் இயற்றி வெளியிட்டு வந்தார்.

கடைசி காலத்தில் முதலியார் கண்ணொளி இழந்து துன்புற்றார். ஆயினும் மன அமைதி குலைவுறாமல் பாதுகாத்து வந்தார். இதற்குத் துணை செய்தவை இரண்டு. ஒன்று, அவரது கவிதையுள்ளம். மற்றொன்று, இவரது சமரஸ ஞானம். இவ்விரண்டும், கண்பார்வை இழந்து நின்ற அந்தக் காலத்தில், பல சமய உண்மைகளை விளக்கிக் கூறுகின்ற முறையில் செய்யுள் வடிவமான அநேக நூல்களை இயற்றும்படி செய்தன. இந்த நூல்களைப் படித்தவர்களுக்கு இவருடைய ஞான பரிபக்குவம் ஒருவாறு புலனாகும்.

முதலியார் 1953-ம் ஆண்டு பூதவுடலை நீத்து புகழுடல் எய்தினார்.

கிராம நலம்
பகுதி-2
GRAMANALAM
PART. 2

பஞ்சாயத்து அரசிதழ்
PANCHAYAT GAZETTE

[பஞ்சாயத்து அபிவிருத்தி பற்றிய அரசாங்க ஆணைகள், விதிகள் முதலியவற்றின் சுருக்கம் இந்தப் பகுதியில் இடம் பெறுகிறது.]

பஞ்சாயத்துத் தேர்தல்—விதிமுறை விளக்கம்

நமது சென்னை ராஜ்யத்தில் சுமார் 12,300 கிராமப் பஞ்சாயத்துக்களும் சுமார் 400 நகரப் பஞ்சாயத்துக்களும் இருககின்றன. இவை எல்லாவற்றிற்கும் ஒரே நாளில் தேர்தல் நடத்துவது, மிகவும் கடினமாகும். ஆகையால் ஒவ்வொரு மாவட்டத்தையும், மூன்று பிரிவாகப்பிரித்து, ஒவ்வொரு பிரிவிற்கும் ஒவ்வொரு நாளில் தேர்தல் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஆகவே, சமீபத்தில், காற்று மழையால் பாதிக்கப்பட்ட மண்டபம் பஞ்சாயத்து யூனியனில் உள்ள பஞ்சாயத்துக்கள் தவிர, மற்ற எல்லா இடங்களிலும் ஜனவரி மாதம் 28, 30 தேதிகளிலும், பிப்ரவரி மாதம் 2-ம் தேதியிலும் ஆக மூன்று நாட்களில் தேர்தல்கள் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. 1958ம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட புதிய பஞ்சாயத்து சட்டத்தின் கீழ் பொதுத் தேர்தல்கள் நடைபெற இருப்பது இதுவே முதல் முறையாகும். இத் தேர்தல்கள் நல்ல முறையில் நடை பெறுவது, பஞ்சாயத்து ராஜ்யத்தில் நாம் கொண்டுள்ள நம்பிக்கையை உறுதிப்படுத்துவதாகும். மேலும், பல நல்ல கிராம சீர்திருத்தங்கள் செய்வதற்கும் இது உற்சாகம் அளிக்கும்.

இந்தத் தேர்தல்கள் மூலம் ஒவ்வொரு பஞ்சாயத்திற்கும், ஐந்திற்குக் குறையாமலும், 15—க்கு மேற்படாமலும், அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப் படுவார்கள். அங்கத்தினர்களின் எண்ணிக்கை பஞ்சாயத்தின் ஜனத்தொகையைப் பொறுத்ததாகும். அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்கும் பொருட்டு பஞ்சாயத்துக்களின் எல்லைகள் பல வார்டுகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு வார்டிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய அங்கத்தினர் எண்ணிக்கையும் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஷெட்யூல்ட் வகுப்பினர்கள், மலைஜாதி மக்கள் தேர்ந்தெடுக்கப்படுவதற்காக பஞ்சாயத்துக்களில் இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. தேர்ந்தெடுக்கப் பட்டுள்ள அங்கத்தினர்களில், பெண் அங்கத்தினர்கள் இல்லையென்றால், ஒவ்வொரு பஞ்சாயத்தும் ஒரு பெண் அங்கத்தினரைச் சேர்த்துக்கொள்ள சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பஞ்சாயத்து அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுப்பது பற்றி 1958-ம் ஆண்டு பஞ்சாயத்து சட்டத்தின்கீழ் கிராம பஞ்சாயத்துக்களுக்கும்: நகரப் பஞ்சாயத்துக்களுக்கும் தனிப்பட்ட விதிமுறைகள் இயற்றப்பட்டுள்ளன. இவ்விதிகளின் தமிழாக்கம் ரெவின்யூ டிவிஷனல் ஆபீஸரின் அலுவலகங்களில் விற்பனைக்குக் கிடைக்கும். கிராமப் பஞ்சாயத்துக்களில் தேர்தல் நடப்பதற்கு, குறைந்தது பத்து நாட்களுக்கு முன்னமே, தேர்தல் பற்றிய அறிவிப்பு ஒன்று தமிழில் பஞ்சாயத்து அலுவலகத்திலும், வேறு ஒரு முக்கியமான இடத்திலும் வெளியிடப் படும். அவ்வறிவிப்பில் எந்தெந்த வார்டுகளில் தேர்தல்கள் நடைபெறுமென்றும், அவ்வார்டுகளிலிருந்து எத்தனை அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்றும் குறிப்பிடப்பட்டிருக்கும். மேலும் ஷெட்யூல்ட் வகுப்பினர்களுக்கும், மலைஜாதி வகுப்பினர்களுக்கும் எத்தனை இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன என்றும், அபேட்சா பத்திரங்களை எந்தத் தேதியில், யாரிடம், எப்பொழுது கொடுக்கப்பட வேண்டுமென்றும் அறிவிக்கப்பட்டிருக்கும். இத்துடன் அப்பத்திரங்கள் எப்போது பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படுமென்றும், தேர்தல்கள் எந்த இடத்தில் எப்போது நடைபெறுமென்றும், அவ்வறிவிப்பில் கண்டிருக்கும். நகரப் பஞ்சாயத்துக்களிலும் இத்தகைய அறிவிப் பொன்று, தேர்தல் நடைபெறுவதற்குக் குறைந்தது 21 நாட்களுக்கு முன்பு, ஒவ்வொரு வார்டிலும், ஆங்கிலத்திலும், தமிழிலும் வெளியிடப்படும்.

இத் தேர்தல்களை மேற்பார்வையிடவும் தேவையான முன் ஏற்பாடுகளைச் செய்யவும் கிராமப் பஞ்சாயத்துக்களுக்கு, பஞ்சாயத்து விஸ்தரிப்பு அதிகாரி, உதவி தாசில்தார் ஆகியவர்கள் ரிட்டர்னிங் ஆபீசர் (Returning Officers) களாக நியமிக்கப்பட்டுள்ளனர். கன்னியாகுமரி மாவட்டத்தில், எல்லா விஸ்தரிப்பு அதிகாரிகளும் ரிட்டர்னிங் ஆபீசர் (Returning Officers) களாக நியமிக்கப்படுவார்கள். நகரப் பஞ்சாயத்துக்களுக்கு, தாசில்தார்களும், உதவி தாசில்தார்களும் ரிட்டர்னிங் ஆபீசர் (Returning Officers) களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

கிராமப் பஞ்சாயத்துக்களுக்கான அபேட்சா மனுக்கள் பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன் அலுவலகங்களிலும், தாலுகா அலுவலகங்களிலும், விலையின்றிக் கிடைக்கும். தேர்தல் நடக்கும்

நாளைக்கு இரு தினங்களுக்கு முன் அபேட்சா மனுக்களை அப்பஞ்சாயத்திற்காக நியமிக்கப்பட்டுள்ள தலைமைத் தேர்தல் அதிகாரியின் முன் தாக்கல் செய்யவேண்டும். இம்மனுவில் அபேட்சகரும் முன் மொழிபவரும் கையெழுத்திட வேண்டும். வழிமொழிபவர் தேவையில்லை. இம்மனுவை, அபேட்சகரோ அல்லது முன் மொழிபவரோ தாக்கல் செய்யலாம். இதற்காக கிராம அதிகாரியின் ஒப்புதல் கையெழுத்துத் தேவையில்லை, அபேட்சகர், தான் நிற்கும் வார்டின் வாக்காளராக இருக்கவேண்டும் என்ற அவசியமில்லை. ஆனல் அவரை முன்மொழிபவர், அந்த வார்டின் வாக்காளராக இருக்கவேண்டும். அபேட்சா மனுக்கள் குறிப்பிட்ட தேதியன்று காலை 10 மணி முதல் 12 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும். இம்மனுக்கள் 12 மணியிலிருந்து 1 மணி வரை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். அதற்கு அடுத்த நாள் காலை 8 மணி வரை, இம்மனுக்களை அபேட்சகர்கள் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம். காலை 8 மணி முதல் 9 மணி வரை அபேட்சகர்களுக்குச் சின்னங்கள் அளிக்கப்படும். சின்னங்கள் அளித்த மறுநாள்தான் தேர்தல் நடக்கும். தேர்தல் காலவரை ஏழு மணி நேரம். அதாவது காலை 8 மணி முதல் மாலை 3 மணி வரை.

தேர்தலுக்கு நிற்க விரும்பும் ஒவ்வொரு அபேட்சகரும் அவர் ஷெட்யூல்ட் அல்லது மலை ஜாதியைச் சேர்ந்தவராக இருந்தால் ஐந்து ரூபாயும், மற்றவர்கள் 20 ரூபாயும் வைப்புத் தொகையாக அதாவது Deposit ஆக தேர்தல் அதிகாரியிடம் செலுத்தவேண்டும்.

ஒவ்வொரு வார்டுக்கும் குறைந்தது ஒரு வாக்கெடுப்பு நிலையம் இருக்கும். இந்நிலையங்கள் அநேகமாக பஞ்சாயத்து யூனியன் பள்ளிக்கூடங்களாகவோ அல்லது மற்ற அரசாங்க அலுவலகக் கட்டிடங்களாகவோ இருக்கும், நிலையங்களின் நுழைவாசலில் அபேட்சகர்களின் பெயர்களும், அவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள சின்னங்களும் அடங்கிய ஓர் அறிவிப்பும் பிரசுரிக்கப்பட்டு இருக்கும். இத்துடன், இந்நிலையத்தில் வாக்களிக்க உரிமை பெற்றுள்ளவர்களைப் பற்றிய குறிப்படங்கிய ஓர் அறிவிப்பும் வைக்கப்பட்டிருக்கும்.

பஞ்சாயத்து தேர்தல்கள், கட்சி சார்பற்ற முறையில் நடைபெற இருப்பதால் இத் தேர்தலில் போட்டியிடும் அபேட்சகர்களுக்கு, கட்சி சார்பற்ற 25 பொதுச் சின்னங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. சீட்டுக் குலுக்கிப் போடும் முறையில், இச்சின்னங்கள் அபேட்சகர்களுக்கு அளிக்கப்படும்.

நகரப் பஞ்சாயத்துத் தேர்தல்களில், ஆள் மாருட்டம் ஏற்படாமலிருக்க, ஒவ்வொரு வாக்காளரின் இடது கை பெருவிரல் நகச் சதையின் கீழ் அழியாத மையினல் குறி போடப்படும். இக்குறி, ஏற்கனவே விரலில் போடப்பட்டிருந்தாலும் அல்லது இக்குறியை இடுவதற்கு ஆட்சேபித்தாலும் அல்லது இக்குறியையிட்டபிறகு அதை அழிக்க முயற்சி செய்தாலும், வாக்காளர்களுக்கு வாக்குச் சீட்டு கொடுக்கப்பட மாட்டாது.

இந்தத் தேர்தல்களில் உபயோகப்படும் வாக்குச் சீட்டுகளில், சின்னங்கள் மட்டும் தான், அச்சிடப் பட்டிருக்கும். அபேட்சகர்களின் பெயர்கள் இருக்கா.

கிராமப் பஞ்சாயத்துக்களில் வாக்கெடுக்கும் முறையில், முக்கியமான ஒரு மாறுதல் செய்யப்பட்டுள்ளது. இதுவரை நடந்த தேர்தல்களில் போட்டியிடும் அபேட்சகர் ஒவ்வொருவருக்கும், அவருடைய சின்னம் ஒட்டப்பட்ட ஒரு பெட்டி வாக்கெடுக்கும் அறையில் வைக்கப்பட்டிருக்கும். வாக்காளர் வாக்குச் சீட்டைப் பெற்றுக்கொண்டு, அந்த அறையினுள் சென்று, தான் விரும்பும் அபேட்சகரின் சின்னம் ஒட்டப்பட்டுள்ள பெட்டியில், அதைப் போடலாம். ஆனல், இப்பொழுது நடைபெறப்போகும் தேர்தலில் இம்முறை கையாளப்பட மாட்டாது. அதற்குப் பதில், ஒவ்வொரு வாக்காளருக்கும், அபேட்சகரின் சின்னங்கள் அச்சிடப்பட்ட ஒரே ஒரு வாக்குச் சீட்டு கொடுக்கப்படும். அச்சீட்டைப் பெற்றுக்கொண்டு வாக்களிக்கும் இடத்திற்குச் சென்று தான் விரும்பும் அபேட்சகரின் சின்னத்தின்மீதோ அல்லது அச்சின்னத்தை உள் அடக்கிய கட்டத்தின் ஏதாவது ஒரு இடத்திலோ முத்திரையிட வேண்டும். முத்திரை யிடுவதற்காக ஒரு கருவி கொடுக்கப்படும். தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய அபேட்சகர்களின் எண்ணிக்கை, எத்தனையோ அத்தனை சின்னங்களின் மீது குறியிடலாம். இவ்வாறு குறியிட்ட பிறகு, வாக்குச் சீட்டை மடித்து, வெளியே வந்து, தேர்தல் அதிகாரியின் முன் வைக்கப்பட்டிருக்கும் வாக்குப் பெட்டியில் போடவேண்டும்.

நகரப் பஞ்சாயத்துக்களிலுள்ள ஒவ்வொரு வாக்கெடுக்கும் நிலையத்திலும், ஒரு தேர்தல் அதிகாரியும் இரண்டு உதவி தேர்தல் அதிகாரிகளும் இருப்பார்கள். வாக்காளர் ஒருவர் வாக்கெடுக்கும் நிலையத்தினுள் நுழைந்தவுடன், முதல் உதவித் தேர்தல் அதிகாரி அவருடைய அடையாளத்தை வாக்காளர் பட்டியலின் உதவியினல் தெரிந்துகொள்கிருர். பிறகு வாக்குச் சீட்டின் எண்ணை பட்டியலில் குறித்துக்கொண்டு, அச்சீட்டைக் கொடுப்பார். இரண்டாவது உதவித் தேர்தல் அதிகாரி, வாக்காளரின் இடது கை ஆள்காட்டி விரலின் நகச் சதையின் மேல் அழியாத மையினல், குறியிடுவார். மேலும் வாக்குச் சீட்டில் முத்திரையிட்டு வாக்களிக்கும் விவரத்தை விளக்கிக் கூறி, முத்திரையிடும் கருவியை வாக்காளர்களுக்குக் கொடுப்பார், வாக்காளர்

மறைவான இடத்திற்குச் சென்று, குறியை யிட வேண்டும். பிறகு, முத்திரையிடும் கருவியை திரும்பிக் கொடுத்துவிட்டு, வாக்குச் சீட்டை மடித்து வாக்குப் பெட்டியில் போட வேண்டும். கிராமப் பஞ்சாயத்துக்களில், அழியாத மை உபயோகிப்பதில்லை. ஆதலால் ஒரு தேர்தல் அதிகாரியும், ஓர் உதவித் தேர்தல் அதிகாரியும் தான், ஒவ்வொரு வாக்கெடுக்கும் நிலையத்திலும், பணி புரிவார்கள்.

கிராமப் பஞ்சாயத்துக்களில் சரியாக மாலை 3 மணிக்கும், நகரப் பஞ்சாயத்துக்களில், சரியாக மாலை 5 மணிக்கும், வாக்களிக்கும் நிலையங்கள் மூடப்படும். ஆனால் மேலே குறிப்பிட்ட நேரத்திற்குள், நிலையத்திற்கு வந்து சேர்ந்துள்ள வாக்காளர்கள் அனைவரும், வாக்களிப்பதற்கான ஏற்பாடு செய்யப்படும்.

தேர்தல் தேதிக்கு முன்னால், அபேட்சகர் யாரேனும் இறந்துவிட்டால், அந்த வார்டுக்கான தேர்தல் நிறுத்தப்பட்டு, முதலிலிருந்து மறுபடி ஆரம்பிக்கப்படும்.

கிராமப் பஞ்சாயத்தைப் பொறுத்தவரையில் வாக்களிக்கும் நிலையத்திலுள்ள தேர்தல் அதிகாரியே வாக்கெடுப்பு முடிந்தவுடன், வாக்குகளை அங்கேயே எண்ணி தேர்ந்தெடுக்கப்பட்ட அபேட்சகர்களின் பெயர்களை அறிவிப்பார். ஒரு வார்டில், ஒன்றுக்கு மேற்பட்ட வாக்களிக்கும் நிலையங்களிருந்தால், உதவிப் பிரதம தேர்தல் அதிகாரி பணி புரியும் நிலையத்திற்கு, எல்லா வாக்குப் பெட்டிகளும் கொண்டுவரப்பட்டு, வாக்குகள் எண்ணப்படும். பஞ்சாயத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட எல்லா அபேட்சகர்களின் பெயர்களையும், பிரதம தேர்தல் அதிகாரி பஞ்சாயத்து அலுவலகத்திலும் வேறொரு இடத்திலும் வெளியிடுவார். நகரப் பஞ்சாயத்துக்களைப் பொறுத்தவரையில், வார்டுகளில் உபயோகப்படுத்தப்பட்ட எல்லா வாக்குப் பெட்டிகளும், பஞ்சாயத்து அலுவலகத்திற்குக் கொண்டுவரப்பட்டு, ''ரிட்டர்னிங் ஆபீசர்'' (Returning Officer) அவர்களால், வாக்குகள் எண்ணப்படும். இரண்டு அபேட்சகர்கள் ஒரே எண்ணிக்கையான வாக்குகள் பெற்றிருந்தால், திருவுளச் சீட்டுப் போடுவதன் மூலம் முடிவெடுக்கப்படும்

தற்போது பஞ்சாயத்துக்களில் அங்கத்தினர்களாக உள்ளவர்களின் பதவிக் காலம் பிப்ரவரி மாதம் 2–ம் தேதியன்று முடிவடையும். புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்கள், பிப்ரவரி மாதம் 3-ம் தேதியன்று பதவி ஏற்பார்கள். பதவி ஏற்கும் நாளன்று, அவர்கள் 1958-ம் ஆண்டு பஞ்சாயத்துச் சட்டத்தின் 27-ம் பிரிவில் குறிப்பிட்டபடி பதவிப் பிரமாணம் எடுத்துக் கொள்ள வேண்டும்.

தேர்தல் சின்னங்களைப் பற்றிய முக்கிய அறிவிப்பு

பஞ்சாயத்துத் தேர்தல்களில் சின்னங்கள் ஒதுக்குவது சம்பந்தமாக அரசாங்கம் முக்கியமான ஓர் உத்தரவு பிறப்பித்துள்ளது. அதாவது, சீட்டு குலுக்கிப்போடும் முறையில் அபேட்சகர்களுக்கு சின்னங்கள் ஒதுக்கப்படும். போட்டியிடும் அபேட்சகர்கள் அனைவரும் தங்களுக்கு ஒதுக்கப்படும் சின்னங்கள் என்னென்ன என்பது பற்றி ஒருமனதாக முடிவுக்கு வந்தாலும், சின்னங்கள் ஒதுக்குவது சீட்டு குலுக்கிப்போடும் முறையில்தான் நடக்கும். அந்தச் சின்னங்களாவன :— (1) பறவை (ஊர்க்குருவி), (2) ஒட்டகம், (3) ரயில் எஞ்சின். (4) மண்வெட்டி, (5) படகு, (6) இரு இலைகளுடன் கூடிய ஒரு சிறு கிளை, (7) பானை, (8) குதிரை, (9) தராசு, (10) மலர், (11) இரு சக்கர சைக்கிள், (12) மனிதக் கை, (13) குதிரை வீரன், (14) கடிகாரம், (15) மீன், (16) நாற்காலி, (17) கோப்பையும் தட்டும், (18) மணி, (19) மூக்குக் கண்ணாடி, (20) மாடு பூட்டாத வண்டி, (21) ஏணி. (22) வில்லும் அம்பும் (23) பூட்டும் சாவியும் (24) குடை (25) மோட்டார் வண்டி. வாக்குச்சீட்டுகளில் மேற்கண்டவாறு சின்னங்கள் வரிசையாக அச்சிடப்பட்டிருக்கும். வாக்குச் சீட்டுகள் இரண்டு பிரிவுகளாக அச்சிடப்பட்டு முதல் பிரிவில் 1-13 சின்னங்களும், இரண்டாம் பிரிவில் 25 சின்னங்களும் அடங்கியிருக்கும்.

பஞ்சாயத்துத் தலைவர் தேர்தல், பிப்ரவரி மாதம் 12, 13 ஆகிய தேதிகளில் நடைபெறும். பஞ்சாயத்து அங்கத்தினர்களே, தங்களுக்குள் ஒருவரைத் தலைவராகத் தேர்ந்தெடுத்துக்கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலுள்ள பஞ்சாயத்துக்களின் தலைவர்களே, அந்த யூனியனில் அங்கத்தினர்களாக ஆவார்கள். அவர்கள் பிப்ரவரி மாதம் 14–ம் தேதி பஞ்சாயத்து யூனியன் அங்கத்தினர்களாகப் பதவி ஏற்பார்கள். பஞ்சாயத்து யூனியன் தலைவர் தேர்தல், பிப்ரவரி மாதம் 22–ம் தேதிக்கும் 25-ம் தேதிக்கும் இடையில் நடைபெறும். பஞ்சாயத்து யூனியன் அங்கத்தினர்களே, தங்களுக்குள் ஒருவரைத் தலைவராகத் தேர்ந்தெடுத்துக்கொள்ள வேண்டும்.

தற்போது நடக்கவிருக்கும் பஞ்சாயத்துத் தேர்தல்களை நல்ல முறையில் நடத்திக் காண்பிப்பதன் மூலம் ஜனநாயகத்திலும். பஞ்சாயத்து ஆட்சியிலும் நமக்குள்ள நம்பிக்கையை உறுதி செய்ய வேண்டும் ; இதற்காக பொதுமக்களும் அதிகாரிகளும் ஒத்துழைத்து தேர்தலை நல்ல முறையில் நடத்தித் தருவார்கள் என்று நம்புகிறேன்.

எஸ். கிருஷ்ணசாமி பிள்ளை, ஐ. ஏ. எஸ்.
பிரதம தேர்தல் அதிகாரி.

பஞ்சாயத்துத் தேர்தல்களில் அரசாங்க ஊழியர்கள், தல நிர்வாக அலுவலர்கள் நடந்து கொள்ளவேண்டிய முறை.

Elections—Ordinary—Panchayats—Code of Conduct for Government servants and employees of Local Bodies—Instructions—Issued.

(Memorandum No. 242791, R.D. and L.A., dated 21st December 1964.)

1960-ம் ஆண்டு அரசாங்கப் பணியாளர்கள் நடத்தை விதிகளில் 14-வது விதியில், தல நிர்வாகத் தேர்தல்களில் அரசாங்க ஊழியர்களின் நிலை குறித்து விளக்கப்பட்டுள்ளது. அது போலவே தல நிர்வாக தேர்தல்களில், நகராட்சிப் பணியாளர்கள், பஞ்சாயத்து மற்றும் பஞ்சாயத்து யூனியன் மன்ற அலுவலர்கள் ஆகியோரின் நிலை குறித்து (தகுந்த சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்டுள்ள) தல நிர்வாக அதிகாரிகள், பணியாளர்கள், ஆகியோரின் நன்னடத்தை விதிகளில் விளக்கப்பட்டுள்ளது. இவ்விதிகளின்படி, அரசாங்க ஊழியர்களும், தல நிர்வாக அலுவர்களும், தல நிர்வாக தேர்தல்களில் ஆதரவு திரட்டுதல், அல்லது அதில் எந்த விதத்திலாவது தலையிடுதல், அல்லது அவர்களுடைய செல்வாக்குகளை அதில் பயன்படுத்துதல் அல்லது தேர்தல்களில் பங்கெடுத்துக்கொள்ளுதல் ஆகியவை கண்டிப்பாக தடுக்கப்பட்டுள்ளது. இவ்விதிகளை அரசாங்க ஊழியர்களும் தல நிர்வாக அலுவலர்களும் தவறாது பின்பற்ற வேண்டும், என்று அரசாங்கம் வலியுறுத்த விரும்புகிறது.

2. 1965-ம் ஆண்டு ஜனவரி-பிப்ரவரி மாதங்களில் நடைபெறப்போகும் பஞ்சாயத்துக்களின் சாதாரணத் தேர்தல்களில் சம்பந்தப்பட்ட "ரிட்டர்னிங் ஆபீசர்கள்" வாக்கெடுப்பு அதிகாரிகள், தலைமை அதிகாரிகள், மற்றும் அரசாங்க ஊழியர்கள், நகராட்சி மன்றம், பஞ்சாயத்து யூனியன் மன்றம், பஞ்சாயத்துக்கள் ஆகியவற்றின் அலுவலர்கள் ஆகியோர் தேர்தல்கள் காலத்தில் எவ்வித விருப்பு வெறுப்பின்றி நடந்துகொள்வதுடன், பொது மக்கள் தங்களுடைய விருப்பு வெறுப்பின்மையின் பேரில் நம்பிக்கை கொள்ளும் வகையில் நடந்து கொள்வதுடன், அவர்கள் எந்த ஒரு அபேட்சகரையும் ஆதரிக்கிறார்கள் என்ற சந்தேகத்திற்கு எவ்வித இடமளிக்காமலும் இருக்க வேண்டுமென்று அரசாங்கம் விரும்புகிறது. மேலும் கீழ்க்கண்ட விளக்கங்களையும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மனதில் பதிய வைத்துக்கொள்ள வேண்டுமென்று அரசாங்கம் விரும்புகிறது:

(1) எந்த ஒரு 'ரிட்டர்னிங் ஆபீசர்' அல்லது வாக்கெடுப்பு அல்லது தலைமை அதிகாரி, அல்லது தேர்தலுக்காக எந்த ஒரு காரியத்தையும் செய்ய இவர்களால் நியமிக்கப்பட்ட எந்த ஒரு அதிகாரி அல்லது எழுத்தர் ஆகியோர் தேர்தலை நடத்தி வைக்கும் அல்லது நிர்வகிக்கும் பணியில், எந்த அபேட்சகருடைய வெற்றிக்கும் காரணமான எந்த ஒரு காரியமும் (வாக்களிக்கும் காரியம் தவிர) செய்யக்கூடாது.

(2) அரசாங்க ஊழியர்கள் அல்லது தல நிர்வாக அலுவலர்கள் ஆகியோர் விருப்பு வெறுப்பின்றி இருப்பதோடு மட்டுமன்றி, தேர்தல் சம்பந்தப்பட்ட எல்லா முறையீடுகளையும் உடனடியாகக் கவனிக்கவேண்டும். முறையிடுபவர்கள் அவர்கள் முறையீடுகளை அளிப்பதற்கு, போதுமான அவகாசம் அளிப்பதுடன், அவர்களுடைய முறையீடுகளையும் விருப்பு வெறுப்பின்றி கேட்க வேண்டும்;

(3) தேர்தல் வேலைகளுக்காக நியமிக்கப்படக்கூடியவர்கள் எல்லோரும் தேர்தல் காரியங்களை நன்மதிப்புடன் செயலாற்றுவார்கள் என்றும், எந்த குறைகளுக்கும் இடமளிக்க மாட்டார்கள் என்றும் அரசாங்கம் நம்பிக்கை கொள்கிறது: தேர்தலை நன் முறையில் நடத்த நடவடிக்கை எடுக்கும் விஷயத்தில் ஏற்படும் சந்தேகங்களை நிவர்த்தி செய்து கொள்ள விரும்பும் எந்த அலுவலரும், அவருடைய மேலதிகாரியை கலந்தாலோசிக்க தயங்கக்கூடாது.

(4) மேற்கண்ட ஆணைகளை, மதிக்காது நடந்து கொள்ளுதல் மிகப் பெரிய ஒழுங்கற்ற செயலாக கருதப்பட்டு, கடுமையாக தண்டிக்கப்படும் என்று அரசாங்கம் வலியுறுத்த விரும்புகிறது.

(கிராம நலதல நிர்வாகத்துறையின் 1964-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 21-ந் தேதியிட்ட அரசாங்க அறிக்கை 242791)

பஞ்சாயத்துக்களின் சாதாரணத் தேர்தல்கள்—பஞ்சாயத்து அங்கத்தினர்கள், பஞ்சாயத்து யூனியன் மன்ற அங்கத்தினர்கள் பதவிப் பிரமாணம் செய்தல்.

Elections–Ordinary– Panchayats—Oath of allegiance to be made by members of Panchayats and Panchayat Union Councils—Instructions—Issued.

(Memorandum No. 242784 R.D. and L.A., dated 7th December 1964)

1958-ம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்துச் சட்டத்தின் பிரிவு 27-A-ன்படி, (1964-ம் ஆண்டின் 2-வது சட்டத்தின் புதிதாக சேர்க்கப்பட்ட 5-வது பிரிவு) (இப்பிரிவு இங்கு கொடுக்கப்படவில்லை) பஞ்சாயத்து அல்லது பஞ்சாயத்து யூனியன் மன்றத்தின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள,

உறுப்பினராகச் சேர்த்துக்கொள்ளப்பட்ட, உறுப்பினராக உள்ள அங்கத்தினர்கள் தங்கள் பதவியை ஏற்குமுன், பதவிப் பிரமாணம் அல்லது உறுதி மொழி எடுத்துக்கொள்ளவேண்டும். இந்த பதவிப் பிரமாணத்தின் தமிழாக்கம், இவ்வறிக்கையுடன் பிற்சேர்க்கப்பட்டு எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும், ரெவினியூ கோட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பப்படுகிறது.

2. பஞ்சாயத்து அங்கத்தினர்கள், பஞ்சாயத்து யூனியன் மன்ற அங்கத்தினர்கள் பதவிப் பிரமாணம் எடுத்துக்கொள்ளும் விஷயத்தில், பின்பற்றபடவேண்டிய நடைமுறைகளைப்பற்றி, கீழ்க்கண்ட உத்தரவுகள் வெளியிடப்படுகின்றன.

(1) பஞ்சாயத்தைப் பொருத்த வரையில், தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள அங்கத்தினர்களுக்குள் வயதில் பெரியவரை தற்காலிக தலைவராக, அந்தப் பஞ்சாயத்திற்கு தேர்ந்தெடுக்கப் படவேண்டும். பஞ்சாயத்துத் தலைவரை தேர்ந்தெடுப்பதற்காக, குறிப்பிடப்பட்டுள்ள அந்த தினத்தில் இந்த தற்காலிக தலைவர் முதலில் பதவிப் பிரமாணத்தை எடுத்துக் கொண்டபின், மற்ற அங்கத்தினர்களுக்கு பதவிப் பிரமாணம் செய்து வைக்கவேண்டும், வருகைதந்துள்ள எல்லா அங்கத்தினர்களும் பதவிப் பிரமாணம் செய்துக் கொண்டபின், தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்கான நடவடிக்கைகளை உடனே மேற்கொள்ளவேண்டும்.

(2) பஞ்சாயத்து யூனியன் மன்றத்தைப் பொருத்தவரை, தன் பதவி காரணமாக, அங்கத்தினராகவும், தலைவராகவும் உள்ள ரெவின்யூ கோட்ட அதிகாரி, முதலில் பதவிப் பிரமாணத்தை எடுத்துக் கொண்டபின், தலைவரை தேர்ந்தெடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு முன், வருகை தந்துள்ள மற்ற அங்கத்தினர்களுக்கு பதவிப் பிரமாணம் செய்து வைக்கவேண்டும்.

பிற்சேர்க்கை

.... பஞ்சாயத்தின் / பஞ்சாயத்து யூனியன் மன்றத்தின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள / உறுப்பினராகச் சேர்த்துக்கொள்ளப்பட்ட / உறுப்பினராக உள்ள நான் சட்டபூர்வமாய் நிறுவப்பட்டுள்ள இந்திய அரசியல் அமைப்பில் உண்மையான நம்பிக்கையும், விசுவாசமும் கொண்டிருப்பேன் என்றும், இந்திய நாட்டின் ஆதிபத்தியத்தையும், ஒருமைப்பாட்டையும் நிலை நிறுத்துவேன் என்றும், நான் மேற்கொள்ள இருக்கும் பொறுப்பை நேர்மையுடன் நிறைவேற்றுவேன் என்றும் கடவுளறியப் பிரமாணம் செய்கிறேன் / மனப்பூர்வமாய் உறுதி கூறுகிறேன்.

பெயர்.

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 7-12-1964 தேதியிட்ட அரசாங்க அறிக்கை எண் 242784.)

"கிராம நலம்" இதழ் பஞ்சாயத்துக்களுக்கு இலவசமாக அளிக்கப்படுவது நிறுத்தப்பட்டு, சந்தா செலுத்துவதற்கான உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது.

Books and Publications—'Grama Nalam'—Free supply to Panchayats—Discontinuance—Procedure for remittance of subscriptions—Instructions—Orders—Issued.

(G.O. Ms. No. 2541 R.D. and L.A., dated 8th December 1964.)

சமுதாய நலத்திட்டங்கள், ஐந்தாண்டு திட்டங்கள் ஆகியவற்றிற்கு அதிக அளவில் விளம்பரம் செய்வதற்காக, ''கிராம நலம்'' என்ற மாதஇதழை அரசாங்கம் பிரசுரித்து வருகிறது. இந்த இதழ் 1959-ம் ஆண்டு முதல் எல்லா பஞ்சாயத்துக்களுக்கும் இலவசமாக அளிக்கப்பட்டு வருகிறது. இப்போது பஞ்சாயத்துக்கள் இந்த இதழின் உபயோகத்தை உணர்ந்துள்ளன. ஆகவே இந்த இதழை, இனிமேலும் இலவசமாக அளிக்கவேண்டிய அவசியம் இல்லை என்று கருதப்படுகிறது. அதற்கேற்ப, ''கிராம நலம்'' இதழ் பஞ்சாயத்துக்களுக்கு இலவசமாக அளிக்கப்படுவது 1965-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ம் தேதி முதல் நிறுத்தப்பட வேண்டுமென்று அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

2. எல்லா பஞ்சாயத்துக்களும் 'கிராம நலம்' இதழுக்கு சந்தா செலுத்தும் என்று அரசாங்கம் எதிர்பார்க்கிறது. இதன் ஆண்டுச் சந்தாவான ரூ. 1·50-ஐ செலுத்துவதற்கு வசதி செய்யும் வகையில், கீழ்க்கண்ட நடை முறைகளை, அரசாங்கம் வரையறுக்கிறது.

(i) ''கிராம நலம்'' இதழுக்கு, தங்கள் சார்பில் சந்தா செலுத்தி, அந்தத் தொகையை சம்பந்தப்பட்ட பஞ்சாயத்துக்களின் கணக்குகளிலிருந்து, கழித்துக் கொள்ளலாம் என்று பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர்களுக்கு, நிலையான விளக்கங்கள் அளிக்க வேண்டும். இந்த தொகையை கழித்துக்கொண்டபிறகு பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர்கள் சம்பந்தப்பட்ட பஞ்சாயத்துக்களுக்கு தகவல் அனுப்பவேண்டும்.

(ii) பஞ்சாயத்துக்களின் கணக்குகளிலிருந்து, இவ்வாறு எடுத்துக் கொள்ளப்பட்ட மொத்த தொகையை, "XLIX Stationery and Printing—Other press receipts—Receipts from Grama Nalam" என்ற கணக்குத் தலைப்பில், துணைக் கருவூலத்தில் செலுத்த வேண்டும். அவ்வாறு செலுத்தியபின், செலானின் ஒரு நகலுடன், அந்த சந்தாவுக்கான பஞ்சாயத்துக் களின் பட்டியலையும் சேர்த்து, ''மானேஜர், 'கிராம நலம்' கிராம நல-தல நிர்வாகத்துறை, செக்ர டேரியட், சென்னை-9'' என்ற விலாசத்துக்கு அனுப்பவேண்டும்.

(iii) செலானும், பஞ்சாயத்துக்களின் பட்டிய லும், பஞ்சாயத்துக்கு அளிக்கப்பட வேண்டிய ''கிராம நலம்'' இதழின் எண்ணிக்கையும் கிடைத்த பிறகு, ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் ஆணை யாளரும், பஞ்சாயத்துக்களின் சார்பாக, ஒரு சந்தா தாரராகச் சேர்த்துக் கொள்ளப்பட்டு, ஒரு சந்தா எண் (சான்றுக. ஜி. என். எஸ்: பஞ்சாயத்து) அளிக்கப்படும்.

(iv) பஞ்சாயத்துக்களுக்கான இதழ்கள் ஒவ் வொரு பஞ்சாயத்து யூனியன் ஆணையாளருக்கும் மொத்தமாக, பதிவுத் தபாலில், எழுது பொருள் அச்சுக்கூட நெறியாளரால் அனுப்பி வைக்கப்படும். அவைகளைப் பெற்றவுடன் பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர்கள் சம்பந்தப்பட்ட பஞ்சாயத்துக் களுக்கு அத்தாட்சிகளை பெற்றுக்கொண்டதின் பேரில், அவைகளை வினியோகிக்க வேண்டும்.

3. 'கிராம நலம்' இதழ் இலவசமாக அளிக்கப் படுவதற்கான காலம் முடிவடைவதற்கு முன் பாகவே பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர்கள், மேற்கண்ட வற்றை பஞ்சாயத்துக்களின் கவனத் திற்கு கொண்டுவரும்படி கேட்டுக் கொள்ளப்படு வதுடன், சந்தாதாரர்கள் பட்டியலில் பஞ்சாயத்துக் களின் பெயர்களை சேர்த்துக் கொள்ளப்பட, அவை களிடமிருந்து அத்தாட்சிகளை பெறும்படியும் கோரப் படுகிறார்கள்.

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 8—12—64 தேதியிட்ட அரசாங்க ஆணை 2541-ன் சுருக்கம்.)

மதுரை மாவட்டம், பெரியகுளம் தாலுகாவிலுள்ள கூடலூர் பஞ்சாயத்து 31—12—1964 வரை கலைக்கப்படுகிறது.

Panchayat—Gudalur—Periyakulam Taluk— Madurai District—Maladministration—Dissolution up to 31—12—1964—Ordered.

(G.O. Ms. No. 2401., R.D., and L.A., dated 17th November 1964.)

மதுரை மாவட்டம் கூடலூர் பஞ்சாயத்து, திருப்திகரமாகவும், திறமையாகவும் நடைபெற விலலை என்பதும், மேலும் அந்த பஞ்சாயத்து தலைவர் மற்றும் அதன் அங்கத்தினர் ஆகியவர் களால் இழைக்கப்பட்ட ஒழுங்கற்ற செயல் களால் அதன் நிர்வாகம் பாதிக்கப்பட்டுள்ளது என்பதும் அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

(2) இந்த பஞ்சாயத்து, சட்டபூர்வமாக அது செய்யவேண்டிய கடமைகளை தொடர்ந்து புறக் கணித்து வருவதாகவும், அதனுடைய அதிகாரங் களை அது மிகுதியாகவும், கெடுதியாகவும் பயன் படுத்தி வருவதாகவும் அரசாங்கம் கருதியது. ஆகவே அரசாங்கம், இந்தப் பஞ்சாயத்தை 1-6-1964 முதல் ஓராண்டு காலத்திற்கு கலைத்து விட்டு, பிறகு 1-6-1965 முதல் மீண்டும் அமைக் கலாம் என்று தீர்மானம் செய்தது. மேற்கண்ட தீர்மானம் செயல்படுத்தப்படுவதற்கு எதிராக, த ந்த காரணங்கள் காண்பிக்கும்படி கூடலூர் பஞ்சாயத்திற்கு, தமிழ்நாடு பஞ்சாயத்து சட்டம் 1958-ன் (1958-ம் ஆண்டின் தமிழ்நாடு சட்டம் 35) பிரிவு 154 (2)-ன், கீழ் ஒரு உத்தரவு அனுப் பப்பட்டது.

(3) கூடலூர் பஞ்சாயத்து அதனுடைய 22-4-1964 தேதியிட்ட தீர்மானம் 67-ல், மேற் கண்ட உத்தரவில் கண்டுள்ள எல்லா குற்றங் களுக்கும் பதில் அளித்தது; அதில் அந்த பஞ்சாயத்து தன்னுடைய கடமைகளை எவ்விதத்திலும் தொடர்ந்து புறக்கணிக்கவில்லை என்றும், ஆனால் அதற்கு மாறாக அதனால் முடியும் வரை சட்டத்தின் ஒவ்வொரு எழுத்துக்கும், இலட்சியத்திற்கும் ஏற்ப அது செயலாற்றியது என்றும் மேலும் அந்தப் பஞ்சாயத்தின் நிர்வாக அதிகாரிதான், அங் கத்தினர்களை சரியான வழியில் செல்லவிடாது, அவர்களை குழப்பத்துக்கு ஆளாக்கி, சரியானபடி காரியங்களை செய்யவிடாமலும் நேரடியாகவும் மறைமுகமாகவும் அங்கத்தினர்களை தவறுகள் புரியுமாறு கட்டாயப்படுத்தினார் என்றும் கூறி யுள்ளது. ஆகவே, பஞ்சாயத்தை கலைக்க வேண் டாம் என்றும் அரசாங்கத்தை அது கேட்டுக் கொண்டுள்ளது. அரசாங்கம் அந்தப் பஞ்சாயத் தின் மேல் உள்ள குற்றங்களுக்கு அது அளித்த பதில்களை கவனமாக பரிசிலனை செய்தது. ஆனால் அந்தப் பஞ்சாயத்து, அதன்மேல் உள்ள குற்றங் களுக்கு அது திருப்திகரமான முறையில் பதில் அளிக்கவில்லை. ஆகவே இந்தப் பஞ்சாயத்து கலைக் கப்பட்டுவிடவேண்டும் என்ற முடிவிற்கு அர சாங்கம் வந்துவிட்டது. அதன் பேரில் இந்த கூடலூர் பஞ்சாயத்து 20-11-1964-முதல் கலைக்கப் பட்டு, மீண்டும் 1-1-1965 முதல் அமைக்கப் படவேண்டும் என்று அரசாங்கம் ஆணை பிறப் பிக்கிறது. இவ்வாணையின் பிற்சேர்க்கையிலுள்ள அறிவிப்பு, செயிண்ட் ஜார்ஜ் கோட்டை அர சிதழில் பிரசுரிக்கப்படும்.

(இவ்வாணையின் பிற்சேர்க்கையில் கூடலூர் பஞ்சா யத்தின் நிர்வாக ஒழுங்கீனங்கள் கொடுக்கப்பட் டுள்ளன; அவைகள் செயிண்ட் ஜார்ஜ் கோட்டை அரசிதழில் பிரசுரமாகும். அவற்றில் இவைகளைக் காண்க.)

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1964-ம் ஆண்டு நவம்பர் மாதம் 17-ந் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 2401-ன் சுருக்கம்.)

பர்மாவிலிருந்து தாய்நாட்டிற்கு அனுப்பப்பட்டுள்ளவர்களை ஆசிரியர்களாக நியமித்தல்.

Education—Indian Repatriates from Burma—Appointment as teachers in this state—Orders passed.

(G. O. Ms. No. 1674, Education, dated 13th October 1964.)

பர்மாவிலிருந்து தாய் நாட்டிற்கு அனுப்பப்பட்டுள்ளவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் வகைகளில்ஒன்ருக, அரசாங்கம் கீழ்க்கண்ட உத்தரவுகளைப் பிறப்பிக்கிறது. மாநிலத்தில் தமிழ் அல்லதுதெலுங்கு அல்லது உருது போன்ற மொழிகள் வாயிலாக கல்வி புகட்டும் பள்ளிகளில், கல்வி பயிலுவிக்கக் கூடிய முறையில் தகுதி பெற்று, பர்மாவிலிருந்து தாய் நாட்டிற்கு அனுப்பப்பட்டவர்களை, பஞ்சாயத்து யூனியன், முனிசிபல் கௌன்சில், சென்னை மாநகராட்சி, டவுன்சிப் கமிட்டிகள் மற்றும் தனிப்பட்டவர்களால் நடத்தப்படும் பள்ளிகளில் ஆசிரியர்களாக நியமிக்கப்படவேண்டும். மேற்கண்டவர்களால் நடத்தப்படும் பள்ளிகளில், ஆசிரியர்களை நியமிக்கும் விஷயத்தில் வயது வரம்பு நிர்ணயிக்கப்படாதிருப்பதால், இவர்களை நியமிப்பதில் நிர்வாகிகளுக்கு எவ்வித கஷ்டங்களும் இருக்காது.

2. தாய்நாட்டிற்கு அனுப்பப்பட்டுள்ளவர்களை அதிக அளவில் ஆசிரியர்களாக நியமிக்க, பர்மாவில் ஓராண்டு பயிற்சிக்குப்பின் இவர்கள் பெற்றுள்ள பர்மா ஆசிரியர்கள் நற்சான்றிதழ் (Burma Teachers Certificate) தமிழ் நாட்டில் இரண்டு ஆண்டுகள் நன்சான்றிதழ்களுக்கு சரிப்படுத்திக் கொள்ள வேண்டும். அதாவது பர்மா A கிளாஸ் நற்சான்றிதழ்கள். இம்மாநிலத்தின் உயர்நிலைத் தர ஆசிரியர்கள் நற்சான்றிதழ் (Higher Grade Teachers Certificate) களுக்கும், பர்மா இடைநிலைதர நன்சான்றிதழ்கள் (Burma Secondary Grade Certificate), இம்மாநிலத்தின் இடைநிலை ஆசிரியர்கள் நற்சான்றிதழ் (Secondary Teachers Certificate) களுக்கும் சமமானதாக எடுத்துக் கொள்ளப்படவேண்டும், பர்மாவில் பணிபுரிந்துள்ள கடந்தகால சேவைக்கு எவ்வித அனுகூலங்களும் கொடுக்கக் கூடாது.

3. இந்தச் சலுகைகள் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித்தலைவர்களால் உறுதி செய்யப்பட்டு, பர்மாவிலிருந்து தாய்நாட்டிற்கு அனுப்பப்பட்ட உண்மையான தகுதி வாய்ந்த ஆசிரியர்களுக்கே பொருந்தும். ஆனல் பர்மா நன்றிதழ்களைப்பெற்று, தாய்நாட்டுக்கு அனுப்பப்படாதவர்களுக்கு இது பொருந்தாது.

(கல்வி, பொதுச் சுகாதாரத் துறையின் 1964-ம் ஆணடு அக்டோபர் மாதம் 13-ந் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 1674.)

மதிய உணவுத் திட்டத்திலுள்ள சில கட்டுப்பாடுகள் தளர்த்தப்படுகின்றன.

Subsidy—Education—Elementary Education—Scheme for the supply of midday meals to poor pupils in Elementary Schools—Contributions by panchayats—Relaxation of certain restrictions—Regarding.

(Memorandum No. 182484-A, R.D. and L.A., dated 7th November 1964).

மதிய உணவுத் திட்டத்திற்காக, பஞ்சாயத்து நிதியிலிருந்து நான்கு பைசாக்கள் அளிப்பதைக் குறித்து, நகரப் பஞ்சாயத்துக்களின் நிதிக்கணக்குகளை தணிக்கை செய்யும்போது, தல நிதிக்கணக்கு ஆய்வாளர் (Examiner of Local Fund Accounts) கூறியுள்ள மறுப்பு, அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. பஞ்சாயத்துக்கள் தங்கள் நிதியிலிருந்து ஒரு குழந்தைக்கு, ஒரு சாப்பாட்டுக்கு இரண்டு பைசாக்கள் அளிக்கலாம் என்று அரசாங்கம் கல்வித்துறையின் 1962-ம் ஆண்டு ஜனவரி மாதம் 18-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 126-ல் அனுமதியளித்திருப்பதை, தல நிதிக்கணக்கு ஆய்வாளரின் கவனத்திற்கு கொண்டுவரப்படுகிறது. பஞ்சாயத்துக்கள் இரண்டு பைசாக்களுக்கு மேல் அளிக்க விரும்பினல். அந்த அதிகப்படி தொகையை—வீட்டுவரி மற்றும் வீட்டுவரி ஈடு மானியத்திலிருந்து பெறும் தொகையில்லாமல்—வெளியிலிருந்து பெறவேண்டும் என்று கிராம நல-தல நிர்வாகத்துறையின் 1963-ம் ஆண்டு மார்ச் மாதம் 30-ம் தேதியிட்ட அரசாங்க அறிக்கை 253220-ல் மேலும் விளக்கங்கள் வெளியிடப்பட்டுள்ளது. எந்தப் பஞ்சாயத்திலாவது அதிகப்படியாக இரண்டு பைசாக்கள், வீட்டுவரியல்லாது மற்ற வருமானத்திலிருந்து, அளிக்கப்பட்டிருந்தால், அந்த எல்லா மறுப்புக்களையும் தள்ளிவிடுமாறு தல நிதிக்கணக்கு ஆய்வாளர் கேட்டுக்கொள்ளப்படுருர். மேலும் வீட்டுவரியல்லாத மற்ற வருமானத்திலிருந்து, அதிகப்படியாக தொகை அளிக்கப்படாமலிருந்தால், அந்த மறுப்புகளையும், 1964–65 வரை விசேஷமாக தள்ளிவிடுமாறும் அவர் கேட்டுக்கொள்ளப்படுகிருர்.

2. கிராம நல-தல நிர்வாகத்துறையின் 1963-ம் ஆண்டு மார்ச் மாதம் 30-ம் தேதியிட்ட அரசாங்க அறிக்கை 253220-ல் வெளியிடப்பட்டுள்ள விளக்கங்களை தவருது இனி பின்பற்ற வேண்டும் என்று பஞ்சாயத்துத் தலைவர்களை பஞ்சாயத்து யூனியன் மன்றத்தின் அடுத்தக் கூட்டத்தில், கேட்டுக்கொள்ளுமாறு பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர்களுக்கு உத்தரவு இடப்படுகிறது.

(கிராம நல—தல நிர்வாகத்துறையின் 1964-ம் ஆண்டு நவம்பர் மாதம் 7-ம் தேதியிட்ட அரசாங்க அறிக்கை 182484A).

அரசாங்கப் பணியாளர்கள் சங்கங்கள் அமைப்பது பற்றிய விளக்கங்கள்.

Associations—Association by Government Servants—Formation of—Instructions—Issued.

(Circular Memorandum No. 169455, R.D. and L.A., dated 8—12—64.)

வட்டாரங்களில் அலுவல் புரியும் பணியாளர் களில் சிலர், அரசாங்கத்தின் அங்கீகாரத்தைப் பெறுமல், தங்கள் துறைகளைப் பொருத்து, சங்கங் களை அமைத்திருப்பது, இன்னும் சில இடங்களில் இச்சங்கங்களில் சொற்பொழிவாற்ற அரசியல் தலை வர்களை அழைத்திருப்பது ஆகியவை, அரசாங் கத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்படாத சங்கங்களில் அங்கத்தினர்களாயிருப்பது, அவைகளில் சொற் பொழிவாற்ற அரசியல் தலைவர்களை அழைப்பது ஆகியவை, அரசாங்கப் பணியாளர்கள் நடத்தை விதிகள் 16, 18-ஐ மீறிய செயல்களாகும்; இது பற்றி அரசாங்கம் கடுமையான கருத்துக் கொள்ளும். மேற்கண்டவற்றை வட்டார அலுவலர்களின் கவனத்திற்கு கொண்டு வரும்படி, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்.

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 8—12—1964 தேதியிட்ட அரசாங்க சுற்றறிக்கை 169455,)

மாநில சமூக நல போர்டு—புதிதாக இரண்டு அங்கத்தினர்கள் நியமனம்.

State Social Welfare Board, Madras—Number of members increased from 21 to 23—New Members—Appointed.

(G. O. Ms. No. 2492, R.D. and L.A., dated 1st December 1964.)

கிராமநல-தல நிர்வாகத்துறையின் 20-5-1961 தேதியிட்ட அரசாங்க ஆணை 1433-ன் பாரா-7 (3)-க்கு திருத்தமாக, மாநில சமூக நல போர்டு அதன் தலைவரையும் சேர்த்து, 23 அங்கத்தினர் களைப் பெற்றிருக்கும் என்று அரசாங்கம் ஆணை பிறப்பிக்கிறது.

2. மேலும் கீழ்க்கண்ட இரண்டு அதிகாரிகளும் முறையே அங்கத்தினர், அங்கத்தினர்—காரிய தரிசியாக நியமிக்கப்படுகிறார்கள் என்றும் அரசாங் கம் ஆணை பிறப்பிக்கிறது:

(i) பொதுச் சுகாதார இயக்குநர்
—அங்கத்தினர்

(ii) மாதர்நல இலாகா இயக்குநர்
—அங்கத்தினர்—காரியதரிசி.

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1964-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 1-ந் தேதியிட்ட அரசாங்க ஆணை 2492.)

கிராமத் தொழில்கள் திட்டங்களை பஞ்சாயத்து யூனியன்களிடம் ஒப்படைத்திருப்பதைப் பொறுத்து சில விளக்கங்கள்.

Community Development Programme-Village Industries-Programme for development of Village Industries-Entrustment to Panchayat Unions-Certain clarifications-Issued.

(Memorandum No. 122331, R.D. and L.A., dated 22nd October 1964.)

1958-ம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்துச் சட் டத்தின் பிரிவு 66-க்கு இணங்க, கிராமத்தொழில் கள் வளர்ச்சியை, கிராம நல-தல நிர்வாகத்துறை யின் 1962-ம் ஆண்டு மே மாதம் 30-ம் தேதி யிட்ட அரசாங்க ஆணை 1250-ல், அரசாங்கம் பஞ் சாயத்துக்களிடம் ஒப்படைத்தது. மேலும் அதில் ஒரு மாதிரித் திட்டமும் அங்கீகரிக்கப்பட்டு, அதன் பிறகு, சுண்ணும்பு காலவாய், தையல் வேலை மற்றும் பூவேலைகள் பயிற்சி நிலையமும் அதனோடு சேர்க்கப்பட்டன.

2. செங்கல் செய்யும் பிரிவும் பஞ்சாயத்துக் களால் ஆரம்பிக்கப்பட வேண்டியிருப்பதால், பஞ்சாயத்துக்களுக்கு கடன்களை அளிப்பதற்கு தேவையான கணக்கு முறைகளை வரையறுக்கலாம் என்று மதுரை (கிழக்கு) பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

3. அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ள இந்த ஒன்பது திட்டங்களில், செங்கல் செய்தல், சுண்ணும்புக்காலவாய் ஆகிய இரண்டு திட்டங்களில்

மட்டும் பஞ்சாயத்துக்கள் நேரடியாக சிரத்தை எடுத்துக்கொண்டு, அவைகளை ஆரம்பித்து நடத்தலாம். இருந்தபோதிலும், இந்த திட்டங்கள் வெற்றிகரமாக செயல்பட பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர் மற்றும் தொழில் வளர்ச்சி அதிகாரி போன்றவர்களின் நெருங்கிய மேற்பார்வையும் அன்றுட கட்டுப்பாடும் தேவையாயுள்ளன. ஆகவே, பஞ்சாயத்துக்களுக்கு நேரடியாகவே உதவிகள் அளிப்பது, நிர்வாகத்தைப் பொறுத்தவரை வசதியற்றதாக இருக்கும் என்று அரசாங்கம் கருதுகிறது. திட்டங்களைப் பொருத்தவரை செலவினங்களுக்கான கணக்குகளுக்கு பஞ்சாயத்துக்களை விட பஞ்சாயத்து யூனியன் மன்றங்களையே பகுதிகளாக கொள்ளவேண்டும் என்று மேலும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. ஆகவே பஞ்சாயத்துக்கள் தனிப்பட்ட முறையில் திட்டங்களை நடத்த, அதற்குத் தேவையான நடைமுறை முதலீட்டுக் கடன்களை, அரசாங்கம் அல்லது கதர் கிராமக் கைத்தொழில் போர்டு மூலம் பஞ்சாயத்துக்களுக்கு நேரடியாக அளிக்க தேவையில்லை என்று அரசாங்கம் கருதுகிறது. இருந்தபோதிலும் திட்டங்களை நேரடியாக எடுத்து நடத்த ஆவலுள்ள பஞ்சாயத்துக்கள், நடைமுறை முதலீட்டு கடன்களுக்காக பஞ்சாயத்து யூனியன்களுக்கு எழுதவேண்டும் என்றும் அவைகள் எல்லாவற்றையும் சேர்த்து, மாநில கதர், கிராமக் கைத்தொழில் போர்டுக்கு அனுப்பி, போர்டினிடமிருந்து கடன் தேவைகளைப் பெற்று அவைகளை பஞ்சாயத்துகளுக்கு அனுப்பலாம் என்ற கருத்தை அரசாங்கம் ஏற்றுக்கொள்கிறது.

4. மேற்கண்ட விஷயத்தில், பஞ்சாயத்து யூனியன்கள் கடைபிடிக்கவேண்டிய கணக்கு நடைமுறைகளைப்பற்றியும், பஞ்சாயத்து யூனியன்களால், பஞ்சாயத்துகளுக்கு இக்கடன்கள் அளிக்கப்பட வேண்டியதைப் பொருத்து அதன் வரம்புகளும், விதிகளும் கடன்களை திருப்பி அளிக்க வேண்டியதைப் பொருத்து விதிகளும், கிராம நல-தல நிர்வாகத் துறையின் கணக்குப் பிரிவால் தனியாக உத்தரவுகள் பிறப்பிக்கப்படும்.

(கிராம நல-தல நிர்வாகத்துறையின் 1961-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 22-ந் தேதியிட்ட அரசாங்க அறிக்கை 12233 1.)

பஞ்சாயத்து யூனியன் தலைவர்களின் தனி எழுத்தர்களுக்கு (Personal clerks) பயணப்படி அளிப்பது பற்றிய உத்தரவு.

Establishment—Panchayat Union— Personal clerk to chairman-Drawal of travelling allowance for journeys made on offlcial business from the chairman's residence to the Panchayat Union Office—Orders—passed.

(G. O. Ms. No. 2274, R. D. and L. A., dated 30th October 1964)

பஞ்சாயத்து யூனியன் மன்றத்தின் தலைவருக்கு தனி எழுத்தராகப் பணிபுரிய ஒரு கீழ்நிலை எழுத்தரை வேலையில் நியமனம் செய்துகொள்ள கிராம நல—தல நிர்வாகத் துறையின் 1961-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 8-ந் தேதியிட்ட அரசாங்க ஆணை 3223-ல் அரசாங்கம் அனுமதி தந்துள்ளது. இந்த தனி எழுத்தர்களின் தலைமையிடம், பஞ்சாயத்து யூனியன் மன்ற தலைவரின் இருப்பிடத்தில்தான் இருக்கவேண்டும் என்றும் கிராம நல—தல நிர்வாகத் துறையின் 1963-ம் ஆண்டு மே மாதம் 25-ந் தேதியிட்ட அரசாங்க ஆணை 1166-ல் அரசாங்கம் நிர்ணயம் செய்துள்ளது.

2. இந்த தனி எழுத்தர்களை பஞ்சாயத்து யூனியன் மன்ற தலைவர்களின் இருப்பிடத்திலிருந்து தூரத்திலுள்ள பஞ்சாயத்து யூனியன் அலுவலகத்திற்கு அனுப்பவேண்டியுள்ளதென்றும் பஞ்சாயத்து யூனியன் அலுவலகத்தின் தலைமையிடத்திலல்லாது வேறு இடத்தில் வசிக்கும் பஞ்சாயத்து யூனியன் தலைவரின் தலைமையிடத்திலிருந்து, அரசாங்க அலுவல் காரணமாக பஞ்சாயத்து யூனியன் அலுவலகத்திற்கு செல்லும் இந்த தனி எழுத்தர்களுக்கு, நிர்வாகத்தின் முக்கியத்தை முன்னிட்டு தமிழ்நாடு பயணப்படி விதிகளின்கீழ் பயணப்படி அளிக்கலாம் என்றும் அரசாங்கத்திடம் முறையிடப்பட்டுள்ளது.

3. அரசாங்கம் இதை பரிசீலனை செய்து, இவ்வாறுன பயணங்களுக்கு பயணப்படியோ, அல்லது நிர்ணயிக்கப்பட்ட பயணப்படியோ அளிக்கத் தேவையில்லை என்று கருதுகிறது. இருந்தபோதிலும், பஞ்சாயத்து யூனியன் அலுவலகத்தின் தலைமையிடத்திலல்லாது வேறு இடத்தில் வசிக்கும் பஞ்சாயத்து யூனியன் தலைவரின் இருப்பிடத்திலிருந்து, பஞ்சாயத்து யூனியன் அலுவலகத்திற்கு அரசாங்க காரியமாக செல்லும் இந்த தனி எழுத்தர்கள் தங்களுக்கு ஏற்படக்கூடிய சரியான பஸ் கட்டணம், போக்குவரத்து கட்டணங்களை பஞ்சாயத்து நிதியிலிருந்து பெற அனுமதியளித்து அரசாங்கம் ஆணை பிறப்பிக்கிறது.

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1964-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 30-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 2274).

பஞ்சாயத்து யூனியன் தலநிதி இருப்புக் கணக்கு—கருவூல பட்டியல்கள் புத்தகத்தில் உண்டியல்களைச் சேர்த்தல் பற்றிய விளக்கங்கள்.

Local Fund Deposit Accounts of Panchayat Unions—Inclusion of Cheques in the Treasury Bills Book—M. T. C. Form No. 70—Clarification—Issued.

(Memorandum No. 247345, R.D. and L.A., dated 18th November 1964)

ஒரு பஞ்சாயத்து யூனியன் ஆணையாளரால், கையொப்பமிடப்பட்ட தலநிதி உண்டியல் (Cheque) ஒன்று, கருவூல பட்டியல்கள் புத்தகத்தில் (Treasury Bills Book—M. T. C. Form No. 70) பதிவு செய்யப்படவில்லை என்ற காரணத்திற்காக, ஒரு துணைக்கருவூல அதிகாரியால் திருப்பிவிடப்பட்ட விஷயம் அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

2. கருவூல விதிகளின்கீழ் (Instruction 33 under T. R. 16 of M. T. C., Volume *1)* கருவூலங்களுக்கு அனுப்பப்படுகிற பட்டியல்கள் *(Bills)* கருவூல பட்டியல்கள் புத்தகத்தில் பதிவு செய்யப்படவேண்டியது, தலநிதி உண்டியல்களுக்கும் பொருந்துமா என்பதை தலநிதி கணக்கு ஆய்வாளருடனும், கருவூல, கணக்குகள் இயக்குநருடனும் அரசாங்கம் பரிசிலனை செய்தது. அதன் பேரில் கீழ்க்கண்ட விளக்கங்கள் பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர்கள் மற்றும் துணைக்கருவூல அதிகாரிகள் ஆகியோரின் வசதிக்காக வெளியிடப்படுகின்றன.

3. தமிழ்நாடு கருவூல நியதி, தொகுப்பு 1-ன் (Madras Treasury Code, Volume-I) கருவூல விதிகள் 16-ன் கீழ், 33-வது விளக்கம், பட்டியல்களைத்தான் குறிப்பிடுகிறதே தவிர, உண்டியல்களை அல்ல. அரசாங்கத் துறைகளைப் பொருத்தவரையில், பட்டியல்களே கருவூலங்களுக்கு அனுப்பப்பட்டு, பணமாக மாற்றப்படுகிறது. ஆனால் பஞ்சாயத்து யூனியன்கள், அல்லது மற்ற தலத் துறையினர், தங்கள் நிதியிலிருந்து பணம் பட்டுவாடா செய்வதற்கு தங்கள் நிதி இருப்பு உள்ள கருவூலங்களுக்கு உண்டியல்களை அனுப்ப வேண்டியுள்ளது. கருவூலங்கள் பாங்குகள் போலவும், இத்தலத்துறைகளின் நிதிகள், இக்கருவூலங்களில் 'இருப்புகள்' (Deposits) போலவும் மட்டுமே ஆகின்றன. இந்த 'இருப்புக்கணக்குகள்' பேரில் வரையப்படும் உண்டியல்கள் மூன்றும் பேர்களுக்காகவும் இருக்கலாம்; அல்லது பஞ்சாயத்து யூனியன்களுக்கு பணம் தேவைப்படாமல், தகுந்த பதிவுகள் அந்த உண்டியல்கள்மேல் செய்யப்பட்டு மற்ற கணக்குகளுக்கு சரி செய்யப்படுவதற்காகவும் உண்டியல்கள் தன் பெயரிலேயும் (Self—Cheque) அனுப்பப்படலாம். அதுபோலவே, பணம் பெறுவதற்காக, தன் பெயரிலேயே எழுதப்பட்ட உண்டியல்களுக்கு பணம் அளிப்பதில் எந்த முன் எச்சரிக்கையும் தேவை இல்லை; காரணம் கருவூலங்களில் பட்டியல்களைச் சோதித்து, உண்டியல்களை அளிப்பதிலுள்ள தாமதம் அதில் இருக்காது. மேலும் தல நிதி உண்டியல் புத்தகங்கள் தலநிதி கணக்கு நிர்வாகிகளின் சொந்தப் பாதுகாப்பில் இருப்பதால், எம்.டி.சி. எண். 70-ல் பதிவுசெய்து விடுவதால் மட்டும், தகுந்தவர்களல்லாமல், மற்றவர்களால் பட்டியல்கள் அங்கீகாரம் செய்யப்படுவதற்கும், கூடுதலாக வேபணம் பெற்று விடுவதற்கும், எதிராக சோதனை செய்து விடமுடியாது. ஆகவே, தல நிதி இருப்புக் கணக்குகளின்பேரில் உண்டியல்கள் எழுதப்படுவதை, தமிழ்நாடு கருவூல நியதி தொகுப்பு 1-ன், கருவூல விதிகள் 16-ன் கீழ் 33-வது விளக்கத்தின்கீழ் கொண்டுவருவதற்கு தகுந்த ஆதாரம் இல்லை. கணக்காய்வுத்தலைவரும் (Accountant-General) இந்தக் கருத்தை ஏற்றுக் கொள்கிறார். தல நிதி இருப்புக் கணக்குகள், தமிழ்நாடு கருவூல நியதி தொகுப்பு 1-ன் அத்தியாயம் 4-ல் கண்டுள்ள விளக்கங்கள்படி (பணத்தின் பாதுகாப்பு, அவைகளை சரிபார்த்தல் ஆகியவற்றை பொருத்து, இயங்குகின்றன. ஆகவே, தமிழ்நாடு கருவூல நியதிகள், தொகுப்பு I-ல் கருவூல விதிகள் 16-ன் கீழ், 33-வது விளக்கத்தில் உள்ள "எல்லா பட்டியல்கள்" என்பது, தலநிதி கணக்கு நிர்வாகிகளால் அளிக்கப்படும் உண்டியல்களுக்கு பொருந்தாதாகையால், தல நிதியின் நிர்வாகிகளால் அளிக்கப்படும் உண்டியல்கள் கருவூல பட்டியல்கள் புத்தகத்தில் (எம், டி. சி. எண் 70) பதிவு செய்யத் தேவை இல்லை என்று அரசாங்கம் ஆணைப் பிறப்பிக்கிறது.

(கிராமநல-தல நிர்வாகத் துறையின் 1964-ம் ஆண்டு நவம்பர் மாதம் 18-ம் தேதியிட்ட அரசாங்க அறிக்கை 247345-ன் சுருக்கம்.)

பஞ்சாயத்துத் தேர்தல்கள்—அரசாங்க உதவி பெறும் ஆரம்பப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள், தேர்தலில் போட்டியிடும் தகுதி பற்றி விளக்கம்.

Elections—Ordinary—Panchayats—Aided Elementary School Teachers—Qualification to stand for election—Position—Explaine .

(Memorandum No. 14988, R. D. and L. A., dated 23rd January 1965)

அரசாங்க உதவி பெறும் ஆரம்பப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள், பஞ்சாயத்துத் தேர்தல்களில் போட்டியிடலாமா என்ற கேள்வி எழுந்துள்ளது. இது குறித்து, ஆரம்பப்பள்ளிகள் பற்றிய விதிகளின் அத்தியாயம் II, பகுதி II-ல் உள்ள விதி 25-யை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கவனிக்க கோரப்படுகின்றனர். அதன்படி, அரசாங்க உதவி பெறும் ஆரம்பப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள், பஞ்சாயத்துத் தேர்தல்களில் போட்டியிடுவதற்குத் தடை உண்டு. இந்த விஷயத்தை நடைபெறப்போகும் பஞ்சாயத்து தேர்தல்களுக்காக நியமிக்கப்பட்டுள்ள எல்லா ''ரிட்டர்னிங் ஆபீசர்கள்'' (Returning Officers) கவனத்திற்கும் கொண்டுவரும்படி மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

(கிராம நல-தல நிர்வாகத்துறையின் 23-1-65 தேதியிட்ட அரசாங்க அறிக்கை 14988-ன் சுருக்கம்.)

பஞ்சாயத்து அபிவிருத்தி ஆலோசனைக் குழுவில் கூட்டு அபிவிருத்திக் கமிஷனர் அங்கத்தினர்—காரியதரிசியாக நியமனம்.

Panchayat Development Committees—Panchayat Development Consultative Committees—Member—Secretary—Joint Development Commissioner—Appointed.

(G.O. Ms. No. 2506, R.D. and L.A., dated 2nd December 1964.)

கிராம அபிவிருத்திக் கமிஷனரின் பதவி எடுக்கப்பட்டு, அந்த இடத்தில் கூட்டு அபிவிருத்திக் கமிஷனர் என்ற பதவி ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆகவே, கிராம-நல தல நிர்வாகத் துறையின் 31-8-1962 தேதியிட்ட அரசாங்க ஆணை 797-ல் ஏற்படுத்தப்பட்ட மூன்று பஞ்சாயத்து அபிவிருத்தி ஆலோசனைக் குழுக்களிலும், கூட்டு அபிவிருத்திக் கமிஷனர், அங்கத்தினர்-காரியதரிசியாக பணியாற்றுவார்.

(கிராம நல தல நிர்வாகத் துறையின் 2—12—1964 தேதியிட்ட அரசாங்க ஆணை 2506).

உற்பத்தித் திட்டங்களுக்கான பஞ்சாயத்து அபிவிருத்தி ஆலோசனைக் குழுவில் மாவட்ட ஆட்சித் தலைவர்களை அங்கத்தினர்களாக நியமித்தல்.

panchayat Development Committees—Panchayat Development Consultative Committee on Production Programmes—Appointment of Collectors as members of the Panchayat Development Consultative Committee on Production Programmes— Orders issued.

(G.O. Ms. No. 2499, R.D. and L.A., dated 1st December 1964.)

மாநில அளவில் பஞ்சாயத்து அபிவிருத்தி பற்றி அரசாங்கத்திற்கு ஆலோசனை கூறுவதற்காக. கீழ்க் கண்ட மூன்று பஞ்சாயத்து அபிவிருத்தி ஆலோசனைக் குழுக்களை அரசாங்கம் ஏற்படுத்தியது.

(1) நிர்வாகம் மற்றும் வேலைகளுக்கான பஞ்சாயத்து அபிவிருத்தி ஆலோசனைக் குழு,

(2) உற்பத்தித் திட்டங்களுக்கான பஞ்சாயத்து அபிவிருத்தி ஆலோசனைக் குழு.

(3) நலப்பணி திட்டங்களுக்கான பஞ்சாயத்து அபிவிருத்தி ஆலோசனைக் குழு.

மாவட்ட அபிவிருத்திக் கவுன்சில்களின் பொதுக் குழுக்கள் தலைவர்கள் என்ற முறையில், பன்னிரெண்டு மாவட்ட ஆட்சித் தலைவர்களும் ஏற்கெனவேயே நிர்வாகம் மற்றும் வேலைகளுக்கான பஞ்சாயத்து அபிவிருத்தி ஆலோசனை குழுக்களில் அங்கத்தினர்களாக இருக்கிறார்கள். அதுபோலவே, இம் மாவட்ட ஆட்சித் தலைவர்களும், கோயம்புத்தூர் கூட்டு ஆட்சித்தலைவரும் உற்பத்தி திட்டங்களுக்கான பஞ்சாயத்து அபிவிருத்தி ஆலோசனைக் குழுவில் அங்கத்தினர்களாகப் பணியாற்ற நியமிக்கப்படுகிறார்கள்.

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1964ம்- ஆண்டு டிசம்பர் மாதம் 1-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 2499-ன் சுருக்கம்).

பஞ்சாயத்துக்களின் சாதாரணத் தேர்தல்கள்—தேர்தல் நடத்துவதற்காக மாவட்டங்களை பகுதிகளாகப் பிரித்தல்.

Elections—Ordinary—Panchayats—Conduct of elections—Division of districts into three groups for purposes of holding elections—Programme—Communicated

(G. O. Ms. No. 2616, R.D. and L.A., dated 15th December 1964.)

வரப்போகும் பஞ்சாயத்துக்களின் சாதாரணத் தேர்தல்களை நடத்திவைப்பதற்காக, ஒவ்வொரு மாவட்டமும் வருவாய் கோட்ட அடிப்படையில் மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, அவைகள் இவ் வாணையின் பிற்சேர்க்கை I-ல் கண்டுள்ளவாறு இருக்கும்.

2. நீலகிரி, கன்னியாகுமரி மாவட்டங்களில் உள்ள பஞ்சாயத்துக்களுக்கும், இவ்வாணையின் பிற்சேர்க்கை II-ல் கண்டுள்ளவாறு, மூன்று பிரிவுகளாகத் தேர்தல் நடைபெறும்.

பிற்சேர்க்கை I.

பஞ்சாயத்துத் தேர்தலை நடத்திவைப்பதற்காக, வருவாய் கோட்டங்களின் அமைப்பு.

மாவட்டத்தின் பெயர்.	கோட்டத்தின் பெயர். முதல் பகுதி. (28—1—1965)	இரண்டாம் பகுதி. (30—1—1965)	மூன்றும் பகுதி. (2—2—1965)
(1)	(2)	(3)	(4)
1. வட ஆர்க்காடு	ராணிப்பேட்டை	செய்யார்	திருவண்ணமலை, திருப்பத்தூர்,
2. செங்கல்பட்டு	சைதாப்பேட்டை	செங்கல்பட்டு	திருவள்ளூர். காஞ்சீபுரம்.
3. கோயம்புத்தூர்	கோயம்புத்தூர்	கோபிசெட்டிபாளையம்	ஈரோடு, பொள்ளாச்சி.
4. திருநெல்வேலி	கோயில்பட்டி	திருநெல்வேலி	தூத்துக்குடி, சேரன்மாதேவி.
5. சேலம்	ஹோசூர்	தர்மபுரி	சேலம், சங்கரி, நாமக்கல்.
6. மதுரை	உசிலம்பட்டி	திண்டுக்கல்	மதுரை பெரியகுளம்.
7. திருச்சிராப்பள்ளி	புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி.	அரியலூர், கரூர்.	முசிரி
8. தென் ஆர்க்காடு	திருக்கோயிலூர்	விருத்தாசலம்	சிதம்பரம் திண்டிவனம்.
9. தஞ்சாவூர்	நாகப்பட்டினம் கும்பகோணம்	பட்டுக்கோட்டை, மாயூரம்.	மன்னார்குடி, தஞ்சாவூர்.
10. ராமநாதபுரம்	சிவகாசி	சிவகங்கை	தேவகோட்டை, ராமனதபுரம்,

பிற்சேர்க்கை II.

	முதற் பகுதி.	இரண்டாம் பகுதி.	மூன்றும் பகுதி.
1. கன்னியாகுமரி	விலவங்கோடு தாலுக்காவிலுள்ள பஞ்சாயத்துக்கள்.	கல்குளம் தாலுக்காவிலுள்ள பஞ்சாயத்துக்கள்.	தோவாளை அஹஸ்தீஸ்வரம் தாலுக்காவிலுள்ள பஞ்சாயத்துக்கள்,
2. நீலகிரி	உதகமண்டலம் பஞ்சாயத்து யூனியனிலுள்ள பஞ்சாயத்துக்கள்,	கோத்தகிரி, கூடலூர் பஞ்சாயத்து யூனியனிலுள்ள பஞ்சாயத்துக்கள்.	கூனூர் பஞ்சாயத்து யூனியனிலுள்ள பஞ்சாயத்துக்கள்

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1964-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 15 தேதியிட்ட அரசாங்க ஆணை 2616.)

வெளியிடுபவர் :

திரு என். அனந்தபத்மநாபன், ஐ.ஏ.எஸ்.

ஆசிரியர் :

திரு எஸ். வேங்கடசாமி, எம்.ஏ.

Printed by the Director of Stationery and Printing, Madras on behalf of the Government of Madras. Edited by the Public Relations Officer and published by the Secretary, Rural Development and Local Administration Department, Government of Madras. Wrapper printed at Screen Designs, Madras-2.

↑ தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் 12-வது வருடாந்திர மாநாடு டிச. 5, 6 தேதிகளில் சென்னையில் நடைபெற்றபோது திரு நாரணதுரைக்கண்ணன், திரு ஜே. எம். சோமசுந்தரம், ரஷ்யாவைச் சேர்ந்த திரு ரூடின் ஆகியவர்களுக்கு, அவர்களது தமிழ் இலக்கிய சேவையைப் பாராட்டி, கேடயங்கள் வழங்கப்பட்டன. கேடயங்களை, நீதிபதி திரு அனந்தநாராயணன் வழங்கினார். திரு ரூடினுக்குரிய கேடயத்தை, அவர் சார்பில், சென்னையிலுள்ள ரஷ்யத் தூதரக அதிகாரி திரு பியாக்கோவ் பெற்றுக் கொண்டார்.

← பம்பாயில் நடைபெற்ற கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் மாநாட்டிற்கு வருகை தந்த 'போப்பாண்டவரு'க்கு, தமிழக அரசாங்கத்தின் சார்பில், பிரதம காரியதரிசியின் துணைவியார் திருமதி வர்கீஸ், தமிழ்நாட்டின் பண்பாட்டுச் சின்னங்களாகத் திகழும் கைவினைப் பொருள்களை, காணிக்கையாக அளிக்கிறார்.

சென்னை தேனாம்பேட்டையில் அகில இந்திய காதி, சுதேசி, தொழில் பொருட்காட்சியைத் துவக்கிவைத்த அகில இந்திய காங்கிரஸ் தலைவர் திரு காமராஜ், போலீஸ் இலாகா பிரிவில் பழைய, புதிய தொப்பிகளுடன் உள்ள போலீஸ்காரர் பொம்மைகளைப் பார்வையிடுகிறார்.

REGD. NO. M. 7277
© தமிழ்நாடு அரசாங்கம் 1965